மாலிக்காபூர்

செ.திவான்

மாலிக்காபர்

(ஆராய்ச்சி நூல்)

வரலாற்றாசிரியர்

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

சுகைனா பதிப்பகம்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 72–ஆவது நூல்

முதற் பதிப்பு	:	செப்டம்பர், 2008
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை.
அச்சிட்டோர்	:	சிவசக்தி அச்சகம், சிவகாசி.
விலை	:	ரூபாய் அறுபது.
முகப்போவியம்	:	கோரல், பாளையங்கோட்டை.

* * * * * * *

ஆய்ந்த சரித்திரச் சான்றுகள் . . .
ஆய்வின் ஆழமும் நேர்மையும் . . .
முதுபெரும் எழுத்தாளர்
வல்லிக்கண்ணன் அவர்களின் கடிதம்

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் நலம். நீங்கள் கூரியரில் அன்புடன் அனுப்பிய 'விடியல் வெள்ளி' மார்ச் மாத இதழ் நேற்று வந்தது. நன்றி.

'விடியல் வெள்ளி'யில் தொடராக நீங்கள் எழுதி வருகிற 'சுஜாதாவிற்குச் சவால்' கட்டுரையின் எட்டுப் பகுதிகளையும் படித்தேன்.

எழுத்தாளர் சுஜாதா சகலகலா வல்லுநர், அறிவியல் ஞானி, ஆய்வாளர், இலக்கியவாதி, பழந்தமிழ் பயின்றவர், உரையாசிரியர் என்றெல்லாம் காட்டிக் கொள்ள ஆசைப்படுகிறவர். வாசகர்களை வசீகரிக்கக்கூடிய விதத்தில், உண்மைகளையும் அளப்புகளையும், மேலோட்டமான தகவல்களையும் கவர்ச்சிகர நடையில் வாரி வழங்கிக் கொண்டிருப்பவர். **அவர் எழுதுகிற பல்வேறு விஷயங்களிலும் காணப்படுகிற பிழைகள், முரண்பாடுகள், பொருந்தாக் கூற்றுகள், அறிவியலுக்கு சம்பந்தமில்லாத அளப்புகள் முதலியன பற்றி அவ்வப்போது யாராவது கண்டனங்கள் எழுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர் எழுதிய திருக்குறள் உரையில் காணப்படுகிற பெருந் தவறுகள் பற்றி அநேகர் சுட்டிக் காட்டியுள்ளனர். அவைகளை எல்லாம் சுஜாதா பொருட்படுத்துவதில்லை.**

வரலாற்று நிகழ்வுகளில், ஆராய்ச்சி செய்யாமலே, உண்மைக்குப் புறம்பான செய்திகளை சுஜாதா எழுதியிருப்பதை நீங்கள் ஆய்வு ரீதியாக, தகுந்த ஆதார மேற்கோள்களுடன், ஆழமும் கனமும் கொண்ட கட்டுரைகளாக 'விடியல் வெள்ளி'யில் எழுதியிருக்கிறீர்கள். பொதுவாக மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்ற அநேக விஷயங்கள் பொய்யானவை, வரலாற்றுக்கு முரணானவை என்பதை எல்லாம் நீங்கள் பொறுப்புடனும் தெளிவாகவும் எடுத்துச் சொல்கிறீர்கள். ராமானுஜர் டில்லி சென்ற காலத்தில் அங்கு முஸ்லிம் ஆட்சி இருந்ததில்லை; பெருமாள் விக்ரகத்தை இளவரசி வைத்து விளையாடினாள். ராமானுஜர் அதை மீட்டு வந்தார். முஸ்லிம் இளவரசி பின்னாலேயே தேடி வந்து உயிர் நீத்தார். அவள் துலுக்க நாச்சியார் என்று கோயிலில் வணங்கப்படுவது - இவை வரலாற்று ஆதாரமற்ற, கற்பனை ரீதியான, மக்கள் நம்பிக்கைகளே என்பதை விவரித்திருக்கிறீர்கள். 'கோயில் ஒழுகு' பற்றிய உண்மைகள், தமிழ்நாட்டில் முஸ்லிம்கள் படையெடுப்பு பற்றி வரலாறு பூர்வமான தகவல்கள், மாலிக்காபூர், 'அடிமை அரசர்கள்' பற்றிய உண்மைகள் முதலியவற்றை நன்கு ஆய்ந்து சரித்திரச் சான்றுகளோடு நிறுவியிருக்கிறீர்கள். உங்கள் ஆய்வின் ஆழமும் பரப்பும், நேர்மையும், உண்மைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற தாகமும் நேர்மையும் இக்கட்டுரைத் தொடரிலும் நன்கு புலனாகின்றன. வாழ்த்துக்கள்.

சென்னை
11.03.2006

அன்பு
வல்லிக்கண்ணன்

"அச்சமயம் 'கற்றதும் பெற்றதும்' கட்டுரையில் 'கோயில் ஒழுகு' பற்றி அவர் எழுதும்போது அது முஸ்லிம்களைத்தான் குறிப்பிடுகிறது என்று எண்ணிய இருவர், சுஜாதாவுக்கு கடுமையான கடிதம் எழுதினர். சுஜாதா தானாக ஏதும் கூறவில்லை. கோயில் ஒழுகு பற்றி கூறப்பட்டவைகளை அப்படியே எழுதப்போய் சிலர் உணர்ச்சிவசப்பட்டு தூஷணையுடன் எழுத, மனம் நொந்த சுஜாதா இனி இஸ்லாம், முஸ்லிம்கள் பற்றி தாம் ஏதும் எழுதப் போவதில்லை என்பது போல் 'கண்டதும் கேட்டதும்' பகுதியில் குறிப்பிட்டார்"

-என் இனிய நண்பர் சுஜாதா இங்கும் அங்கும்

ஏவி.எம்.ஜாபர்தீன்

(சமநிலைச் சமுதாயம், ஏப்ரல் -2008 பக்-13)

எண்ண அலைகள்

அண்ணல் காந்தியடிகள் 1948 ஜனவரி 30 மாலை 5.12 மணிக்கு டில்லியில் பிர்லா மாளிகையில், பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் செல்லும் வழியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காந்தியார் படுகொலைக்குள்ளாக்கப்பட்டார் என்ற செய்தி வந்தவுடன் அந்த வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரானக் கலவரத்தை உருவாக்க ஒரு கூட்டம் முயன்றது. 'காந்தியைச் சுட்டுக் கொன்றது ஒரு முஸ்லிம்' என்ற வதந்தியை திட்டமிட்டுக் கிளப்பினார்கள். ஒரு சில நிமிடங்களில் இந்த வதந்தி காட்டுத் தீ போல் பரவி விட்டது. பல இடங்களில் முஸ்லிம்கள் மீது தாக்குதலும் தொடங்கிவிட்டது. (விடுதலை ராசேந்திரன், சென்னை, 1982, பக். 129)

லூயி மவுண்ட்பேட்டன்

மாலை நேரப் பயணம் முடித்து அரசு இல்லத்திற்கு வந்தபோதுதான் காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி லூயி மவுண்ட் பேட்டனுக்குத் தெரிந்தது.

சில நிமிடங்களுக்குப் பின் அரசு இல்லத்திலிருந்து புறப்பட்ட மவுண்ட் பேட்டன் தனது பத்திரிக்கைத் துறை உதவியாளர், ஆலன் கேம்ப்பெல் ஜான்சனுடன் பிர்லா மாளிகையை அடைவதற்குள் மைதானத்தில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

வெறிக் கூச்சல்

கூட்டத்தை விலக்கிக் கொண்டு மவுண்ட் பேட்டன் சென்றபோது, வெறித்தனமும் ஆவசேமும் நிரம்பிய முகத்தோடு ஒரு நபர் கூச்சலிட்டார். **'இதைச் செய்தது ஒரு முஸ்லீம்தான்'.**

As they pushed their way through the throng to Gandhi's quarters aman, his face contorted with frenzy and hysteria, shrieked, 'It was a Moslem who did it' (Larry Collins and Dominique Lapierre, Freedom at Midnight, New Delhi, 1976, p. 440).

அந்த மனிதரின் பக்கம் மவுண்ட் பேட்டன் திரும்பினார்.

'முட்டாளே இதைச் செய்தது ஒரு இந்து என்று உனக்குப் புரியவில்லையா?' *அவரால் முடிந்த அளவு உரத்தக் குரலில் மவுண்ட் பேட்டன் கத்தினார்.*

"replied in a flash, "You fool, don't you know it was a Hindu"

(Alan Campbell Johnson, Mission with Mount Batten, London, 1851, p.276).

இதற்குள் காந்தியைச் சுட்டுக் கொன்றது ஒரு முஸ்லீம் என்று வானொலியின் இயக்குநருக்கும் தகவல் தீயவர்களால் தரப்பட்டது. ஆனால் வானொலியின் இயக்குநர் நாடு தழுவிய நிகழ்ச்சியினை இடைநிறுத்தி காந்தியின் படுகொலை பற்றிய செய்தியைச் சொல்வதற்குப் பதிலாக வழக்கம் போல நிகழ்ச்சிகள் தொடரட்டும் என்று உத்திரவிட்டார்.

இந்தியாவில் உள்ள மிக முக்கியமான ராணுவ மற்றும் காவல் துறை முகாம்கள் அவசரகால உஷார் நிலையில் இருக்க உத்திரவுகள் அவசரகால தொலைபேசி மூலம் அளிக்கப்பட்டன.

காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட நேரம் 30.01.1948 மாலை 5.12. அகில இந்திய வானொலி 30.01.1948 மாலை 6 மணிக்கு அந்தச் செய்தியை அறிவிக்கிறது.

"Mahatma Gandhi, the radio announced, 'was assassinated in New Delhi at twenty minutes past five this afternoon. **His assassin was a Hindu.**

'மகாத்மா காந்தி இன்று பிற்பகல் மணி ஐந்து இருபதுக்கு புதுடில்லியில் படுகொலை செய்யப்பட்டார். அவரைப் படுகொலை செய்தது ஒரு இந்து' என்று வானொலி அறிவித்தது.

நாதுராம் வினாயக் கோட்சே

பூனா(Poona)வில் இருந்து வெளிவரும் ஹிந்து ராஷ்டிரா (Hindu Rashtra) பத்திரிகையின் ஆசிரியரும் 37 வயதான நாதுராம் வினாயக் கோட்சே (Nathuram Vinayak Godse) என்பவர்தான் காந்தியடிகளை சுட்டுக் கொன்றவர் என்ற உண்மை வெளியானதால், அப்போது துயரத்தில் ஆழ்ந்திருந்த இந்தியாவில் கூட்டுக் கொலைகள் இறைவன் அருளால் தவிர்க்கப்பட்டன.

சுஜாதாவின் 'கற்றதும் பெற்றதும்'

17.04.2005 புகழ் பெற்ற 'ஆனந்த விகடன்' வார இதழில் பிரசித்தி பெற்ற எழுத்தாளர் சுஜாதா 'கற்றதும் பெற்றதும்' பகுதியில் எழுதுகிறார்.

"யாராவது கோவிந்தா கூட்டத்தின் பாடல்களை உன்னிப்பாகப் படியெடுத்தால், கி.பி. 1323-இல் முகமதியர் படையெடுப்பின்போது 13,000 ஸ்ரீவைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி பற்றி ஏதாவது செய்தி கிடைக்கலாம் அல்லது வெள்ளைக் கோபுரத்தில் ஏறி இரண்டு ஜீயர்களும் அழகிய மணவாளதாசர் என்பவரும் தற்கொலை செய்து கொண்ட செய்தி கூட ஒளிந்திருக்கலாம்" என்று எழுதினார்.

தார்மீகக் கடமை

நாடறிந்த எழுத்தாளர் சுஜாதா, பிரபலமான வார இதழில் சமூக நல்லிணக்கத்தைச் சாய்த்திடும் வகையிலும், மத ஒற்றுமைக்கு மாசு கற்பித்திடும் வழியிலும் வரலாற்று உண்மைகளை சரி வர உணராமல், அபாண்டமாக 'முஸ்லிம் படையெடுப்பு - 13,000 வைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி' என்று எழுதியிருக்கிறாரே. இது மக்களின் மனங்களில் ராக்கெட் வேகத்தில் சென்று அடையக்கூடிய செய்தி ஆயிற்றே. இந்த விஷயத்தில் வரலாற்று உண்மைகளை உலகுக்கு தெரிவிப்பது தார்மீகக் கடமை என்பதனை அப்போது உணர்ந்தேன்.

மாதக்கணக்கில் முயற்சி

எனவே ஏற்கனவே அறிந்திருந்த வைணவ இலக்கியங்களோடு மேலும் வைணவ இலக்கியங்களை மாதக்கணக்கில் தேடி எடுத்துப் படித்தேன்.

சென்னையிலிருந்து வெளிவரும் 'விடியல் வெள்ளி' எனும் மாத இதழில் 'சுஜாதாவிற்குச் சவால்' எனும் தலைப்பில் 2005 ஆகஸ்ட் முதல் வரலாற்று உண்மைகளை விளக்கத் துவங்கினேன். ஜூலை 2006 வரை, அது அந்த இதழில் தொடராக வெளிவந்தது.

மாலிக்காபூர்

வரலாற்று உண்மைகள் கால கதியில் மறைந்து விடலாகாது என்ற உணர்வினால் அதனை 'மாலிக்காபூர்' எனும் தலைப்பில் நூலாகத் தந்துள்ளேன். நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த சிவகாசி சிவசக்தி ஆர்ட்ஸ் சகோதரர் கு. குமரேசன், கணினி வடிவமைத்துத் தந்த நான்சி கணினியகத்தாருக்கும், முகப்போவியம் வடிவமைத்துத் தந்த பாளையங்கோட்டை கோரல் நிறுவனத்திற்கும், நூல் வெளியிட உதவிய புளியங்குடி அண்ணன் ஹாஜி டாக்டர் S.M. அசன் இப்ராஹிம் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத ஒற்றுமையைக் காத்திட, சமூக நல்லிணக்கத்தைப் பேணிட இது துளியேனும் பயன்படுமானால் அதுவே அடியேனுக்குப் போதுமானது ஆகும்.

செ. திவான்,
வள்ளல் வைகோ நூலகம்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
15.09.2008.

மாலிக்காபூர்

1

கணிப்பொறி அறிஞர், நாவலாசிரியர், நாட்டார் ஆய்வில் ஈடுபாடு காட்டியவர். குறுங்கட்டுரையாளர், புதினம், சிறுகதை, என்னும் கணிப்பொறியியலில் ஏராளமான கட்டுரைகளையும் எழுதிக் குவித்துக் கொண்டிருப்பவர்.

செய்தி சொல்லும் செயற்கை கோள், கம்யூட்டரின் கதை, ஆயிரம் கணிப்பொறி வார்த்தைகள், சிலிக்கன் சில்லுப்புரட்சி, கி.பி.2000 க்கும் அப்பால், அறிவியல் -அறிவியல், ஏன்- எதற்கு, எப்படி? போன்ற கதை நாடகமில்லாத விஷயங்களை வாசகர்களுக்கு விளக்கி வெற்றி கண்டவர்.

காசளவில் ஓர் உலகம், கண்ணீரில்லாத யாப்பு, யவனிகா, எப்போதும் பெண், நிலாநிழல், பதவிக்காக, பேசும் பொம்மைகள், விஞ்ஞானச் சிறுகதைகள், தேர்ந்தெடுத்த சிறுகதைகள், சிறுவர் நாவல், ஓலைப்பட்டாசு, இரயில் புன்னகை, கடவுள்களின் பள்ளத்தாக்கு, விவாதங்கள்- விமர்சனங்கள், தமிழ் அன்றும் இன்றும், சுஜாதா பதில்கள், எழுத்தும் வாழ்க்கையும், திரைக்கதை எழுதுவது எப்படி, கணையாழி-யின் கடைசிப் பக்கங்கள், கரையெல்லாம் செண்பகப்பூ, மௌனதாரகை, நிர்வாண நகரம், தலைமைச் செயலகம் என்று பல படைப்புக்களுக்குச் சொந்தக்காரர்.

குமுதத்தில் ஒரு தொடர் எழுத,(ரத்தம் ஒரே நிறம்) பிரச்சினை எழு, பாதியிலே அதை நிறுத்திவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்.

பெங்களூர் பாரத எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் மத்திய ஆய்வு கூடத்தில் தலைமை விஞ்ஞானிப் பொறுப்பில் பணியாற்றியவர்.

அறிவியலை மக்கள் தொடர்புச் சாதனங்களில் பிரபலப்படுத்தியதற்காக மத்திய அரசின் என்.ஸி.எஸ்.டி. பரிசைப் பெற்றவர்.

'குமுதம்' வார இதழின் 1994-1995 கால கட்டத்தின் ஆசிரியர். தமிழக அரசின் கலைமாமணி விருதும் பெற்றவர்.

தொடர்ந்து நாவல் சிறுகதைகளைத் தந்து கொண்டிருப்பவர் சுஜாதா, அவரை ஒருமுறை நெல்லை ஆர்யாஸ் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வாசகன் என்ற முறையில் நேரில் சந்தித்தும் இருக்கிறேன். வழக்கமாக அவரது எழுத்துக்களை கவனித்தும் வருகிறேன்.

ஏமாற்று வித்தை

கம்யூட்டரின் கதை எனும் நூலின் முன்னுரையில் சுஜாதா குறிப்பிடும் வரிகள் இதோ...(1983)

"கம்யூட்டரின் கதை என்பது பொருத்தமான தலைப்பு அல்ல. கதை என்று சொல்லிப் படிக்கத்தூண்டும் மெலிதான ஏமாற்று வித்தையை மன்னித்து விடுங்கள்." *எழுத்துலகில் ஏமாற்றுவித்தை தெரிந்தவர் நீங்கள். உங்கள் வாக்கு மூலமே அதற்கு சான்று.*

ஆயிரம் கணிப்பொறி வார்த்தைகள் தோராயமாக,

டிசம்பர் 1992 இல் வெளியிட்ட **'ஆயிரம் கணிப்பொறி வார்த்தைகள்'** *நூலில் பக்கம் 171 இல் சுஜாதா எழுதும் வாசகங்கள்.*

மொத்தம் சுமார் 600 வார்த்தைகளாவது இருக்கும். ஒவ்வொரு ஆதார வார்த்தையை விளக்கும் போது அதனுடன் கிளை வார்த்தை ஒன்றையும் விளக்க வேண்டி வந்தது. ஏறக்குறைய ஆயிரம் வார்த்தைகள்... இப்படி தோராயமாக எண்களைக் குறிப்பிட்டுச் சொல்வதில் வல்லவர் சுஜாதா.

நைலான் ரதங்கள்

நண்பர் காவ்யா டாக்டர் சு. சண்முகசுந்தரம் தொகுத்து வெளியிட்ட தங்களது கவிதை நூல் 'நைலான் ரதங்கள்'. அதில் கவிதைகளுக்கு முன்னுரை என்னும் தலைப்பில் நீங்கள் எழுதியதில் சில வரிகள்...

அவன் (நண்பன் சீனிவாசன்) என்னை ஊக்குவிக்க மீராவும் மீசையும் குலாம் காதரும் கோகுலாஷ்டமியும் என்றெல்லாம் தலைப்புகள் தருவான். நானும் ஒரு பிற்காலக் கார்மேகம் போல குலாம் காதர் கோகுல அஷ்டமியின் போது சலாம் போட அக்ரகாரம் சென்று...

இப்படித் துவங்கி பென்சிலைக் கடித்து பாழ்பண்ணி... பா... பண்ணி விடுவேன் என்று பாடல்கள் எழுதி பாழ் பண்ணியதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டவர் சுஜாதா.

இரயில் புன்னகை

1984-இல் இரயில் புன்னகை சிறுகதைகளுக்கு நீங்கள் எழுதிய முன்னுரையின் வாசகங்கள் அடியேனது நினைவிற்கு வருகின்றது.

நீங்கள் எழுதிய வரிகள் இதோ..

எழுதுகிறவனுக்குக் கவனம் முக்கியம். எல்லோரும் கவனிக்கிறோம். ஆனால் எல்லாவற்றையும் கவனிப்பதில்லை. யோசித்துப் பார்த்தால் நாம் கவனிக்க விரும்புவதைத் தான் கவனிக்கிறோம். நம் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப.. எப்படி?

காண்கின்ற எல்லாவற்றையும் கவனிக்க எனக்கு சில வருஷங்கள் ஆயின.

கவனித்தது அத்தனையையும் எழுத வேண்டும் என்பதில்லை. **எழுதத் தேர்ந்தெடுக்கப்படும் விஷயத்தில் சில பொது அம்சங்கள் முக்கியமாக மானுடம் வேண்டும்.**

எனக்கு சில வருஷங்கள் எழுதின பிறகு கவனிப்பதற்கு கஷ்டம் ஏதும் ஏற்படவில்லை. ஆனால் எழுதும் போது சொந்த விருப்பு வெறுப்புகளிலிருந்து விடுபடுவதுதான் கஷ்டமாக இருந்தது, இருக்கிறது.

இது இரயில் புன்னகை சிறுகதைகள் நூலில் நான்காம் பதிப்பில் (1999) பக்கங்கள் 3, 4, 5 இல் சுஜாதா எழுதிய ஒப்புதல் வாக்குமூலம்.

உங்கள் எழுத்துக்களில் சொந்த விருப்பு வெறுப்பு உள்ளதை, நீங்களே உள்ளபடியே ஒப்புக் கொண்டிருப்பதற்கு நன்றி.

ஒலைப் பட்டாசு

'ஒலைப் பட்டாசு' சிறுகதைகள் நூலில் (2002) பக்கம் 153-இல் புதிய நீதிக்கதை - 1 - தவளை சொன்ன கதை, அது முடிவது பக்கம் 156-இல் அதில் சொல்லியிருப்பீர்கள்.

'உண்மை சொல்லக்கூட வேளை வர வேண்டும்' *என்று உங்களுக்கு சில உண்மைகளைச் சொல்ல வேண்டிய வேளை இப்போது வந்திருக்கிறது.*

கி.பி.2000க்கும் அப்பால்

1989-இல் கி.பி. 2000-க்கும் அப்பால் என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையின் இறுதியில் 'புரியவில்லையென்றால் எனக்கு எழுதுங்கள்' என்பீர்கள். அதனால்தான் உங்களுக்கு எழுத வேண்டிய நேரம் இப்போது வந்திருக்கின்றது.

புறநானூறு ஓர் எளிய அறிமுகம்

டிசம்பர் 2002-இல் 'புறநானூறு ஓர் எளிய அறிமுகம்' முதல் தொகுதியினை வெளியிட்டீர்கள். எனது நண்பர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் தொ. பரமசிவன்

அந்த நூலுக்கு 09.07.2003 இந்தியா டு டே இதழில் 'அலமாரி' பகுதியில் விமர்சன மதிப்புரை தந்தார்கள். அதில் 'புறநானூற்றின் காலமும் சூழலும் சுஜாதாவால் உள்வாங்கப்படவில்லை, உரையில் பிழைகள் மலிந்திருக்கின்றன" என்று சான்றுகளோடு சுட்டிக் காட்டினார். தொடர்ந்து அதில் அவர் குறிப்பிட்ட செய்திகள் சில இதோ . . .

"ஆத்தி" – அறியாதவர்

"224 பக்கங்களையுடைய அந்த நூல் எழுத்து, சொல், தொடர், பொருள், கருத்து, எனக்குறைவில்லாத அளவு பிழைகளைச் சுமந்து கொண்டிருக்கின்றது.

ஆர் என்பது சோழர்களின் அடையாளப்பூ. இதனை ஆத்தி, என்றும் கூறுவர். மூன்று இடங்களில் ஆத்தியை அத்தி என்று சுஜாதா உரையெழுதியிருக்கிறார். அத்தி தமிழ் மரபுப்படி பூக்காத தாவரம்.

கழி தெரியாதவர்

கழி என்றால் உப்பங்கழி. மண் நீரும் கடல் நீரும் சந்திக்கும் இடம். இக்காலத்தில் காயல் என்பார்கள். இந்த இடத்தில் மலரும்பூ, நெய்தல், **கழியிலே மலர்ந்த நெய்தல், என்பதனைக் கழிவு நீரில் மலர்ந்த நெய் தல் என்று உரை தருகிறார்.**

(பெரிய கழிவு நீரில் மலர்ந்த நெய்தல் மலராலும், இது சுஜாதாவின் வார்த்தைகள் *(புறநானூறு ஓர் எளிய அறிமுகம் ப. 74)*

ஆரியக்கூத்து

உற்றுழி உதவியும், எனத் தொடங்கும் புற நானூறு 183 வது பாடலின் கடைசி அடிகளுக்குச் சுஜாதா தரும் பொருள் கீழ் சாதியைச் சேர்ந்த படித்தவன் மேல் சாதியைச் சேர்ந்தவனுக்குச் சமமாக மதிக்கப்படுவான்.

இதென்ன ஆரியக் கூத்து என்று பேராசிரியப் பெருந்தகை சுஜாதாவைச் சாடுகிறார்.

காலச்சுவடு

சுஜாதாவும் புறநானூறும் கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்- எல்லாப் பிழையும், என்று மே 2004 காலச்சுவடு இதழில் எனது சகோதரர் ச. நவநீத கிருஷ்ணன் ஒரு விமர்சனக் கட்டுரைத் தந்துள்ளார்.

இருவேறு உரைகளா?

அதில் புறநானூறு பாடல் 21-இல் கடிமிளை என்ற சொல்லிற்கு சுஜாதா பாதுகாப்பு அறை என்று பொருள் தந்துள்ளார். புறநானூறு 181 ஆம் பாட்டின் கடிமிளை என்ற சொல்லிற்கு காவற்காடு என்று பொருள் தருகிறார். இது சுஜாதா இரு வேறு உலகத்தில் இருந்து எழுதிய உரையா? என்று கேட்கிறார். சுஜாதாவின் தவறுகளைச் சுட்டிக்காட்டிச் சாடுகிறார்.

ஆ. இரா. வேங்கடாசலபதி

எனது நண்பர் ஆ.இரா. வேங்கடாசலபதி அதே காலச்சுவடு இதழில் சுஜாதாவும் புறநானூறும் பின்னிணைப்பாகச் சில குறிப்புகள் - 'மேலைக் கண் கொண்ட கோணல் பார்வை' எனும் கட்டுரை தந்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிடும் சுஜாதா விஷயங்களில் சில இதோ...

புறநானூற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜார்ஜ் ஹார்ட் என்று சுஜாதா குறிப்பிடுகிறார்.

பிதற்றலாகக் கருத்துரைப்பதே

ஆனால் உண்மையில் அது ஹாங்க்ஹைஃபிட்ஸ் என்ற கவிஞருடன் இணைந்து செய்யப்பட்ட மொழி பெயர்ப்பாகும். **மொழிபெயர்த்தவர் பெயரைச் சொல்வதில் பிழைகள் . . .** என்று சுஜாதாவைச் சாடுகிறார். முத்தாய்ப்பாக அதில் முடிப்பார். சுஜாதா செய்யும் மிகப்பெரும் பிழை சங்க இலக்கியத்தை அதன் அளவிலேயே பார்க்காமல், கால முரணாக இக்கால நோக்கில் பார்த்துப் பிதற்றலாகக் கருத்துரைப்பதே என்று.

தொட்ட இடமெல்லாம் பிழைகள்

பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதியின் வார்த்தைகளிலே, சொல்வதென்றால், கரடிக்குப் பிடித்த இடமெல்லாம் மயிர். சுஜாதா நூலில் தொட்ட இடமெல்லாம் பிழைகள்.

இவ்வாறு பிழைகள் மலிந்த தனது புறநானூறு உரையினை வெளியிட்ட காலத்தில் பேராசிரியப் பெருமக்களிடம் குட்டுப்பட்டவர் சுஜாதா. இப்போது சரித்திரத்தின் சோலையிலே சரடுகளை அவிழ்க்கத் தொடங்கியிருக்கிறார்.

ஆனந்த விகடன்

17.4.2005 ஆனந்த விகடனில் 'கற்றதும் பெற்றதும்' பகுதியில் சுஜாதா சொல்கிறார்.

யாராவது கோவிந்தா கூட்டத்தின் பாடல்களை உன்னிப்பாகப் படியெடுத்தால் கி.பி.1323 இல் **முகமதியர் படையெடுப்பின் போது 13,000 ஸ்ரீவைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி பற்றி ஏதாவது செய்தி கிடைக்கலாம்.** அல்லது வெள்ளைக் கோபுரத்தில் ஏறி இரண்டு ஜீயர்களும் அழகிய மணவாளதாசர் என்பவரும் தற்கொலை செய்து கொண்ட செய்தி கூட ஒளிந்திருக்கலாம்.

என்று சுஜாதா எழுதுகிறார். நடந்ததாகக் கூறப்படும் முஸ்லிம்களின் படையெடுப்புக்களின் போது ஸ்ரீவைஷ்ணவர்கள் கொல்லப்பட்டதையும், அதே காலகட்டத்தில் கோபுரத்தில் ஏறி ஜீயர்களும், தாசரும் தற்கொலை செய்து கொண்டதைப் போல எண்ணுமளவிற்கு எழுத்திலே விஷத்தைக் கக்கியுள்ளார். உண்மை வரலாறு தான் என்ன?

வெள்ளை கோபுரத்திலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்ட ஜீயர்கள், தாசர் வரலாறு தான் என்ன? அவர்கள் ஏன் தற்கொலை செய்து கொண்டார்கள். வரலாற்றின் பக்கங்களுக்குச் செல்வோம்.

தமிழ் மன்னன் கோனேரி ராயன்

வைத்திய நாத காளிங்கராயன் எனும் கோனேரி ராயன் கி.பி.15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொண்டை மண்டலம், சோழ மண்டலம் உள்ளிட்ட தமிழகத்தின் பெரும் பகுதியின் மன்னராக விளங்கியவன். விஜயநகர அரசர்களைப் பேரரசர்களாக ஏற்க மறுத்துத் தனியாட்சி நிறுவியவன்.

வைத்திய நாத காளிங்கராயன்

'ஸ்ரீமன்மகா மண்டலே சுவரன் பட்டுக் கட்டாரி', 'இராயபசவங்கரன் மதியாத மன்னர் மணவாளன்', 'காஞ்சிபுர வரதீசுவரன்', 'கோனேரி தேவ மஹா இராசர்' என்ற விருதுப் பெயர்களோடு வைத்திய நாத காளிங்கராயன் என்ற கோனேரி ராயனின் கல்வெட்டுக்கள் வரலாற்றில் காணப்படுகின்றன.

கோனேரி

திருமலை வேங்கடவனின் (திருப்பதி) திருநாமம் கோனேரி. அப்பெயரைத் தனது சிறப்புப் பெயராகச் சூடிய இம்மன்னவன் திருமலை திருக்கோயிலுக்கும், திருவரங்கப்பதிக்கும் எண்ணிலா நன்கொடைகள் நல்கியவன். இவனை வைணவத்திற்குத் தீங்கிழைத்தவனாக வரலாற்று ஆசிரியர்கள் கருதினர். ஆனால் இவனது வரலாற்றை ஆழமாக ஆராயும் போது இவன் ஒரு நல்ல

வைணவனாகவே காட்சி அளிக்கிறான். இவனது 'வீரத்தை வரதாம்பிகா பரிணய சம்பு', 'அச்சுதராயாபுதயம்', 'பாரிஜாத பஹரணம்' போன்ற வடமொழி, தெலுங்கு நூல்கள் விரிவாகப் பேசுகின்றன.

கி.பி.1496 இல் திருச்சியில் விஜயநகரப் பேரரசின் தளபதி நரச நாயக்கனுடன் நிகழ்த்திய போரில் தோல்வியுற்றான். இவனது ஆட்சி முடிவு எய்தியது. இவனது ஆட்சிக் காலத்தில் திருவரங்கம் கோயிலில் சில குழப்பங்கள் நிகழ்ந்தன.

விஜய நகரப் பேரரசு

சங்கம குலத்தைச் சேர்ந்த முதலாம் ஹரிஹரன் (கி.பி.1336 - 1357) விஜய நகரப் பேரரசைத் தோற்றுவித்தான். பின்னர் முதலாம் புக்கன் (1344 - 1377) இரண்டாம் ஹரிஹரன் (1377-1404) முதலாம் தேவராயர் (1406 - 1422) இரண்டாம் தேவராயர் (1422 - 1446) ஆகியோர் பட்டமேற்றனர். இரண்டாம் தேவராயனுக்குப் பின் மல்லி கார்ஜுனன் 1447 இல் ஆட்சிக்கு வந்தார்.

கபிலேஸ்வர கணபதி

ஒரிசா நாட்டு மன்னன் கபிலேஸ்வர கணபதி விஜயநகரின் மீது படையெடுத்தார். கி.பி.1454 க்குள் கபிலேஸ்வரன் இராஜ மகேந்திரவரத்தையும், கொண்டவீட்டையும் கைப்பற்றிக் கொண்டார்.

ஸ்ரீசைலம் வரையிலுள்ள பகுதிகளை வென்றார். தமிழகப் பகுதிகளாக காஞ்சிபுரத்தையும், திருச்சிராப்பள்ளியையும் கி.பி.1463 இல் வென்றார். தென் தமிழகம் வரை ஒரிசா நாட்டு மன்னன் கபிலேஸ்வர கணபதி வென்றாரேயொழிய, அவரால் நீடித்து இப்பகுதியைத் தன் ஆதிக்கத்திற்குள் வைத்துக்கொள்ள முடியவில்லை.

இதற்குக் காரணம் விஜயநகரப் பேரரசின் கீழ் பல மண்டலேஸ்வரர்கள் அவ்வப்பகுதிகளைத் தன்னாட்சி செய்து வந்ததுதான் அவர்களது வலிமையும், திறமையும் மல்லிகார் ஜுனனை நிலை பெறச் செய்தது.

மண்டலேஸ்வரர்கள்

விஜயநகரப் பேரரசின் கீழ் இருந்த மண்டலேஸ்வரர்களில் சாளுவ திருமலை தேவ மகராயனும் சாளுவ நரசிம்மனும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

விஜயநகரப் பேரரசின் மையப்பகுதி மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சாளுவ நரசிம்மனும், திருச்சி, தஞ்சை,

புதுக்கோட்டைப் பகுதிகளை திருமலை தேவமகாராயனும் தம் ஆதிக்கத்தின் கீழ் திறம்பட வைத்திருந்தனர்.

இரண்டாம் விருபாட்சன்

மல்லிகார்ஜுனன் கிபி.1465 இல் இறந்தார். அவருடைய மகன் குழந்தையாய் இருந்தமையால் பிரதாப தேவராயனுடைய மகன் இரண்டாம் விருபாட்சன் 1465 இல் விஜயநகரப் பேரரசனானார்.

பிரபுட தேவராயன் II

கி.பி.1485 வரை இரண்டாம் விருபாட்சன் ஆட்சி புரிந்தார். அவ் ஆண்டில் அவரது மூத்த மகன் தந்தையைக் கொன்றார். தான் அரியணை ஏறாமல், தன் தம்பி 'படியராவ்' என்ற பிரபுட தேவராயன் II என்பவருக்கு முடிசூட்டி விஜய நகரப் பேரரசராக்கினார். பிரபுட தேவராயன் அரியணை ஏறியதும் தனக்கு முடி சூட்டி வைத்த தனது தமையனைக் கொன்றார். மதுவிலும் மாதர் மயக்கத்திலும் வீழ்ந்தார். தீய ஒழுக்கம், திறமைக் குறைவு விஜயநகரப் பேரரசின் சங்கம குல ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

சாளுவ நரசிம்மன் ஆட்சி

விஜயநகரப் பேரரசைக் காத்திட, சங்கம குலத்தை அழித்து விட்டுத் தானே அரியணை ஏறுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை நன்கு உணர்ந்த மகாமண்டலேசுவரரான சாளுவ நரசிம்மன் தன் தளபதியான நரச நாயக்கனிடம் விஜய நகரின் மீது படை எடுத்துக் கைப்பற்றுமாறு உத்தரவிட்டார். போரில் வெற்றியும் பெற்றார்.

சாளுவ நரசிம்மன்

கி.பி.1486 இல் நரசநாயக்கனின் துணையுடன் விஜயநகரப் பேரரசின் சாளுவ குலவம்ச ஆட்சி உதயமாயிற்று. சாளுவ நரசிம்மன் மன்னரானார். பின்னர் கிபி.1491 இல் இறந்தார். இவரது மூத்த மகன் திம்மபூபதி அரசரானார்.

திம்ம பூபன்

நரசநாயக்கனின் துணையுடன் ஆட்சி புரிந்து வந்த திம்ம பூபனை, நரசநாயக்கனுக்குப் போட்டியாகத் திகழ்ந்த தளபதி திம்மராசன் சூழ்ச்சியால் கொன்றார்.

இம்மடி நரசிம்மன்

திம்மபூபனைத் தொடர்ந்து அவனது தம்பி இம்மடி

நரசிம்மன் கி.பி.1491 இல் அரசனானார். ஆனால் அரசியல் அதிகாரம் அனைத்தையும் நரசநாயக்கன் தன்னிடமே வைத்துக் கொண்டார். பெயரளவில் இம்மடி நரசிம்மன் ஆட்சி, உண்மையில் அதிகாரம் செலுத்தியது நரசநாயக்கன்.

சங்கம சாளுவ குலங்கள்

கி.பி. 1486 இல் விஜயநகரப் பேரரசில் சங்கம குலம் அழிந்தது. சாளுவ குலம் உயதமாயிற்று. சங்கம குல மன்னர்களைப் பேரரசராக ஏற்றுக் கொண்டு மண்டலீகராய் பொறுப்பேற்றிருந்த கோனேரிராயன், தனக்குச் சமமான பதவியில் இருந்தவரான நரசநாயக்கனையோ, இம்மடி நரசிம்மனையோ பேரரசராக ஏற்றுக் கொள்ள இயலவில்லை. எனவே கி.பி.1486 லிருந்து 1495 வரை கோனேரிராயன் தனி அரசு கண்டான். இதனால் விஜயநகர அரசுகளும், கோனேரி ராயனுக்கும் பகைமை மூண்டது.

கந்தாடை ராமானுஜதாசர்

கி.பி.1486 இல் விஜய நகரப் பேரரசில் அரசராக முடி சூட்டிக் கொண்டவர் சாளுவ நரசிம்மராயன். அவரது உடன் பிறந்தவர் இராமராஜர்; இவர் ஸ்தல சாத்திரம் படித்து விரக்தியுற்றார். அயோத்திக்கு தீர்த்த யாத்திரை சென்றார். துறவறம் பூண்டார். அயோத்தியிலிருந்து மீண்டும் 'கநகிரி'க்கு வந்தார். தன் தம்பியான விஜய நகரப் பேரரசன் சாளுவ நரசிம்மராயரை கண்டு, தான் 108 வைணவத்திருப்பதிகளுக்கும் அரச முத்திரையோடு செல்ல இராயசாசனமும் நிருபமும் வாங்கிக் கொண்டார்.

கி.பி.1488

சக ஆண்டு 1411 ஆன கி.பி.1489 இல் விஜய நகரப் பேரரசனின் அண்ணனான இராமராஜா எனும் வைணவ அடியார் திருவரங்கம் வந்தார். கந்தாடையண்ணன் திருவடிகளில் வீழ்ந்தார். வணங்கினார், ஏகாங்கி வேஷம் தரித்தார். கந்தாடை இராமானுஜதாசர் என்ற தாஸ்ய நாமம் சூட்டிக் கொண்டார். ஸ்ரீரங்கத்து வைணவ ஏகாங்கிகளுக்குத் தலைவராய்த் திகழ்ந்தார்.

குழப்பம்

சாளுவ குல மன்னனின் அண்ணனான கந்தாடை இராமானுஜதாசர், தன் தம்பியின் எதிரியான கோனேரி ராயனின் நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட சமயப் போர்வையில் முயன்றார். அதுபோல தான் மதியாத மன்னனின் அண்ணனான கந்தாடை இராமானுஜதாசர் சமயப் போர்வையில் தன் நாட்டில் இருந்து கொண்டு, சமய நடவடிக்கைகளில் ஈடுபடுவது கோனேரி ராயனுக்குப் பிடிக்கவில்லை.

கோபுரங்களிலிருந்து விழுந்த நால்வர்

தனது ஆட்சிப் பொறுப்பின் கீழ் இருக்கும் ஸ்ரீரங்கம் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை கோனேரி ரா ஜா தனக்கு வேண்டியவர்களான 'கோட்டை சாமந்தனார்' மற்றும் 'சென்றப்ப நாயக்கர்' ஆகியோருக்குக் குத்தகைக்கு விட்டார்.

புரவரி, காணிக்கைவரி, பட்டு வரி, பரிட்டவரி போன்ற வரிகளை விதித்து ஸ்ரீரங்கம் கோயில் ஸ்ரீபண்டாரத்தில் (கருவூலத்தில்) சேர்த்து வைக்கப்பட்டிருந்த உயர்ந்த திருவாபரணங்களையும், பொற்காசுகளையும் கவர்ந்து சென்றார். இவ்வாறு பல சம்பவங்கள் தொடர்ந்தன. இறுதியில் கந்தாடை இராமானுஜதாசரின் தூண்டுதலின் பேரில் கோனேரி ராயனது செயல்களைக் கண்டித்து **கி.பி.1489 தமிழ் சௌமிய ஆண்டு தை மாதம் ஸ்ரீரங்கம் தெற்குக் கோபுரத்திலிருந்தும், அப்பாவய்யங்கார், பெரியாழ்வார், மற்றும் இரண்டு ஜீயர்களும் கீழே விழுந்து உயிர்த்தியாகம் செய்தனர்.** *திருவரங்கம் திருக்கோயிலில் சிலைகளாக நிற்கும் அப்பாவய்யங்கார், பெரியாழ்வார் மற்றும் ஜீயர்கள் இருவரின் உயிர்த்தியாகத்திற்குப் பிறகு, கந்தாடை இராமானுஜ தாசரின் வேண்டுகோளுக்கிணங்க நரசநாயக்கன் தன் பெரும் படையுடன் வந்து போரிட்டு, கோனேரி ராயனை கி.பி.1496 இல் வென்றார்.*

குடவாயில் பால சுப்பிரமணியன்

திருவரங்கம் சொர்க்கவாசல் கோபுரத்திற்குக் கோனேரி ராயனே, முலாம் பூசிய தங்கக் கதவுகள் அளித்துள்ளார்.

திருவரங்கப் பெருமானுக்கு நாள் தோறும் தன் பெயரால் தயிர் அன்னம் நிவேதனம் செய்யப் பிச்சாண்டார் கோயிலில் நிலமும், அளித்தவர் கோனேரிராயன். **இவர் காலத்தில் நிகழ்ந்த கோபுரத்திலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்ட நிகழ்ச்சிகள் அரசியல் பின்னணியில் நிகழ்ந்த நிகழ்வுகளே அன்றி வைணவ விரோதத்தால் அல்ல என்று குடவாயில் பால சுப்பிரமணியன் தனது தமிழ் மன்னன் கோனேரி ராயன் எனும் 103 பக்கங்களைக் கொண்ட நூலில் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.**

திருப்பரங்குன்றத்தில் கோபுரச் சாவுகள்

மதுரைச் சீமையில் கி.பி.1793 இல் ஸ்ரீ கோபால ராயரவர்கள் திவானாக இருந்த காலத்தில் கர்னல் பேயர்டு 700 படை வீரர்களோடு திருப்பரங்குன்றத்திலே வந்த தங்கினார். படைவீரர்கள் தங்குவதற்கு 40 சத்திரங்கள் ஒதுக்கப்பட்டன.

நோயுற்றிருந்த படை வீரர்களைக் கோயிலுக்குள் தங்க வைக்கத் திட்டமிட்டார் கர்னல் பேயர்டு, இதனை ஊரார் எதிர்த்தனர்.

சுந்தர பட்டர், தெய்வேந்திர பட்டர், குட்டிப்பட்டர், சிதம்பரம் பிள்ளை, விழுப்பாதராயர், ஆறுநிருபாகக்காரர், நாட்டாண்மை முத்துக் கருப்ப பிள்ளை, காவல் ஆறுகரைப் பேர் உள்ளிட்டோர் கூடி வயிராவிமுத்துக் கருப்பன் என்பவருடைய மகன் குட்டியைக் கோபுரத்தில் ஏறிக்கீழே விழச் செய்தனர். அவருக்கு இரத்தக் காணிக்கையாக நிலம் கொடுக்கப்பட்டது.

எல்லப்ப முதலியின் மகன் அண்டராபரண முதலி என்பவர் கோயிலுக்கு விடப்பட்ட நிலத்தில் ஏற்பட்ட முறைகேடுகளைக் களைந்து உரிமைகளை நிறுவுவதற்காக திருப்பரங்குன்றம் கோயில் கோபுரத்திலிருந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டார். (நாகப்பா, நாச்சியப்பன், திருப்பரங்குன்றம் கோயில் வேற்கோட்டம், பக்கங்கள் 105, 250 - 251)

தமிழகத்தில் ஸ்ரீரங்கத்திலும், திருப்பரங்குன்றத்திலும் நடந்த கோபுரத்திலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்ட சாவுகள் அரசியல் காரணங்களுக்காக நிகழ்ந்தவையே தவிர மதக் காரணங்களுக்காக அல்ல என்பது தெளிவாகிறது. அதிலும் முஸ்லிம் ஆட்சியாளர்களால் ஏற்படவில்லை என்பதும் தெள்ளத் தெளிவான சரித்திர உண்மைகள் ஆகும்.

இந்த நிலையில் ஆனந்த விகடன் கட்டுரையில் சுஜாதா 'முகமதியர் படையெடுப்பு - 13000 பேர் கொல்லப்பட்டது. வெள்ளைக் கோபுரத்தில் ஜீயர்கள் - அழகிய மணவாளதாசர் 'தற்கொலை' என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லிச் சென்று சமய நல்லிணக்கத்தை குலைத்திடும் குரோதச் செயலில் இறங்குவது சரிதானா?

13000 வைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி என்கிறார். 13000 பேர் என்ற செய்திக்கு மட்டும் ஒரு சான்றை அவரால் காட்ட முடியுமா? சவால் விட்டுக் கேட்கிறேன்!

ஒருவேளை 'கோயிலொழுகைச்' சொல்லக்கூடும். அதிலே கூட சில இடங்களில் 12000 என்று தான் வருகின்றது. அதுவும் எந்த இடங்களில்? அதன் உண்மையான சரித்திரப் பின்னணிதான் என்ன?

2

கல்வெட்டும் – காலத்தால் அழியாத உண்மையும்

"சுபமஸ்து . . . சௌமிய வருஷம் தை மாசம் நாலாந்தெதி வெள்ளிக்கிழமை நாள் ஸ்ரீரங்கநாத சுவாமிக்கு படித்தனம் ஒன்றும் நடத்தாமல் மிகவும் அன்னியாயம் பண்ணுகையில் குடுக்க மாட்டாதெ (பொறுக்க மாட்டாதெ)யிந்த திருக்கொவிரத்தில் யெரி விழுந்து யெரந்த காலம் யெடுத்த அழகிய மணவாளதாசன் ஸ்ரீ காரியம் அப்பாவய்யங்கார், யிவருக்கு ச்வாமி யெக்காளைகள் திருத்தெர் புறப்பாட்டு முதலான அதிய வரிசைகளையும் பிரசாதித்தருளி பிறம்மமெத சமஸ்காரம் பண்ணிவித்தருளி முழுப்படித்தனம் கொண்டருளினார். இப்படி நடந்து வந்த முழுப் படித்தனத்திர்க்கு விரொதம் பண்ணினவன் ரெங்கத் ரொகியாய் குருத்ரொகியாய் பொகக் கடவன். அனுகூலம் பண்ணினவன் ஸ்ரீலஷ்மி பரிபூர்ண கடாஷ பாத்திரஸ்தனாக யிருக்கக் கடவன்" எனும் கல்வெட்டுச் செய்தி.

ஸ்ரீ ரங்கநாதருக்கு அமுது செய்யுரதுக்கு ஒண்ணும் நடப்பி வைய்யாமல் அன்னியாயம் பண்ணுகிர பொதுயிந்த கொபுரத்தின் மேலெயிருந்து விழுந்து பரமபதத்துக்கு பொனவற் ஸ்ரீ காரியம் அப்பாவய்யங்கார்' என்று தி.நா. சுப்பிரமணியனின் குறிப்புக்களுடனும், விளக்கத்துடனும் 1954-இல் வெளிவந்தது. 'தென்னிந்திய கோயிற்சாசனங்கள்' (South Indian Temple Inscriptions) இரண்டாம் பாகத்தில் 733, 734-வது பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் இக் கல்வெட்டு, ஸ்ரீரங்கம் தெற்கு வாசல் ராயகோபுர வாசல் கீழ்ப்புறம் நாட்டுக் கல்லில் இருக்கிறது.

கி.பி. 1489-இல் வெள்ளைக் கோபுரத்தில் இருந்து அப்பாவய்யங்கார், பெரியாழ்வார் மற்றும் இரண்டு ஜீயர்களும் விழுந்து உயிர்த் தியாகம் செய்தது பற்றிய கல்வெட்டுச் சான்று இது.

முன்பு 'மொட்டைக் கோபுரம்' என்று அழைக்கப்பெற்று தற்போது நெடிதுயர்ந்த இராசகோபுரம் எழுப்பப் பெற்றுள்ள தெற்கு கோபுர வாயிலின் கிழக்கு நிலைக்காலில் உள்ள அடியவர் ஒருவரது உருவச் சிலைக்கு மேலாக அமைந்துள்ள இக்கல்வெட்டின் எழுத்தமைதி 15-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி என்று வரலாற்றாசிரியர் குடவாயில் பாலசுப்பிரமணியன் கருத்துரைத்துள்ளார்.

எனவே தெள்ளத் தெளிவாக வரலாற்றின் பக்கங்களில், கல்வெட்டுச் சான்றுகளுடன், வெள்ளைக் கோபுரத்திலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்ட நிகழ்ச்சிகள் அரசியல்

பின்னணியில் நிகழ்ந்த நிகழ்வுகள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளைக் கோபுரம்

திருவரங்கம் முஸ்லிம்களின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தேவதாஸி யொருத்தி, எந்த உபாயத்தைப் பின்பற்றியேனும் முஸ்லிம் வீரர்களை இங்கிருந்து அகற்றிட வேண்டுமென்று விரும்பி தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டு, அங்குள்ள படை வீரர்களின் தலைவனைச் சந்தித்து, மோஹவலை விரித்து படைத்தவைரும் அதில் விழுந்து, காதல் மயக்கத்தில் அவர் இருந்த போது அவரை, கோபுரத்தின் உயரத்திற்கு அழைத்துச் சென்று கோபுரத்தின் உயரத்திலிருந்து அவன் எட்டிப் பார்த்தபோது, அவனை அங்கிருந்து கீழே தள்ளிக் கொன்றாள். பிறகு தானும் அந்த கோபுரத்திலிருந்து விழுந்தாள். உயிர் பிரியும் வேளையில் 'தேவதாஸிகளில் யாரேனும் மரணம் அடையும்போது திருமடைப் பள்ளியிலிருந்து நெருப்பும், திருக்கொட்டாரத்திலிருந்து அமுதுபடி, தீர்த்தம், திருமாலை, திருப்பரியட்டம் ஆகியவற்றைக் கொடுத்தனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள்.

இந்தக் கதையின் அடிப்படையில் நடந்து வந்த இவ்வழக்கமானது கி.பி. 1953-இல் தேவதாஸிகள் ஒழிப்புச் சட்டம் அமுலுக்கு வந்தபோது நின்று போயிற்று.

இந்த தாஸியின் பெயர் 'வெள்ளையம்மாள்'; அவள் அந்தக் கோபுரத்திலிருந்து கீழே விழுந்ததன் நினைவாக கிழக்குக் கோபுரத்திற்கு 'வெள்ளைக் கோபுரம்' என்ற பெயரும் வழங்கி வருவதாகச் செவிவழிச் செய்திகள் கூறுவதாக ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ அ. கிருஷ்ணமாச்சார்யார் தெரிவிக்கிறார்.

ஆக, அதே வெள்ளைக் கோபுர உச்சியிலிருந்து முஸ்லிம் படைத் தலைவர் ஒருவரும், வெள்ளையம்மாள் என்ற தேவதாஸியும் விழுந்து மறைந்ததையும் 'கோயிலொழுகு' குறிப்பிடுகிறது.

விஜயரங்க சொக்கநாத நாயக்கர்

கி.பி. 1706-இல் மதுரையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர் விஜயரங்க சொக்கநாத நாயக்கர். இவரது தளவாய் கஸ்தூரி ரங்கய்யாவும், பிரதானி வேங்கடகிருஷ்ணய்யாவும் மக்களை வரிக்கொடுமையால் துன்புறுத்தினர். கோயிலில் சுவாமி தூக்கும் வேலையாள்களுக்கு விஜயரங்க சொக்கநாத நாயக்கரே கொடுத்த வரியில்லாத இறையிலி நிலங்களுக்கு அமைச்சரும் பிரதானியும்

வரி கொடுக்குமாறு வற்புறுத்தினார்கள். இந்த அட்டூழியத்தை எதிர்த்துக் கோயில் ஊழியர் ஒருவர் கோபுரத்தின் உச்சியில்ஏறித் தரையில் விழுந்து தன்னுயிரை மாய்த்தார். (அ.கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு, 1966, பக்கங்கள் 350 - 351).

கி.பி. 1710-ஆம் ஆண்டுக் கல்வெட்டு இதனை உறுதி செய்கிறது என்று பேராசிரியர் R. சத்தியநாத அய்யர் தனது "History of The Nayaks of Madura' நூலில், 1924, பக். 223-இல் தெரிவித்துள்ளார்.

1710-இல் பங்குனி 20 சனிக்கிழமை மதுரையில் எழுதப்பட்ட இக்கல்வெட்டினைப் பற்றி Jas. Burgess அவர்களும் பண்டித நடேச சாஸ்திரியும் இணைந்து வெளியிட்ட தமிழ் - சமஸ்கிருத கல்வெட்டுத் தொகுதியில் (Archaelogical Survey of Southern India, IV, 1886) காணப்படுகிறது.

செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கர்

செஞ்சியை ஆண்ட கிருஷ்ணப்ப நாயக்கர் கி.பி. 1597-இல் தில்லைக் கோவிந்தராசர் சன்னதியில் சில திருத்தங்களைச் செய்தார். சைவக் கோயிலில், வைணவப் பெருமாளை வைத்திட அவர் முயன்றபோது, சைவ சமய தீட்சிதர்கள் எதிர்த்தனர். கிருஷ்ணப்ப நாயக்கர் அதனைப் பொருட்படுத்தவில்லை. தீட்சிதர்கள் போராட்டத்தில் இறங்கினர். தில்லை (சிதம்பரம்) கோயிலின் கோபுரத்தின் மீது ஏறி கீழே விழுந்து உயிர் துறந்தனர் (அதனைத் தொடர்ந்தும் சைவர்கள் கிளர்ச்சி செய்ததும், அவர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதும் அதனைத் தொடர்ந்த பின் விளைவுகள் ஆகும்.

கி.பி. 1597-இல் சிதம்பரம் வழியாகப் பயணித்த கிறித்தவ பாதிரி பிமெண்டா (Father Pimenta, the Jesuit traveller) தானே இதனைக் கண்டதாக எழுதி வைத்துள்ளார். (C.S. Srinivasachari M.A. எழுதிய A History of Gingee and its Rulers 1943 பக்கங்கள் 120, 121)

சைவ - வைணவப் போராட்டத்தின்போது தான் சைவ சமயப் பெரியார்கள் தில்லைக் கோபுரத்திலிருந்து விழுந்து உயிர் துறந்துள்ளார்கள்.

திருக்கண்ணபுரத்து அரையர்

கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்கள் திருநாகை, திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருச்சிறு புலியூர் ஆகும். இதில் நன்னிலம் அருகே உள்ள திருக்கண்ணபுரத்தில் வைணவ ஆலயம் உள்ளது.

அங்கு இன்றுள்ள மதிலைத் தவிர ஏனைய மதில்களும் கோபுரங்களும் சோழ மன்னன் ஒருவனால் அழிக்கப்பட்டதாகவும், அப்போது அது கண்டு, அந்த ஊரில் வசித்து வந்த பக்தரான திருக்கண்ணபுரத்துஅரையர், தன் கர்ப்பிணியான மனைவியுடன் நின்று அந்த அழிவைத் தடுக்க முற்பட்டதாகவும், அதற்குப் பின்பு கோபுரத்தின் மீதேறி உயிர் துறந்ததாகவும் பிள்ளைலோகம் திருவேங்கடாசாரியார், வைகுந்தம் 'கொடுக்கும் வள்ளல்' எனும் கட்டுரையில் தெரிவித்துள்ளார். (12.08.2005 தினமணி)

தமிழகத்தில் திருப்பரங்குன்றம், மதுரை, ஸ்ரீரங்கம், சிதம்பரம், திருக்கண்ணபுரம் ஆகிய கோபுரங்களிலிருந்து விழுந்து பக்தர்கள் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட செய்திகளில் எந்த முஸ்லிம் மன்னரும் சம்பந்தப்படவேயில்லை. வரலாற்று மாணவனாகிய அடியேன் அறிந்த வரையில், சுஜாதா அவர்களே! இதில் ஒளிந்திருக்கக்கூடிய செய்தி எதுவும் இல்லை; நிச்சயமாக எந்த முஸ்லிம் ஆட்சியாளரும் இதில் சம்பந்தப்படவேயில்லை.

சுஜாதாவின் கோணல் பார்வை

இந்தக் குறுந்தலைப்பு என்னால் தரப்பட்டதல்ல; ந. வெற்றியழகன் 1995-இல் உங்களின் 'ஒரு விஞ்ஞானப் பார்வையிலிருந்து' நூலுக்கு மறுப்பாக ஏழு தொடர்கள் எழுதினார். 2005 மார்ச்சில் அதை நூலாக்கியபோது அவர் அதற்குத் தந்த தலைப்பு 'சுஜாதாவின் கோணல் பார்வை'. அதில் எதனையும் அது அதற்கு உரிய நேர் கொண்ட பார்வையினைச் செலுத்தி உண்மை காண வேண்டுமே ஒழிய பிறழ்வான அதுவும் திரிபான இன்னும் விளக்கமாகச் சொன்னால் கோணலான பார்வையினைச் செலுத்தலாகாது என்பதே எமது விழைவு; விருப்பம். வேண்டாத விரும்பத்தகாத திருப்பணியை எழுத்தாளர் சுஜாதா மேலும் செய்யக்கூடாது" என்று அவர் கூறிய கருத்தையே நினைவூட்டுகிறேன்.

"கிபி. 1323-இல் முகமதியர் படையெடுப்பின்போது 13,000 ஸ்ரீ வைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி என்று கற்பனைக் குதிரையில் சவாரி செய்கிறீர்களே. இது நியாயந்தானா? சமய நல்லிணக்கத்திற்கு உகந்தது தானா? சரித்திரத்தில், 1323-இல் ஸ்ரீரங்கத்தில் நடந்ததாகக் கூறப்படும் செய்திகளை விரிவாகவே ஆராய வேண்டிய நிலைக்குத் தள்ளியிருக்கிறீர்கள்.

ஸ்ரீரங்கம்

அழகிய சிறு தீவைப் போன்றது; காவிரி, கொள்ளிடம் ஆறுகளால் சூழப்பெற்றது. சைவர்களுக்கு 'கோவில்' என்றும்

தனிச்சிறப்புப் பெற்ற சிதம்பரத்தைப் போல், வைஷ்ணவர்களுக்கு பெரிய கோவில் என்று அமைந்துள்ளது ஸ்ரீரங்கநாதன் ஆலயம். இங்கு ஆண்டில் 322நாட்கள் விழாக்கள் நடந்து கொண்டேயிருக்கும் எனும் சிறப்புப் பெற்றது.

வைணவ விண்ணகரங்களான திருமாலிருஞ்சோலை திருவேகம்பம் (காஞ்சி) திருமால் குன்றம் (அழகர் மலை) திருவேங்கடம் (திருப்பதி) திருவனந்தபுரம் (அனந்தசயனம்) திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) இதில், திருமாலின் ரெங்க விமானம், தங்கி அமைந்த பெருமையால் அது ஸ்ரீரங்கம் எனும் பெயர் பெற்றது என்பர்.

அரங்கம் – ஆற்றின் குறை

பெரிய கோவில், 'போக மண்டபம்', 'பூலோக வைகுந்தம் என்றெல்லாம் அழைக்கப்பெறும் திருவரங்கம் ஆற்றின் நடுத்திட்டில் அமைந்திருப்பதால், 'துருத்தி' (ஆற்றின் நடுத்திட்டு) என்று சிலப்பதிகாரம் மதுரைக்காண்டம், காடுகாண் காதை 39, 40வது அடிகள் குறிப்பிடுகிறது. அதில் ஆறாவது அடியில் 'அந்திலங்கத்தான் பொழில்' என்பதற்கு அரங்கம் - திருவரங்கம் என்றும் ஆற்றின் குறையென்பாருமுளர் என்றும் மகாமகோபாத்தியாய தாக்ஷினாத்யகலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையர் உரை தந்துள்ளார் (1955: பக்கம் 288).

கல்வெட்டுக்கள்

இராமரால் பூஜிக்கப்பட்டு, பின் இலங்கை விபீஷணனுக்குத் தரப்பட்டு, இலங்கைக்கு அவர் திரும்புகையில் இங்கு வைத்து அதை பூஜித்ததாகவும் அதன் பின்னரே அங்கேயே கோயில் அமைந்ததாகவும் சொல்லப்படுகிறது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் 26 தொகுதிகள் வந்துள்ளன. அதில் திருவரங்கம் கோவில் பற்றிய கல்வெட்டுக்கள் 644 ஆகும். (Epc. Rep 45&46/, 1891, 51-74/1892, 341-5/1918, 256-69/1930, 1-102/1937, 80-129/ 1938…etc)

வரலாற்று ரீதியாக

திருவரங்கம் பெரிய கோயிலின் அமைப்பைக் கருதுங்கால் அதன் தற்போதைய அமைப்பு பிற்காலப் பல்லவர்கள், பிற்காலச் சோழர்கள், பிற்காலப் பாண்டியர்கள், விஜயநகரவேந்தர்கள் மதுரை - திருச்சி நாயக்க மன்னர்களின் காலங்களில் அவ்வப்போது திருத்தியும், பெருக்கியும் அமைத்தனர் என்பர் J.M. சோமசுந்தரம்பிள்ளை (K.K. மேனன் வெளியிட்ட ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதஸ்வாமி தேவஸ்தானம் ஸ்தல புராணம் 1959, ப. 7).

கோயிலொழுகு

முஸ்லிம் மன்னர்களின் படையெடுப்பு பற்றிய செய்திகளுக்கு 'கோயிலொழுகு' நூலையே சான்று காட்டுகின்றனர். 'கோயிலொழுகு' என்றால் என்ன?

ஸ்ரீ.உ.வே. புத்தூர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்

"கோயிலொழுகு" என்னும் நூல் 'கோயில்' என்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவராலும் போற்றப்படும் ஸ்ரீரங்கம் கோயில் வரலாற்றை, இதிஹாஸ புராண காலத்திலிருந்து, பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை கூறுவதாகும். ஸ்ரீரங்கம் கோயில் அதிகாரிகளால் செவி வழிச்செய்திகளையும் கல்வெட்டுக்களையும் கொண்டு தொகுக்கப்பட்டு உருவான நூல் இது . . ." என்பர் 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியரும் பன்னூல்களைத் தந்தவருமான எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.

மதுரைப் பேராசிரியர் இரா. அரங்கராஜன் 'திருவரங்கம் திருக்கோயில் ஸ்ரீ பண்டாரத்துப் பணியாளர் அவ்வக் காலங்களில் குறிப்பாக எழுதிச் சேர்த்த தொகுப்பே ஒழுகு நூலாகும் . . . செய்திகளை திருக்கோயில் ஸ்ரீ பண்டாரத்துப் பணியாளர் நால்வர் அதிகாரிகள் முன்னிலையில், கரணத்தார்கள் அப்பதிவுகளை ஏடுகளில் எழுதினர். அவ்வேட்டுச் சுவடிகள் முத்திரையிடப் பெற்று பத்திரமாக சேமிக்கப் பெற்றன.

பிற்காலத்தில வழக்குகளும், விவகாரங்களும் ஏற்பட்டபொழுது அந்நூல் வெளியே எடுக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப் பெற்றன. பரம்பரை பரம்பரையாக இக்குறிப்புகள் ஏற்படுத்தப்பட்டன" என்பார் இரா. அரங்கராஜன்.

உ.வே. ஏ.வி. ரங்காசாரி – தில்லை திருச்சித்ரகூடம்

"கோயில் ஒழுகு எனப்படும் மணிப்ரவாளத்தின் அமைந்த (வடமொழிச் சொற்கள் அதிக அளவிலும், வடமொழி இலக்கண விதிகள் குறைந்த அளவிலும் பயன்படுத்தப்பட்ட ஒரு வகைத் தமிழ்நடை மணிப்பிரவாளம் - கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 1999, பக். 805) ஒப்பற்ற நூலே திருவரங்கம் திருக்கோயில் பற்றிய வரலாற்றுக் களஞ்சியம் என்பர். இம்மாதிரியான ஒழுகு திருவரங்கம், திருவேங்கடம் தவிர வேறெந்த ஆலயத்திலும் இதுகாறும் பேணப்பட வில்லை' என்பர் உ.வே. ஏ.வி. ரங்காசாரி.

ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ. அ. கிருஷ்ணமாச்சார்யார்

தற்போது நமக்கு அச்சு வடிவில் கிடைக்கும் கோயிலொழுகு

கி.பி. 1623-ஆம் ஆண்டோடு முடிவடைகிறது. முனைவர் திரு. ஹரிராவ் தம்முடய கோயிலொழுகின் ஆங்கில மொழிபெயர்ப்பில் கி.பி. 1623- ஆம் ஆண்டு முதல் கி.பி. 1803 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற நிகழ்ச்சிகளை அவருக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதியின் துணை கொண்டு தொகுத்துத் தந்துள்ளார்.

கிபி. 1803-ஆம் ஆண்டு தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரை நடைபெற்ற நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதற்குத் தற்போது நமக்குக் கிடைத்துள்ள பல்வேறு நீதிமன்ற வழக்குகளின் தொகுப்புகளும், தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் படியெடுக்கப்படாத சில கல்வெட்டுகளும் ஆதாரங்களாக அமைந்துள்ளன. இந்தக் கால கட்டத்தில் முறையான கோயிலொழுகு எழுதப்படவில்லை (தொகுக்கப்படவில்லை). பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற உரிமைப் போராட்டங்களையும் மதுரகவிதாஸர், அல்லூரிஸ்வாமி, ஶ்ரீரங்கநாராயண ஜீயர் பட்டத்தில் எழுந்தருளியிருந்த தேசிகவரதாசார்யா ஸ்வாமி போன்றோர் களுடைய கைங்கர்யங்களையும் தொகுத்து அவற்றை கோயிலொழுகாகக் கொள்ள வேண்டியுள்ளது.

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் திருமலை, ஶ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், மேலக்கோட்டை திரு நாராயணபுரம், ஶ்ரீவில்லிபுத்தூர் திருக்குறுங்குடி போன்ற திவ்ய தேசங்களில் பரம்பரை பரம்பரையாக மரியாதைகளைப் பெற்று வந்த தென்கலை சமூகத்தினர் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள நீதிமன்றங்களை அணுக வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர். ஆகவே, பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் ஶ்ரீ வைஷ்ணவ திவ்ய தேசங்களின் வரலாறு பெரும்பாலும் நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் எழுதப்பட வேண்டியுள்ளது . . . என்று ‘கோயிலொழுகு’ பற்றி ஶ்ரீ வைஷ்ணவஶ்ரீ. அ. கிருஷ்ணமாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

பதிப்புக்கள்

தமிழில் இதுவரை கோயிலொழுகு பதிப்புக்கள் ஐந்து, அச்சு வடிவில் வெளிவந்துள்ளன.

கி.பி. 1888

திரு. கிருஷ்ணமாச்சார்யரை பதிப்பாசிரியராகக் கொண்டு, சென்னை ஆனந்தா அச்சுக்கூடத்தில் 1888 டிசம்பரில் ‘கோயில் ஒழுகு’ முதற்பதிப்பு அச்சு வடிவில் வெளிவந்தது.

கி.பி. 1909 - I

அரங்கசாமி முதலியாரை (பதிப்பாசிரியராகக் கொண்டு) சென்னை ராயப்பேட்டை உமாபதி குருப்ரகாசம் அச்சுக் கூடத்தில் அச்சேறி கி.பி. 1909-இல் இக்கோயில் ஒழுகு, நூல் வடிவில் வந்துள்ளது.

1909 - II

வைணவப் பண்டிதர்களால், ஆனந்த முத்ராட்சர சாலை, சென்னையிலிருந்து 1909-இல் கோயில் ஒழுகு அச்சு வடிவில் வெளிவந்துள்ளதாக, அ. கிருஷ்ணமாச்சார்யார் தனது 'கோயிலொழுகு' நூலில் பகுதி 1 பாகம் 2 பக்கம் 669-இல் தெரிவித்துள்ளார்.

1976

எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, 'கோயிலொழுகு' 1976-இல் 102 பக்கங்களில் அச்சு வடிவில் வெளிவந்துள்ளது.

25.03.2005

ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ. அ. கிருஷ்ணமாச்சார்யார் 'கோயிலொழுகு' ஸ்ரீரங்க மஹாத்மியம் எனப்படும் ஸ்ரீரங்கம் கோயில் வரலாறு பகுதி 1, பாகம் 1, 2 என்று இரு நூல்களாக 676 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்கள்.

இனி 'கோயிலொழுகு' பற்றி வைணவ அறிஞர்கள் தெரிவித்துள்ள சில குறிப்புகளைச் சுட்டிக் காட்டிட வேண்டியது அவசியமாகிறது.

கால வரிசை இடம் பெயர்ந்து

"கோயிலொழுகு நூலில் கோயில் நிகழ்ச்சிகளிற் பல கால வரிசையில் இடம்பெயர்ந்து காணப்படுகின்றன. பின்னே வந்த சுவடி எழுதுவோர் ஓலைகளை இடம் மாற்றிக் கோத்து விட்டனர். **முகம்மதியப் படையின் தாக்குதலை வருணித்த பிறகே ஆச்சார்யர்களின் வரலாறு இந்நூலில் இடம்பெறுவதற்கு அதுவே காரணமாகும்**" என்பர் பேராசிரியர் இரா. அரங்கராஜன்.

ஆக கோயிலொழுகு முதலில் முறையான வரிசைப்படி தொகுக்கப்படவில்லை.

குழப்பத்தைத் தருகின்றன

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 'திருவாய்மொழிப்

பேருரையாளர் நம்பிள்ளை உரைத்திறனை' ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர் இரா. அரங்கராஜன். அவர் கோயிலொழுகு பற்றிக் கூறுகையில் . . . " **கி.பி. 1311 மற்றும் 1323-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த முகம்மதியப் படையெடுப்புகளைக் கோயிலொழுகு மிகவும் உருக்கமான உணர்வோடு விரித்துக் கூறுகிறது.**

இதில் பல சம்பவங்கள் கால மாறுபாடுகள் ஏற்பட்டுக் குழப்பத்தையும் தருகின்றன என்று தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

'கோயிலொழுகு' நூலில் முஸ்லிம் படையெடுப்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்தி என்ன?

எம் பெருமானடியாள் கோயிலைக் காத்தது

எம் பெருமானடியாள் கோயிலைக் காத்தது இந்தத் தலைப்பு 'கோயிலொழுகு'வில் உள்ள தலைப்பு 'கோயிலைக் காத்தது' என்று. அப்படியானால் அந்தப் படையெடுப்பின்போது (?) கோயில் காக்கப்பட்டது என்பதனை கோயிலொழுகு தலைப்பே உறுதி செய்கிறதல்லவா!

படையெடுப்பின் காலம்

"அவர் குமாரர் திருக்கோபுரத்து நயினார், நரஸிம் ஹராஜா துரைத்தனத்தில், பஹுகாலம் ஸ்ரீ கார்யம் நிர்வஹித்தார். அவர் இரண்டாம் குமாரரரான சிற்றண்ணர், வாதூல தேஸிகபத நிர்வாஹகராய, ஸ்ரீரங்க ஸ்ரீகார்ய துரந்தரராய் பஞ்ச திருவடி கேஸவராஜாவைத் தொட்டு ஸ்வாமிக்கு அனைத்தழகும் கண்டருளப் பண்ணி அநேக கைங்கர்யங்களையும் பண்ணிக் கொண்டிருந்தார். பின்பு அவர் குமாரர் ஸ்ரீ ரங்கராஜநாதன் வாதூல தேசிகர் பஞ்ச திருவடி வீரப்ப ராஜாவாலே, அழகிய மணவாளப் பெருமாளுக்கு அநேக கைங்கர்யம் நடப்பித்துக் கொண்டு, ஜ்ஞாநபக்தி வைராக்யாதிகராய், ஸ்ரீகார்ய ஸ்ரீயைச் சிந்தாமல், மங்காமல் பொங்கும்படி ஸகலோசார வரிசைகளும் நடப்பிக்க, ஸ்ரீரங்க ஸ்ரீயும் தினந்தினம் வ்ருத்தியடைந்து வர ஸ்ரீகார்ய நிர்வாஹத்துக்குப் பின்னுக்கு ஒருத்தருமில்லை என்று விஷண்ணராயிருக்க பகவதநுக்ரஹஹத்தாலே குமாரர் அவதரித்த பன்னிரண்டாம் நாள், ந்ருஸிம்ஹ தேஸிகர் என்று திருநாமமும் சாத்தி, ஸ்வாமி ஸந்நிதிக்கு ஸேவைக்கு எழுந்தருளின காலம் . . . "

மேலே உள்ள வரிகள் முஸ்லிம் படையெடுப்பு பற்றி சொல்ல இருக்கும் காலத்தைப் பற்றி 'கோயில் ஒழுகு' குறிப்பிட்ட வாசகங்கள்.

இதற்கு வைஷ்ணவ ஸ்ரீ அ. கிருஷ்ணமாச்சார்யார் தமது கோயிலொழுகு பகுதி 1 பாகம் 2 பக்கங்கள் 463, 464-இல் தந்துள்ள விளக்கம் இதோ . . .

'கோயிலொழுகில் இந்த ஸ்ரீரங்கராஜநாதன் வாதுல தேசிகர் பஞ்ச திருவடி வீரப்ப ராஜா அளித்த நிதி கொண்டு அழகிய மணவாளப் பெருமாளுக்குப் பல கைங்கர்யங்களை நடப்பித்து வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பு வரலாற்றுச் செய்திகளுக்கு முரண்பட்டதாகும். இந்தக் கால கட்டத்தில் பாண்டியப் பேரரசுக்கு உட்பட்ட பகுதியாகத் திருவரங்கம் விளங்கி வந்தது. கிபி. 1225-ஆம் ஆண்டு தொடங்கி, கிபி. 1323-ஆம் ஆண்டு வரை பாண்டிய மன்னர்களான மாறவர்மன் முதலாம் சுந்தரபாண்டியன், மாறவர்மன் இரண்டாம் சுந்தர பாண்டியன், சடையவர்மன் முதலாம் சுந்தர பாண்டியன், மாறவர்மன் முதலாம் குலசேகரன், சடையவர்மன் இரண்டாம் சுந்தர பாண்டியன், சடையவர்மன் வீர பாண்டியன், சடையவர்மன் மூன்றாம் சுந்தர பாண்டியன், மாறவர்மன் இரண்டாம் குலசேகரன் ஆகியோர் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தனர். இவர்களுடைய காலத்திலே பஞ்ச திருவடி வீரப்பராஜா போன்றவர்கள் எந்தக் கைங்கர்யத்தையும் செய்திருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் மதுரை நாயக்க வம்சத்தைச் சார்ந்தவர்கள். மதுரை நாயக்கர் வம்சமே கி.பி. 1526 ஆம் ஆண்டில் தான் தோற்றுவிக்கப்பட்டது.

கோயிலொழுகில் குறிப்பிடும் மன்னரின் காலம் எவ்வளவு மாறுபட்டுள்ளது என்பதனைக் கவனத்தில் கொள்வோம். தொடர்ந்து கோயிலொழுகுவின் வரிகளைப் பார்ப்போம் . . .

'சகாப்தம் ஆயிரத்து நூற்று நாற்பத்தொன்பதுக்கு மேல், அக்ஷயஸம்வத்ஸரத்தில், 'துலுக்கர் தொண்டை மண்டலம் வியாபித்தார்கள் என்று கேட்டு . . .'

சகாப்தம் 1149 என்றால் கிறித்தவ ஆண்டு பெற அதனுடன் 78-ஐ (வரலாற்றுக் கணக்குப்படி கூட்டிட வேண்டும். அப்படியானால்; 1149 + 78 = 1227 ஆக, கோயிலொழுகு குறிப்பிடும் வருடத்திலும் குழப்பம். அதனை தனது நூலில் பக்.465-ல் அ. கிருஷ்ணமாச்சார்யார்:

"சக ஆண்டுக் கணக்கில் சில தவறுகள் காணப்படுகின்றன. கோயிலொழுகு கி.பி. 1227இல் துலுக்கர்களுடைய படையெடுப்பு நடைபெற்றதாகக் குறிப்பிடுகிறது. இது வரலாற்று உண்மைகளுக்கு முரண்பட்ட செய்தி" என்று குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமா? தொடர்ந்து அவர் சொல்கிறார். "நம் பெருமாள் இரண்டு தடவை துலுக்கர்களுடைய படையெடுப்பினால் திருப்பி வந்தாரா? அல்லது ஒரு தடவை மட்டும் ஆஸ்தானத்தை விட்டு அகன்று மீண்டு வந்தாரா? என்பதும் விவாதத்திற்கு உரிய செய்திகளாகும் (மேற்கூறிய நூல், ப. 466) என்றும் தெரிவித்துள்ளார்.

இனி ‘கோயிலொழுகு’வின் வரிகளைத் தொடர்ந்து காண்போம்.

கோயிலொழுகு . . . குடி படைகளுக்குச் சேதமில்லாதபடி

“ஸ்வாமி ஸந்நிதியிலே இங்கே எழுந்தருளியிருக்கிறதும், வெளியிலே எழுந்தருகிறதும் எது திருவுள்ளம்? என்று திருவுள்ளச் சீட்டுப் போடுகையில்; அழகிய மணவாளப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறதே திருவுள்ளம் என்று நியமித்த படியினாலே திருநாள் ஆரம்பித்து நடக்கையில், பன்றி யாழ்வான் கோவிலிலே பலி வெட்டு மண்டபத்திலே அழகிய மணவாளப் பெருமாள் எழுந்தருளியிருக்கிற ஸமயத்திலே, துலுக்கர் சமயபுரம் கடந்து வருகிறதைக் கேட்டு, ஸ்ரீரங்கராஜநாதன் திருவோலக்கத்திலே எழுந்தருளியிருக்கிற பன்னீராயிரம் ஸ்வாமிகளையும் திருவோலக்கம் குலையாமலிருக்கும்படி நியமித்து, திருவாராதநம் நடக்கிறதாகத் திருத்திரை பரிமாறி, சிறு பல்லக்கிலே பெருமாளையேறியருளப் பண்ணி, ஒரு அர்ச்சகரையும் சிஷ்யரோடு கூடப்பிள்ளை லோகாசார்யரையும் கூட்டித் தெற்கே அனுப்பி, தாம் கோவிலேலே புகுந்து, சில திருவாபரணப் பெட்டிகளையும் திருப்பல்லக்கிலே ஸ்ரீரங்க நாய்ச்சியாரையும் சில பரிகாரங்களையும் கூட்டி அனுப்பி, பெரிய பெருமாள் குலசேகரன் படிகல் திரைபரிமாறி முன்னதாக விக்ரஹத்தை வைத்துக் கதவைப் பூட்டி, நாச்சியார் ஸந்நிதியிலேயும் அந்தப்படி பண்ணி, மர்மஸ்தாநங்களெல்லாம் திரோதாநம் பண்ணி, தாம் திருவோலக்கத்தில் வர **துலுக்கரும் திரையில் புகுந்து, விக்ரஹத்தைக் காணாமல், பன்றியாழ்வானை அபசாரப்பட்டு ஸ்வாமிகளனைவரையும் திருமுடி திருத்தி கோவிலிலே ப்ரவேஸித்து செம்பொன் வாசலிலிருந்த விக்ரஹத்தை அழித்து, தென்கரை வடகரை எல்லாம் குடிபடைகளுக்குச் சேதமில்லாதபடி** எஜமாநன் அழகிய மணவாளன் திருமண்டபத்திலே குடியிருக்குமளவில் . . .”

கோயிலொழுகின் இந்தப் பகுதியில் குறிப்பிடப்படும் ‘ஸ்வாமிகள் அனைவரையும் திருமுடி திருத்தி’ என்ற வாக்கியத்தை வைத்து, அதற்கு முன்னர் பன்னீராயிரம் ஸ்வாமிகள் என்று குறிப்பிடப்படுவதை வைத்து, பன்னீராயிரம் வைஷ்ணவர்களைக் கொன்றதாக விளக்கம் தருகிறார்கள்.

வரலாற்றில் இந்த இடத்தை மிகமிக விரிவாக ஆராய வேண்டிய இடத்தில் இருக்கிறோம்.

லீவிஸ் மூர் (Lewis Moore)

லீவிஸ் மூர் (Lewis Moore) திருச்சி மாவட்டத்தில் ஆட்சித் தலைவராகவும், நீதிபதியாகவும் பணியாற்றியவருக்கு

உறுதுணையாக தலைமை உதவியாளராகப் பணியாற்றியவர் லீவிஸ் மூர் (Acting Head to the Collector and Magistrate of Trichinopoly) இவர். 1878-இல் 'A Manual of the Trichinopoly District in The Presidency of Madras' எனும் திருச்சி மாவட்ட வரலாற்று நூலை 389 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.

அதில் பக்கம் 7-இல், கி.பி. 1875-ஆம் ஆண்டையொட்டி, திருரங்கத்தின் மக்கள் தொகையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

11271

"Srirangam, Population 11, 271"

கி.பி. 1875-களில், ஸ்ரீரங்கத்தின் மொத்த மக்கள் தொகை 11,271.

இதனை 1878-இல் வெளிவந்த திருச்சி மாவட்ட மானுவெல் தெளிவாகத் தெரிவிக்கிறது.

இந்த நிலையில், கி.பி. 1323-இல் ஏறத்தாழ 550 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதாகக் கூறப்படும் முஸ்லிம் படையெடுப்பின்போது, திருரங்கத்தில் 13,000 வைஷ்ணவர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவது நியாயந்தானா? நடைபெற்றிருக்கக்கூடியது தானா? நம்பத் தகுந்தது தானா? நல்லோர் ஏற்றுக் கொள்ளக் கூடியது தானா?

3

குருபரம்பராப்ரபாவம்

'நம்மாழ்வாரை ப்ரதானமாகக் கொண்ட ஆழ்வார்களுடையவும், அவர்கள் வழிவந்த ஆசார்யர்களுடையவும் பரம்பரையையும் வைபவத்தையும் பேசும் நூல்களில் மணிப்ரவாள நடையில் அமைந்தவற்றுள் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவமே மிகப் பழையது' என்பது எஸ். கிருஷ்ண ஸ்வாமி அய்யங்காரின் கருத்தாகும். (பின் பழகிய பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், திருச்சி, 1975 பக். II, III)

ஆழ்வார்களின் வரலாற்றையும், ஆசார்யார்களின் சரித்திரத்தையும் உரைநடையில் நூலாக்கியவர் பின் பழகிய பெருமாள் ஜீயர் ஆவர். அவரது 'ஆறாயிரப்படி குருபரம்பரை நூல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியதாகக் கொள்ளலாம்' என்பர் பேராசிரியர் டாக்டர். இரா. அரங்கராஜன்.

(முற்கூறிய அவரது நூல், பக்.3..) இந்த நூல் நம் பிள்ளையின் உரை ஏற்படுத்தப்பட்ட வரலாற்றோடு முடிவடைகிறது. நம்பிள்ளையின் இறுதிக் காலத்தை இந்நூல் தெரிவிக்கவில்லை. (நம்பிள்ளையின் காலம் கி.பி.1147 முதல் 1252 வரை)

வேறு பல குருபரம்பரை நூல்கள்

பின் பழகிய பெருமாள் சீயரின் குருபரம்பரை நூலை முன்னோடியாகக் கொண்டு வேறு பல குருபரம்பரை நூல்கள் பிற்காலத்தில் உரைநடையிலும், செய்யுள் நடையிலும் தோன்றின. அவைகள் சீயரின் நூலிலிருந்து குறைந்தோ அல்லது கூடுதலாகவோ இருந்தது (?) அவற்றிலிருந்து சீயரின் நூலை வேறுபடுத்திக் காட்டிட அவரது நூலுக்கு ஆறாயிரப்படி என்ற அடைமொழி ஏற்பட்டது.

இளம்பிளிசைப்பிள்ளை

நம்பிள்ளையின் சீடர் வழியினரான இளம்பிளிசைப் பிள்ளை 'குருபரம்பராப்ரபாவம்' நூல் இயற்றியதாக S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் தெரிவித்துள்ளார். (பெரிய திருமுடியடைவு, 73 வது ப்ரமாணம்)

வடிவழகிய நம்பி தாசர்

முதல் வானமாமலை சீயரின் சீடரான ஆத்தான் அழகப்பங்காரின் சீடரான வடிவழகிய நம்பி தாசர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் செய்யுள் வடிவில் எழுதப்பட்ட குருபரம்பரை நூல் முழுமையாகக் கிடைத்துள்ளது. இது 2695 விருத்தச் செய்யுளை உடையது.

கீழையூர்ச் சடகோபதாசர்

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அரி சமயதீபம் என்னும் 1500 விருத்தச் செய்யுள்கள் வடிவிலான குருபரம்பரை நூல் கீழையூர்ச் சட கோபதாசரால் இயற்றப்பட்டது.

பாகை சீதாராமதாசர்

இதே காலகட்டத்தில் பாகை சீதா ராமதாசரால் 1215 செய்யுட்களைக் கொண்ட இராமாநுசசரிதை இயற்றப்பட்டது.

'குருபரம்பரை புராணம்', 'பரமயோகி விலாசம்' போன்ற நூல்களும் தோன்றின. இவை யாவும் இராமாநுசரின் வரலாற்றோடு முடிகின்றன.

பெரியவாச்சான் பிள்ளை

பின் பழகிய பெருமாள் சீயரின் 'ஆறாயிரப்படி குருபரம்பரை', 'வார்த்தாமாலை' பெரியவாச்சான் பிள்ளையின் பேருரைகளில் இடம் பெறும் (1882) ஐதிஹ்யங்கள் (கதையோடு கூடிய அர்த்த விசேஷங்கள்) ஆகியவற்றைத் தழுவி விரிவாக அமைக்கப்பட்ட நூல் 'பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவம்' ஆகும். இதில் நம்பிள்ளையின் இறுதிக் காலமும், அவரை அடுத்து வந்த ஆசார்யர்களின் வரலாறும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிள்ளை லோகாசாரியாரின் வரலாற்றின் ஒரு பகுதியோடு இந்நூல் முடிவடைகிறது.

எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் இதழின் ஆசிரியரும் அட்வகேட்டுமான, புத்தூர் அக்கரஹாரத்தைச் (திருச்சி 17) சேர்ந்த S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பின்பழகிய பெருமாள் ஜீயரின் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் நூலினை 1968 லும் 1975 லும் பதிப்பித்துள்ளார்.

திருமலைநல்லான் சக்ரவர்த்தி

சென்னை பூமகள் விலாசம் அச்சுக் கூடத்தில் 1928-இல் அச்சிட்டு, பன்னீராயிரப்படி 'குருபரம்பராப்ரபாவம்' நூல் 590 பக்கங்களில் முதற்பாகம் வெளிவந்துள்ளது. கிருஷ்ணமாசாரியஸ்வாமி திருமலை நல்லான் சக்ரவர்த்தி முதலியோர் அதன் பதிப்பு ஆசிரியர்கள். இந்த நூலில் இறுதி பாராவில் (பக்கம் 589 ,590) சொல்லப்பட்டுள்ள விஷயத்தைக் கீழே தருகிறேன். அதில் ஸ்ரீரங்கத்தில் முஸ்லிம் படையெடுப்பைப் பற்றிக் கூறுகையில் **'ஸ்ரீரங்கம் துருஷ்காக்ராந்தமாய் குடியிருக்கப் போகாமல்'** *என்ற ஒரே ஒரு வரி மட்டும் வருகிறது. இதோ அதன் முழு வாசகங்கள்...*

ஸர்வசேதனரு முஜ்ஜீவிக்கும்படி சாமப்ரமான ப்ரமேய ப்ரமாத்ரு வைபவங்களை ப்ரகாசிப்பித்துக் கொண்டு பிள்ளைலோகாசார்யர் பெருமாளுக்கு ப்ராண பூதராயெழுந்தருளி இருக்குங் காலத்தில் **ஸ்ரீரங்கம் துருஷ்காக்ராந்தமாய் குடியிருக்கப் போகாமல்** *பெருமாள் நாய்ச்சிமாருடனே புறப்பட்டு பெரிய பெருமாளுக்கு திருமுன்பே கல் காம்புச் சாத்தி முன்னே ஒரு விக்ரஹத்தை யெழுந்தருளப்பண்ணி வைத்து (சுற்றமெல்லாம் பின் றொடரத்தொல்கானமடைந்தாய்) என்றும் (தம்பியொடு தாமொருவர் தன் துணைவிகாதல் துணையாக) என்றுஞ்*

சொல்லுகிறபடியே பெருமாள் தம் அந்தரங்க பரிகரத்துடனே வலசையாக வெழுந்தருள, பிள்ளையும் வாளும், வில்லுங்கொண்டு பெருமாளைப் பின்றொடர்ந்தடிமை செய்த இளைய பெருமாளைப் போலே (உருவார். சக்கரஞ்சங்கு சுமந்திங்கும் மோடொருபாமுழல்வானோ ரடியான்) என்கிற படியே அத்தலைக்கு மங்களா சாஸநபராய் தாமும் முதலிகளும் ஸேவித்துக் கொண்டு சேர வெழுந்தருள, இனி கோயிலில் நடந்த வருத்தாந்தங்கள் பின்வருமாறு, பிள்ளை லோகாசார்யார் திருவடிகளே சரணம் பின்பழகிய பெருமாள் ஜீயர் திருவடிகளே சரணம் குருபரம்பராப்ரபாவம் முதற்பாகம் சம்பூர்ணம்."

ஸ்ரீரங்கம் முஸ்லிம் படையெடுப்பைப் பற்றி இதர வைணவ நூல்கள் தரும் விவரங்கள் என்ன? என்ன?

யதீந்த்ரப்ரவணப்ரபாவம்

மணவாளமாமுனிகளின் வரலாற்றைக் கூறும் நூல் 'யதீந்த்ரப்ரவணப்ரபாவம்' இந்த உரைநடை நூல் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டது ஆகும். (இரா. அரங்கராஜன், நம்பிள்ளை உரைத்திறன், 1986, பக்5)

14-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் ஸ்ரீரங்கத்திய முஸ்லிம் படையெடுப்பைப் பற்றிய குறிப்புக்களைத் தருகிற 'யதீந்திரப்ரவணப்ரபாவம்' எனும் நூல் 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்ட நூல் என்பதனை மனதில் கொள்வோமாக.

ஸ்ரீபிள்ளை லோகார்ய ஜீயர்

திருவாய் மொழிக்குப் பேருரைகள் தோன்றிய வரலாறும், ஈட்டின் ஓராண் வழிச் செலவும் மிகவிரிவாக முற்பகுதியில் விளக்கப்பட்டுள்ள இந்த நூலின் ஆசிரியர் பிள்ளை லோகஞ்சீயர்.

மணவாளமாமுனிகளின் அட்டதிக்கயங்களில் ஒருவரான பரவஸ்து பட்டர் பிரான் சீயரின் புத்திரர் அழகிய மணவாளர், அவருடைய பேரனாகிய வரதாரியர் என்பவரே துறவு நெறி தழுவி 'பிள்ளை லோகஞ்சீயர்' என்று அழைக்கப்பட்டார். இவர் நெடுநாள் மாமல்லபுரத்தில் இறைபணியாற்றி வந்தார். (வி.வி. ராமாநுஜம். ப.ஆ. குறிப்பு. மணவாளமாமுனிகள் ஆறாவது நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970, பக்29)

மாமல்லபுரத்தில் இறைப்பணியாற்றி வந்த 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்ட யதீந்த்ரப்ரவணப்ரபாவம் நூல் ஸ்ரீரங்கப் படையெடுப்பைப் பற்றி (?) சொல்வது இதோ.

"துருஷ்காக்ராந்தமாய்க் குடியிருக்கப் போகாமல்" என்ற ஒரே ஒரு வரி மட்டும் வருகிறது. எந்த இடத்தில்?

நம் பெருமாள் கோயிலை விட்டு வலசையாக எழுந்தருளல்

ஸர்வசேத நருமுஜ்ஜீவிக்கும்படி சரமப்ரமாணப்ரமேய ப்ராமாத்ரு வைபவங்களை ப்ரகாசிப்பித்துக் கொண்டு பிள்ளை லோகாசார்யர் பெருமாளுக்கு ப்ராணபூதரா யெழுந்தருளியிருக்குங் காலத்தில் ***ஸ்ரீரங்கம் துருஷ்காக்ராந்தமாய்க் குடியிருக்கப் போகாமல்*** *பெருமாள் நாய்ச்சிமாருடனே புறப்பட்டு, பெரிய பெருமாளுக்குத் திரு முன்பே கல்காப்புச் சாத்தி முன்னே ஒரு விக்ரஹத்தை யெழுந்தருளப்பண்ணி வைத்து, சுற்றமெல்லாம் பின் தொடரத் தொலகானமடைந்து..'*

("யதீந்த்ரப்ரவணப்ரபாவம். ஸ்ரீ மணவாளமாமுனிகள் வைபவம்" பதிப்பாசிரியர் முனைவர். வீ.வீ.ராமாநுஜன், ஆசிரியர் யதிராஜ பாதுகா, 2000 சென்னை, பக்.30)

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யார்

கோயிலொழுகு ஸ்ரீரங்கமஹாத்மியம் எனப்படும் ஸ்ரீரங்கம் கோயில் வரலாறு (பகுதி 1, பாகம் 1) எளிய நடை தமிழ் விவரணத்துடன் கூடியது என்று 25.3.2005 இல் வெளிவந்த நூலில் பக்கம் 195 இல் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யார் மேற்கூறிய வரிகளுக்குத் தந்துள்ள விளக்கம் இதோ..

"அனைத்து மக்களும் நற்கதி அடையும் பொருட்டு அறுதியிட்டுக் கூறும் நூல்களின் முடிவான கருத்தையும், அந்த நூல்களை அருளிச் செய்த அருளாளர்களைப் பற்றியும் அந்த நூல்களால் நிலைநாட்டப்பட்ட தத்துவமான ஸ்ரீமத் நாராயணனுடைய குணநலன்களைப் போற்றிக் கொண்டு பெரிய பெருமாளுடைய உயிர்நிலை என்று கொண்டாடும்படி திருவரங்கத்திலே பிள்ளை லோகாசார்யர் எழுந்தருளியிருந்த காலத்தில் முகமதியர்களுடைய படைகளால் சூழப்பட்டு அழகிய மணவாளன் திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்க இயலாமல், பெருமாள் நாய்ச்சிமாருடன் புறப்பட்டு, பெரிய பெருமாளுக்குத் திருமுன்பே கல்லால் சுவர் எழுப்பி முன்னே ஒரு விக்ரஹத்தை யெழுந்தருளப் பண்ணி வைத்து சுற்றமெல்லாம் பின் தொடரத் தொலகானமடைந்து..)

முஸ்லிம் படையெடுப்பாளர்கள் வருவதற்கு முன்பே பெருமாளை கோயிலிருந்து எடுத்து, காட்டிற்குள்ளே கொண்டு சென்று விட்டதை விளக்குகிறது இப்பகுதி.

ஸ்ரீரங்கம் துருஷ்காக்ராந்தமாய்க் குடியிருக்கப் போகாமல் (ஸ்ரீரங்கம் முகமதியர்களுடைய படைகளால் சூழப்பட்டு) இந்த இடத்தில் படையெடுப்பைப் பற்றி இவ்வளவுதான் யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் வருகின்றது.

ஸத்ஸம்ப்ரதாயக்ரந்தங்கள்

கி.பி.1865 இல் ஸ்ரீ முடும்பை பார்த்த சாரதி ஐயங்கார், ஸ்ரீ சித்திரகூடம் கந்தாடை திருவேங்கடாசாரியார் ஸ்ரீ வைத்தமாந்திமுடும்பை ஸ்ரீநிவாஸ அய்யங்கார் இவர்களால் பரிசோதிக்கப்பட்டு சென்னை வாணீநிகேதன் அச்சுக்கூடத்தில் 'யதீந்த்ரப்ரவணப்ரபாவம்' பதிப்பிக்கப்பட்டது.

இந்த நூல் கி.பி.1891 இல் ஸ்ரீ சித்திரகூடம் திருவேங்கடாசாரியால் பரிசோதிக்கப்பட்டு சென்னை மெமோரியல் அச்சுக் கூடத்தில் திரும்பவும் பதிப்பிக்கப்பட்டது.

கி.பி.1907 இல் ஸ்ரீதிருவழுந்தார் சடகோபாராமாநுஜா சாரியரால் பரிசோதிக்கப்பட்டு ஸ்ரீகா.வே. திருக்கச்சி நம்பி தாஸரால் சென்னை ஆனந்தா பிரஸ்ஸில் பதிப்பிக்கப்பட்டது.

1865 இல் 1891 இல், 1907 இல் வைணவப் பெரியார்களால் பரிசோதிக்கப்பட்டு பல பதிப்புக்களைக் கண்டிருக்கிறது இந்தநூல்.

வேறுபட்டுக் காணப்படும் தெலுங்குப் பதிப்பு

ஸ்ரீ புதுப்பேர் இளைய வில்லி திருவேங்கடசாரியர் ஸ்ரீ புதுப்பட்டு திருவேங்கடாசாரியர் இவர்களால் பரிசோதிக்கப்பட்டு சென்னை ஸ்ரீ வைஷ்ணவ முத்ரா பகஸன பயாரால் காஞ்சிபுரம் ஸ்ரீநிவாஸமுந்ராக்ஷசாலையில் அச்சிடப்பட்டு ஸௌம்ய வருஷம் 1908 இல் இந்த நூலின் தெலுங்குப் பதிப்பு வெளிவந்துள்ளது.

பலமுறை பல பெரியார்களால் பரிசோதிக்கப்பட்டு (திருத்தப்பட்டு, அல்லது சிறு சிறு மாற்றஞ்செய்யப்பட்டு) வெளிவந்த யதீந்த்ரப்ரவணப்ரபாவம், **நூலின் தமிழ்ப் பதிப்புக்களையும், தெலுங்கு லிபிப் பதிப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் பல இடங்களில் வேறுபட்டுக் காணப்படுவதை எவராவது இல்லையென்று மறுக்க முடியுமா?**

தொடரும் செய்திகள்

படையெடுப்பைப்பற்றி யதீந்த்ரப்ரவணப்ரபாவம் நூலில் பக் 36 இல் தொடர்ந்துவரும் செய்தி இதோ..

இனி கோயில் வ்ருத்தாந்தம்

"பெருமாள் புறப்பட்டருளின பின்பு 'அபிவ்ருக்ஷா பரிம்லாநா' என்னும்படி அயோத்தியென்று மணி நகரமானது அழகழிந்தாற்போல நம்பெருமாள் புறப்பட்டருளின பின்பு அற்ற பற்றர் சுற்றி வாழும் அந்தணீரரங்கம் என்றும் நல்லார்கள் வாழும் நளிரரங்கம் என்றும், தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம் என்னும் படியான கோயிலானது அழகழிந்தது.' (கோயில் அழியவில்லை. கோயிலின் அழகு அழிந்தது என்று தான் குறிப்பிட்டுள்ளார்)

"பின்னும் அங்கே வந்து ஆக்ரமித்தவன் செய்தபடி திட் கொடி மதிளைப் பிடுங்கி கண்ணனூரிலே தனக்கு ஆவரணமாகக் கட்டுவித்து, பின்னையும் அங்கே உபத்ரவங்களைப் பண்ண உபக்ரமிக்க அவ்வளவிலே, சிங்கப் பிரான் என்னும் பேரையுடைய ராய் பெருமாள் திருவிளையாட்டமான அழகிய மணவாளர் காணிய ப்ரஹ்மணராய் தமிழ் விரகரான ஒருவர் **துருஷ்கன் வாசலிலே காரியம் ஆராய்ந்து நின்று அவன் நினைத்தபடி ஒன்றும் செய்யாமல், அவனுக்கு அநுகூலமாகவே சொல்லிக் கொண்டு மதில்கள், மாளிகைகள், கோபுரங்கள், துன்னு மணிமாடங்கள், சாலைகள் தொடக்கமானவற்றையும் செம்பொனாய வருவரையனைய கோயில் மணியனாரையும் காத்து ரக்ஷித்துக் கொண்டு போந்தார்.** அது கண்டு அங்குண்டான ஆசார்யர்கள் எல்லாரும் அவரை அநுவர்த்தித்து நல்வார்த்தை சொல்லிக் கொண்டு போந்தார்கள்." இது யதீந்த்ரப்ரவணப்ரபாவம் தரும் தகவல் ஆகும்.

முஸ்லிம் படையெடுப்பாளர் வருவதற்கு முன்பாகவே பெருமாளையும், நாய்ச்சிமார்களையும் எடுத்துக் கொண்டு காட்டிற்குச் சென்று விட்டார்கள். கோவில் மதில்கள் மாளிகைகள், கோபுரங்கள், மணிமாடங்கள், சாலைகள், ஆகியவற்றை சிங்கப் பிரான், **முஸ்லிம் தளபதிகளுடன் நட்பு கொண்டு அழியாது காத்து விட்டார் என்று இதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எங்காவது 12000 வைஷ்ணவர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற குறிப்பு ஏதும் வருகிறதா?** நல்லோர் முன் இக்கேள்வியை வைக்கிறேன்.

ப்ரபந்நாம்ருதம்

தமிழ் அறியாத வடநாட்டவர்களும் அறிந்து கொள்வதற்காக குருபரம்பரை நூலையே (ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்) பெரும்பாலும் அடியொற்றி ஸ்ரீமதநந்தாசார்யரால் வடமொழி ஸ்லோகரூபமாக இயற்றப் பெற்றது 'ப்ரபந்நாம்ருதம்' ஆகும்.

ஸ்ரீமத நந்தாசார்யர்

ஐந்நூறு வருஷங்களுக்கு முந்தையது என்று கருதப்படும் 'ப்ரபந்நாம்ருதம்' கி.பி.1883 இல் பம்பாய் (மும்பை) வேங்கடேச்வரா பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது. ஸ்ரீமதநந்தாசார்யர் வடமொழியில் எழுதிய அந்த நூல் 'பல பதங்கள் வட மொழி இலக்கண முறைக்கு மாறுபட்டவையாகக் காணப்படுகின்றன. பிரதி எடுத்து எழுதுபவர்களால் ஏற்பட்ட பிழைகளாக இவை இருக்கலாம்.' என்று ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யங்கார் கருத்துரைப்பர். இந்த நூலை தமிழில் அவரே மொழி பெயர்த்துள்ளார். 1983 இல் 'ப்ரபந்நாம்ருத தர்ப்பணம்' என்றும் அந்த நூலின் முதல்பாகம் 778 பக்கங்களில் வெளிவந்தது. அந்த நூலின் இரண்டாம் பாகத்தில், பல பகுதிகள் (மாமுனிகள் ஈறாகவுள்ள) ஆசார்யர்கள் வைபவம் போன்றவை) பிறகு சேர்க்கப்பட்டது. அந்த நூலில் ஸ்ரீரங்கம் முஸ்லிம் படையெடுப்பு பற்றி கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

அதுபற்றி, 'கோயிலொழுகு' பகுதி பாகம்-2 பக்கங்கள் 478-481 இல் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ கூறியுள்ள வாசகங்கள் இதோ.

ப்ரபந்நாம்ருதத்தில் பிற்சேர்க்கையாகக் கீழ்க்கண்ட செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. காஞ்சி மஹாவித்வான் அண்ணங்காசார்யர் ஸ்வாமி தாம் எழுதியருளிய ஸ்ரீதேசிக வைபவப்ராசிகையிலும் இதில் கண்டுள்ள விஷயங்களையே கொடுத்துள்ளார். கோயிலொழுகிலோ அல்லது யந்தீந்த்ரப்ரவன ப்ரபாவத்திலோ காணப்படும் சில செய்திகள் ப்ரபந்நாம்ருதத்தில் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது என்று குறிப்பிட்டுவிட்டு ப்ரபந்நாம்ருதத்தில் விவரிக்கப்படும் செய்திகளைத் தந்துள்ளார். இதோ அந்த வாசகங்கள் . . .

"ஒருநாள் அழகியமணவாளனுடைய உத்ஸவத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்த கணக்கற்ற வைஷ்ணவர்கள் எம்பெருமானை வணங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கிருந்த வைஷ்ணவர் ஒருவர் இத்தனை ஸ்ரீவைஷ்ணவர்களும் அழகிய மணவாளனை இப்படி வணங்குவது போல் பரம பதநாதனை எப்போது ஒரு சமயத்தில் வணங்குவார்களோ?" என்று பரவசமாய்க் கூறினார். அழகியமணவாளன் அர்ச்சகர் மூலமாக 'அப்படியே ஆகட்டும்' என்று நியமித்தார். அதற்குப் பின் மற்றொரு உத்ஸவம் ஸ்ரீரங்கத்தில் நடைபெற்றது. திருக்காவிரியில் எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் உபயநாய்ச்சிமார்களோடுகூடிய அழகிய மணவாளனுக்குத் திருமஞ்சனம் நடத்தினார்கள்.

அப்பொழுது ஒரு ஒற்றன் வந்து 'பெரிய ஸேனையோடு துருஷ்கன் (யவனன்) ஒருவன் வேதப்ராஹ்மணர்களைக் கொள்ளையடித்துக் கொலை செய்து கொண்டு ஸ்ரீரங்கத்தை நோக்கி வருகிறான் என்றான்.

இதைக் கேள்வியுற்ற பிள்ளை லோகாசாரியர் முதலான பெரியவர்கள் துணுக்குற்று அனைவரும் கூடி ஆலோசித்து அழகியமணவாளனிடமே நாம் செய்ய வேண்டியதைப் பற்றிக் கேட்டு விடுவோம் என்று தீர்மானித்து, 'இங்கேயே இருக்க வேண்டும் அல்லது 'சென்றுவிட வேண்டும்' என்று இரு ஓலைகளில் எழுதி, திருவுள்ளச் சீட்டாகப் போட்டனர். அப்போது பெருமாள் 'இருக்க வேண்டும்' என்னும் சீட்டையே அவர்களுக்கு அளித்தார். அவர்களும் பெருமாளுக்குச் செய்ய வேண்டிய கைங்கர்யங்களைச் செய்து கொண்டு அங்கேயே இருந்தார்கள். சில நாட்கள் கழித்து ஒரு ஒற்றன் அந்தத் துருஷ்கன் திருக்கண்டியூர் வரை வந்து விட்டான், என்றும் விரைவிலேயே ஸ்ரீரங்கம் வந்து விடுவான் என்றும், அதைக் கேட்டு அவர் ஸ்ரீரங்கத்தை ரக்ஷிக்கும் பொறுப்பை வேதாந்ததேசிகரிடம் வைத்து, நாய்ச்சிமார்களுடன் அழகியமணவாளனைத் திருக்கோட்டியூர் செல்லும் மார்க்கத்தில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு சென்றார். வேதாந்தசார்யர் முதலானவர்கள் ஸ்ரீரங்கத்தில் கோட்டைவாசலை அடைத்துவிட்டுக் கோயிலை ரக்ஷித்துக் கொண்டு இருந்தார்கள். கர்ப்பக்ருஹத்தில் அகண்ட தீபத்தை ஏற்றி அதன் வாயில்களைக் கற்சுவர் திரையிட்டு மறைத்தனர். வேதாந்த தேசிகரும் ஸ்ரீரங்கத்தை விட்டு ஸ்ரீவைஷ்ணவர்களோடு வெளியேறுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

அந்தத் துருஷ்கன் திருக்கண்டியூரிலிருந்து தெய்வ விக்ரஹங்களைக் கொள்ளையடித்து கொண்டு ஸ்ரீரங்கத்தை நோக்கி விரைவில் வந்தான். அப்பொழுது முதியவரான ஸுதர்சன பட்டர் வேதாந்தாசார்யரிடம் வந்து தம்முடைய இரு பிள்ளைகளையும் ச்ருதப்ரகாசிகை ஸ்ரீகோசத்தையும் ரக்ஷிக்கும்படி சொல்லி அளித்தார். வேதாந்ததேசிகரும், அவ்வண்ணமே செய்தார். துலுக்கப்படை ஸ்ரீரங்கம் கோபுரவாயில் கதவுகளையெல்லாம் தகர்த்துக் கொண்டு உள்ளே நுழைந்தது. அங்கிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு ஒரே சமயத்தில் பரமபதம் அடைந்து பரமபதநாதனை தரிசித்தனர். வேதாந்த தேசிகர் ச்ருதப்ரகாசியையோடு கூடிய ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோசத்தையும் ஸுதர்சன பட்டருடைய இரு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு, மேல்கோட்டைத் திருநாராயண புரத்துக்குச் சென்றார். லோகாசாரியரால் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போகப்பட்ட பிராட்டிமாரோடு கூடிய

அழகியமணவாளன் காட்டு வழியிலே பாண்டிய தேசத்திற்குச் சென்றார். **அழகிய மணவாளனுடைய தனம் அனைத்தும் கள்ளர்களால் அபகரிக்கப்பட்டது. கூடச் சென்ற லோகாசாரியர் கலங்காமல் தம்மிடமிருந்த தனத்தையும் அவர்களிடம் கொடுத்தார்.** ஜ்யோதிஷ்மதீ புரத்தை அடைந்தவுடன் ஸ்ரீரங்கத்தில் நடந்த விருந்தாந்தத்தைக் கேள்விப்பட்டுப் பொறுக்க மாட்டாதவராய், பிள்ளை லோகாசாரியர் பரமபதத்தை அடைந்தார்.

பிள்ளைலோகாசார்யரின் பிரிவினால் மிக வருந்திய அழகிய மணவாளன் அங்கிருந்து அழகர்மலைக்குச் சென்றார். அங்கே தம் பெயரில் ஒரு கிணற்றை ஏற்படுத்திவிட்டு அழகிய மணவாளன் பாண்டிய மண்டலத்திலிருந்து சேர மண்டலத்திற்குச் சென்றார். அந்த மலைநாட்டிலுள்ள பதினான்கு திவ்ய தேசங்களையும் கடாக்ஷித்துவிட்டு, நாய்ச்சிமாருடன்கூடிய அழகிய மணவாளன் மேலக்கோட்டை திருநாராயணபுரம் சென்றார். மேலக்கோட்டையில் செல்லப்பிள்ளையோடு கூடச் சில நாட்கள் இருந்துவிட்டு நாய்ச்சிமாரோடு கூடிய அழகிய மணவாளன் திருமலைக்கு வந்தார். திருவேங்கட மலையில் ஸ்ரீநிவாஸனாலே ஆராதிக்கப்பட்ட, அழகிய மணவாளன் வழிநடந்த களைப்பு தீர அங்கு சிலகாலம் இருந்தார். அப்பொழுது கம்ஸனுக்கு அக்ரூரன் அமைந்தது போலே ந்ருஸிம்ஹதேவன் (சிங்கப்பிரான்) என்னும் அந்தணர் அந்தத் துலுக்கனுக்கு வேண்டியவராக அமைந்தார். அவர்கள் அவனைச் சமயபுரத்திற்கு அழைத்துச் சென்று, ஸ்ரீரங்கத்தை ஆளும் அதிகாரத்தைத் தமக்கு அவனிடமிருந்து பெற்றுக் கொண்டார். கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியிருந்த வைஷ்ணவர்கள் ஸ்ரீரங்கத்திற்கு வந்து வாழத் தொடங்கினார்கள். அவர்களையும் ஸ்ரீரங்கத்தையும் ந்ருஸிம்ஹதேவர் ரக்ஷித்து வந்தார்."

இவ்வாறாக அழகிய மணவாளன் ஊரைவிட்டு அகன்ற நிகழ்ச்சி ப்ரபந்தநாம்ருதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. (ஒவ்வொரு நூலிலும் செய்திகள் எவ்வளவு மாறுபட்டுக் கூறப்படுகின்றன)

உபதேச ரத்தினமாலை

மணவாள மாமுனிகள் (1370-1443) 73 வெண்பாக்களில் எழுதிய நூல் உபதேசரத்தினமாலை. கி.பி.15-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூலுக்குப் பிள்ளை லோகஞ்சீயர் உரைதந்துள்ளார்.

உபதேசரத்தினமாலை 50-வது பாடலுக்கு பிள்ளை லோகம் ஜீயருடைய வ்யாக்யானம் (விரிவுரை) இதோ...

'முன்பொரு காலத்திலே ஒரு கலபையிலே க்ரூரராயிருப்பார் சிலர் (இந்த வரிகளுக்குத் தான், முகம்மதியர்களுடைய

படையெடுப்பின் போது என்று விளக்கம் தரப்படுகிறது.) பெருமாளையும் அத்தேசத்திலுண்டான எம் பெருமான்களையும் கொண்டு போந்து, "கெட்டேன்" என்னும் படி வாரி வடக்கே கொண்டு போக..."

வைணவ நூல்களான, 'குருபரம்பராப்ரபாவம்', 'யதீந்திரப்ரவணப்ரபாவம்', 'ப்ரபந்நாம்ருதம்', 'உபதேசரத்தின மாலை' இவைகளில் ஸ்ரீரங்கப் படையெடுப்பைப் பற்றி வரும் இடங்களில் 12000 பேர் கொல்லப்பட்டார்கள் என்று எங்கேயாவது வருகிறதா? இல்லை! இல்லவே இல்லை.

கோயிலொழுகு

கோயிலொழுகில், **'துலுக்கர் சமயபுரம் கடந்து வருகிறதைக் கேட்டு, ஸ்ரீரங்கராஜநாதன் திருவோலக்கத்திலே எழுந்தருளியிருக்கிற பன்னீராயிரம் ஸ்வாமிகளையும் திருவோலக்கம் குலையாமலிருக்கும்படி நியமித்து . . . துலுக்கரும் திரையில் புகுந்து விக்ரஹத்தைக் காணாமல, பன்றியாழ்வானை அபசாரப்பட்டு, ஸ்வாமிகளனைவரையும் திருமுடி திருத்தி, கோவிலிலே பிரவேசித்து'** *என்று வருகிறது.*

இங்கு தான் 12000 என்று ஒரே ஒரு இடத்தில் வருகிறது. இனி 12000 என்ற எண்ணுக்கும், வைஷ்ணவத்திற்கும் உள்ள தொடர்பை பற்றிய குறிப்புக்களைக் கோடிட்டுக் காட்ட வேண்டியது கடமையாகிறது.

ஆழ்வார்கள் 12

பொய்கையார், பூதத்தார், பேயார், திருமங்கைமன்னர், குலசேகரர், ஆண்டாள், பெரியாழ்வார், திருமழிசை ஆழ்வார், தொண்டரடிப் பொடியார், திருப்பாணாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியார் என ஆழ்வார்கள் 12 பேர்.

திருவாய்மொழி – பன்னிராயிரப்படி

அன்போடழகிய மணவாளச்சீயர்
பின் போருங் கற்றறிந்து பேசுகைக்காத் – தம் பெரிய
போதமுடன் மாறன் மறையின் பொருளுரைத்த
சேதமில் பன்னீராயிரம்

என்பது உபதேச ரத்தினமாலை 45 வது செய்யுள் ஆகும்.

வாதிகேசரி அழகிய மணவாளச் சீயர் அருளிய **'பன்னீராயிரப்படி எனும் திருவாய்மொழி வியாக்யானம்'** *உள்ளது.*

ஸ்ரீபாகவதம்

ஸ்ரீபாகவதம் என்னும் நூல் 12000 கிரந்தங்களை உடையது. (B.R. புருஷோத்தம நாயுடு, திருவாய்மொழி, வால்யூம் 1, 1952, சென்னை, பக்கம் 38, முன்னுரையில்)

கம்பராமாயணம் – 12000 செய்யுட்கள்

கம்பர் முற்றிலும் வால்மீகியை ஆதாரமாகக் கொண்டு 12000 செய்யுட்களில் ராமகாதையைப் பாடியுள்ளார். (ராமன் எத்தனை ராமன்? ராமாயணம் எத்தனை ராமாயணம் ஸ்ரீ வித்யாஞான பாஸ்கரநஜன் எஸ். நடராஜன், 1981 சென்னை, ப98)

வால்மீகி ராமாயணம்

சுமார் 500 சருக்கங்களும், 24000 சுலோகங்களும் கொண்டு தற்காலம் வழங்கும் வால்மீகி, ராமாயணம், சுமார் 6000 சுலோகங்களுக்குட்பட்ட ஆதி இராமாயணம் ஆகும். (அதாவது 6000 x 2 = 12000 வரிகள்) பிற்காலங்களில் வந்த கவிகளும் மற்றவர்களும் இராமாயணத்தில் பல இடைச் செருகல்களைச் செய்து அதை பெருக்கி விட்டனர் என்று யாக்கோபி கருதுகிறார் (கலைக்களஞ்சியம், தொகுதி இரண்டு, சென்னை, 1955, ப70)

இராமாநுசரும் பன்னீராயிரமும்

இராமாநுசர் மைசூர் முதலிய பிரதேசங்களில் 12 ஆண்டுகள் வைஷ்ணவ மதப் பிரச்சாரம் செய்தார்.

பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவம்

இராமநுசரிடம் வேற்று மதத்தவர்கள் வந்து கூறுவதாவது:

'எங்களை ஜயித்தன்றோ நீரிப்படி செய்யலாவதென்று பன்னீராயிரம் பேர்க்ஷமணர்களேக (சமணர்கள் ஏக) காலத்திலே வந்து தர்க்கிக்கத் தொடங்க . . .'

யாவரும் அவர்களை ஜெயித்துவிட இங்கே 12000 சமணர்களை இராமாநுஜர் வாதில் வென்றதாக வருகிறது.

ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்

"எங்கள் ஸிஷ்யனை நீர் இங்ஙனே மயக்கி ஸிஷ்யனாக்கிக் கொள்ளும் போது எங்களை ஜயித்தன்றோ செய்யலாவது?" என்று பன்னீராயிரம் க்ஷபணர் ஏக காலத்தில் வந்து தர்க்கிக்கத் தொடங்க . . . *அவர்களை வாய் மூடு வித்து ஜயிக்க? (பின் பழகிய பெருமாள் சீயரின் குருபரம்பராப்ரபாவம், 1975 பதிப்பு பக்கங்கள் 248-249)*

ராமானுஜர் 12000 சமணர்களை வென்ற செய்தி இவ்வாறு தெரிவிக்கப்படுகிறது.

மதுரகவி 1200 தடவை

நம்மாழ்வார் பிறந்த குருகூருக்கு, நாதமுனி புறப்பட்டார். குருகூரில் விஷ்ணுவை வழிபட்ட பிறகு நம்மாழ்வாரைச் சந்திக்க விரும்பி புளிய மரத்தின் அடியில் நாதமுனி அமர்ந்தார். சடகோபனின் கற்பனை உருவத்தையேனும் கானதனக்கும் போதிய யோக சக்தி இல்லாதிருப்பதை உணர்ந்து நாதமுனி வருத்தமும் ஏமாற்றமும் அடைந்தார். பிறகு மதுரகவி தன்னுடைய குருவான சடகோபனின் மீது பாடிய பாசுரத்தை **12000 தடவை ஒப்புவிக்கும் திட்டத்தை** *அவர் மேற்கொண்டார். (K.A. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், புத்தகம் 2, சென்னை, 1989, ப. 836)*

ஸ்ரீகாஞ்சிப்ரதிவாதி பயங்கரம் மஹாமஹிமோபாத்யாய அண்ணங்கராசார்யஸ்வாமி

அண்ணங்கராசார்யஸ்வாமி எழுதிய குருபரம் பராப்ரபாவஸாரம் நூலில் (1975) இரண்டாவது பாகமான, பூர்வாசார்ய வைபவம் எனும் பகுதியில் பக்கங்கள் 2, 3 இல் வரும் செய்தி இதோ . . .

நாதமுனிகள் ஆழ்வார்திருநகரிக்கு வருகிறார். அங்கு "இவ்விடத்தில் ஆயிரமும் தெரிந்தவர்களுண்டோ? ஸ்ரீ கோசமாவது உண்டோ? என்று கேட்க, அதற்கு அவர் சொன்னதாவது; திருவாய் மொழியும் மற்றுமுண்டான திவ்யப்ரபந்தங்களும் பிரசாரம் மறைந்து நெடுநாளாய் விட்டது. ஆனாலும் எங்கள் குலக்கொழுந்தான ஸ்ரீ மதுரகவிகள் அருளிச் செய்த கண்ணிண் சிறுத்தாம்பு என்னும் பிரபந்தமுண்டு. அதனை ஆழ்வார் திருமுன்பே ஆழ்வார் திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டு நியமத்துடனே **பன்னீராயிரம் விசை ஜபித்தால் ஆழ்வார்** *ப்ரஸந்நராகி அருள் புரியக் கூடுமென்று கேட்டிருந்ததுண்டு" என்றார். இவரும் அதிகரித்துத் திருப்புளியாழ்வாரடியிலே நியமமுடன்* **பன்னீராயிரம்** *முறை அந்தப்பிரபந்தத்தை யநுஸந்தித்துத் தலைக்கட்டினவாறே" . . . . என்று வருகிறது.*

ஆக வைணவத்தில் 12000 என்பது ஒரு குறியீடு போலவே தோன்றுகிறது.

எனவே தான் வைஷ்ணவ நிகழ்ச்சிகள் பலவற்றில் பல இடங்களில் 12000, 12000 என்று வந்து கொண்டேயிருக்கிறது. இதற்குப் பல சான்றுகளை இன்னும் காட்டிடவும் முடியும்.

இதனையே 'கோயிலொழுகில்' ஏடு எழுதுவோரும் மனதில் தாங்கிய நிலையில், 12000 வைஷ்ணவர்கள் கொல்லப்பட்டதாக எழுதியிருக்கக் கூடுமென்றே தோன்றுகிறது. வேறு எந்த வைணவ நூல்களிலும் 12000 பேர் கொல்லப்பட்டதாக குறிப்புக்கள் ஏதும் இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது.

4

போதயானர், குகதேவர், திரமிடாசாரியர் முதலிய பலரும் தொட்டுச் சென்ற தத்துவம் 'விசிஷ்டாத்வைதம்' நாத முனிகளாலும் அறியப்பட்ட கொள்கை இது.

'விசிஷ்டாத்வைதம்' என்பது 'சித்து', 'அசித்து', 'ஈசுவரன்' என்ற முப்பொருள்கள் உண்டு என உரைக்கும். சித்து என்பது உயிர்ப்பொருள்: அசித்து என்பது உயிரில்லாத பொருள். இவ்விரண்டினையும் உடலாகக் கொண்டுதான் உயிராக விளங்கும் **பரம்பொருள் இரண்டில்லை; ஒன்றே ஆகும் என்பது இதன்** அடிப்படை.

'உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்' என நம்மாழ்வார் பேசும் உண்மையின் விரிவாக்கம் விசிஷ்டாத்வைதம். இக்கொள்கைக்கு உருவும் திருவும் தந்தவர் இராமாநுஜர்.

இராமாநுஜர்

சென்னைக்கு அருகில் ஸ்ரீபெரும்புதூர் சோமயாஜீயர்-பூமிப்பிராட்டியார் தம்பதியருக்குப் பிறந்தவர் இராமாநுஜர். (கி.பி.1017. சாலிவாகன சகா 939) (120 ஆண்டுகள் இப்புவியில் வாழ்ந்து கி.பி. 1137-இல் மறைந்தவர்)

காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள திருப்புட்குழியாதவப் பிரகாசரிடம் கல்வி பயின்றது கி.பி.1033. ஸ்ரீரங்கத்திற்கு முதன் முறையாக வருகை தந்தது கி.பி.1042.

சோழ மன்னரது செயல்களால் அங்கிருந்து மைசூர் நோக்கிப் பயணம் கி.பி.1096 ஹொய்சாள அரசர் பிட்டி தேவா (Bitti Deva)வை விஷ்ணுவர்த்தனாக (Vishnu - Vardhana) மாற்றியது கி.பி.1098. இதற்குப் பின் இராமாநுஜர் தம் சீடர்களுடன் திரு நாராயணபுரத்திற்குச் சென்றார்.

மேல் கோட்டை

'யதுகிரி' என்றும், யாதவாத்ரி என்றும் அழைக்கப்படும் திருநாராயணபுரத்திற்கு இப்போதுள்ள பெயர் 'மேல் கோட்டை'.

துளசிக் காட்டில்

'ஒரு சமயம் இங்கேயுள்ள துளசிக் காட்டில் போய்க் கொண்டிருந்த போது இராமாநுஜர் ஒரு புற்றுக்குள்ளே விக்கிரகம் ஒன்றைக் கண்டு பிடித்தார். அது பெருமாளின் விக்கிரகம். முஸ்லிம்களின் ஒரு படையெடுப்பு நிகழ்ந்த போது பக்தர்கள் இந்த விக்கிரகத்தை இங்கே மறைத்து விட்டுப் போனதாக இவ்வூரிலுள்ள முதியவர்கள் செய்தி சொன்னார்கள். அங்கு கோயில் அமைக்கப்பட்டது. திரு நாராணயபுரத்துப் பெருமாளைத் திருநாராயணன் என்ற பெயரால் அழைத்து வழிபட்டார்கள்.

இப்பெருமாளுக்கு விழாக்கள் நடத்த வேண்டும் என்று தீர்மானித்தார் இராமாநுஜர். ஆனால் உத்ஸவ விக்கிரகம் காணப்படவில்லை. 'ராமப்ரியர்' என்ற அந்த உத்ஸவ விக்கிரகம் **டில்லியில் துருஷ்கராஜக்ருஹத்திலே இருப்பதாகத் தெரிய வந்தது** (பி.ஸ்ரீ.ஸ்ரீராமாநுஜர். சுதேசமித்திரன் வெளியீடு, ஆகஸ்ட் 1964, பக்கங்கள் 209, 210) (இந்த நூல் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூலாகும்.)

உற்சவமூர்த்தி

தென்னிந்தியாவில் ஒவ்வொரு கோவிலிலும் பரமனுக்கு இரண்டு மூர்த்தியின் (சிலைகள்) உண்டு. ஒன்று கோவிலுக்கு வெளியே செல்லாமல் கருவறையிலேயே விளங்கும் மூல விக்கிரகம்; மற்றொன்று திருவிழாக் காலங்களில் வாகனங்களில் வீற்றிருந்து கோவிலுக்கு வெளியே எழுந்தருளும் உற்சவ மூர்த்தி. ராமப்ரியர் என்ற உற்சவ மூர்த்தியைப் பெற்றிட இராமாநுஜர் டில்லி சென்றார் என்று வைணவ நூல்கள் சான்று பகர்கின்றன.

குருபரம்பராப்ரபாவம்

"அப்போது இவர் (ராமாநுஜர்) ஸவப்நத்திலே (கனவிலே) திருநாராயணப் பெருமாள் எழுந்தருளி நம் உத்ஸவ பேரமான ராமப்ரியம் இப்போது டில்லியேற எழுந்தருளித் துருஷ்கராஜா (முஸ்லிம் மன்னர்) க்ருஹத்திலே லீலை கொண்டாடி எழுந்தருளியிருக்கிறார். "அங்கேறப்போய் எழுந்தருளுவித்துக் கொண்டு வாரீர்" என்று திருவுள்ளமாயருள உடையவரும் (இராமாநுஜரும்) ப்ராத: காலமானவாறே எழுந்திருந்து ஸ்வப்நத்தை முதலிகளுடன் ஆலோசித்துக் கொண்டு பயணகதியிலே த்வரித்து டில்லியேற எழுந்தருளினவாறே, டில்லி புரிந்த்ரனான ராஜாவும் இவரைக் கண்டு 'ப்ரத்யுத்தாநப்ரணதி பூர்வகமாக பஹுபசாரம் செய்து எழுந்தருளின கார்யம் அருளிச்

செய்ய வேனும்' என்று விண்ணப்பஞ் செய்ய உடையவரும் எங்கள் குல தெய்வமான ராமப்ரியா இங்கே எழுந்தருளியிருக்கிறார். அவரைத் தரவேணும் என்று அபேஷிக்க, ராஜாவும் அப்படியே செய்கிறோம்' என்று கொள்ளை கொண்டு சிறை வைத்த எம் பெருமான்கள் சிறைச் சாலையை ஸோதித்துக் கொள்ளீர், என்று அப்பணையிட்டு விட இவரும் அங்கேற எழுந்தருளி ஸோதித்து திருநாரணர்வடிவுக்கு ஒத்திராமையாலே, இத்தேவர்கள் ஒருவருமன்று, என்று ராமப்பிரியரை அவர்களில் கானாமையாலே முசித்துக் கிடக்க, அன்றிரவில் ராமப்பிரியர் இவர் (ராமாநுஜர்) ஸ்வப்நத்திலே (கனவிலே) எழுந்தருளி, நீர் முசிப்பானேன்' நாம் அவன் (ராஜா) மகளாலே பூஜை கொண்டு அவள் ஸஜ்ஜாக்ருஹத்திலே இரா நின்றோம்; நம்மைக் கொண்டு போம்படியாக அங்கே வாரீர்" என்று அருளிச் செய்ய, உடைய வரும் இச்செய்தியை ராஜாவுக்கு அறிவிக்க ...

(பின் பழகிய பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், ஸ்ரீ. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பதிப்பு, 1975. பக்.252) டில்லி முஸ்லிம் அரசரிடமிருந்து இராமாநுஜர் ராமப்ரியர் சிலையைப் பெற்று வந்தார். ராமாநுஜர் மேல் கோட்டைக்குச் சென்று, உற்சவ விக்கிரகமான செல்வப் பிள்ளையைக் கோவிலுக்குள் ஒரு ரகசியமான இடத்தில் பிரதிஷ்டை செய்தார்.

அரசகுமாரி

"அரண்மனையில் அரசகுமாரி தான் அன்பு செலுத்திய விக்கிரகத்தைச் சில அந்தணர்கள் வந்து எடுத்துப் போனதைக் கேள்வியுற்று மிகவும் வருந்தினாள். அவளுடைய மிதமிஞ்சிய வருத்தத்தைத் தந்தையினால் ஆறுதல் சொல்லி அடக்க முடியவில்லை. நாளுக்கு நாள் அந்தப் பிரிவிலேயே இளைத்து அவள் நோய் வாய்ப்பட்டாள். இதனால் அச்சமுற்ற அரசன், தன் சிப்பாய்களைக் கூப்பிட்டு, நீங்கள் உடனே போய், அந்த அந்தணர்களிடமிருந்து விக்கிரகத்தை மீட்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டார்.

அப்பொழுது அரசகுமாரி "அப்பா! நானும் இவர்களுடன் செல்ல அனுமதி கொடுங்கள்" என்றார். அன்புள்ள அரசன் அவளது வேண்டுகோளுக்கு இசைந்தார். உடனே அரசகுமாரி நிறைய வேலைக்காரிகளுடனும், பணியாட்களுடனும், அலங்காரப் பல்லக்கில் சென்றாள். இதற்குள் அரசன் மகளைக் காதலித்து வந்த குபேர் என்ற அரசகுமாரன் நெடுநாளாக அவளிடம் சம்மதம் பெற்று அவளை மணக்க நினைத்திருந்தான்.

பீபீலகிமார்

அரச குமாரி பீபீலகிமார் அந்த விக்கிரகத்தின் பின்னே பைத்தியம் பிடித்தவள் போலப் போவதைக் கண்டு, அவனும் அவளைத் தொடர்ந்தாள்.

... தன் தந்தையின் அரசின் எல்லையைக் கடந்து வந்தபிறகும் அந்த விக்கிரகம் கிடைக்காததால் அவள் உயிர் விடத் துணிந்தாள் . . . (பல சிரமங்களைக் கடந்து), இப்படிப் பல நாள் கடந்து அவள் மேல் கோட்டை போய்ச் சேர்ந்தாள். முஸ்லிம் குலத்தில் பிறந்தவளாயினும் அவளைக் கோவிலுக்குள் செல்ல அனுமதித்தனர். (அங்கு அவள் மரணித்தாள்) இந்தத் துன்ப உலகில் பீபீலகிமாரின் யாத்திரை இப்படி முடிவுற்றது. இன்றைக்கும் கூட அந்த அரச குமாரியின் விக்கிரகம் சில வைணவக் கோயில்களில் வழிபடப் பெறுகிறது."

சுவாமி ராம கிருஷ்ணானந்தா

ஸ்ரீ ராமானுஜர் வாழ்க்கை வரலாறு நூலினை வங்க மொழியில் எழுதியவர் சுவாமி ராமகிருஷ்ணானந்தா (Swami Ramakrishnanda). *அதனைத் தமிழில் கா. ஸ்ரீ.ஸ்ரீ. மொழி பெயர்த்துள்ளார். 1992 இல் சென்னை ஸ்ரீ ராம கிருஷ்ணமடம் இரண்டாம் பதிப்பாக இதனை வெளியிட்டுள்ளது. அந்த நூலில் பக்கங்கள் 288 முதல் 295 வரையில் விவரிக்கப்பட்டிருக்கும் கதைச் சுருக்கத்தைத் தான் மேலே தந்துள்ளேன்.*

பன்னிராயிரப்படி குருபரம்பராப்ரபாவம்

நம்முடைய உத்ஸவ பேரமான ராமப்ரியரிப் போது லீலை கொண்டாடி டில்லியேற வெழுந்தருளித் துருஷ்கராஜ (முஸ்லிம் அரசர்) க்ருஹத்திலே இருக்கிறார். அங்கேறப்போ யெழுந்தருளுவித்துக் கொண்டு வருமென்று திருவுள்ளமாயருள உடையவரும் (ராமாநுஜர்) ப்ராத: காலமான வாறே எழுந்திருந்து, ஸ்வப்னத்தை முதலிகளுடனாலோ சித்துப் பயணகதியிலே த்வரித்துக கொண்டு புறப்பட்டு டில்லி யேற... (பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவம் பக்கம் 373)

இராமாநுஜரது வரலாற்று நூல்கள்

"ராமாநுஜர் வரலாற்றைப் பற்றிக் கூறும் பழம் பெரும் நூல்களாகிய குருபரம்பராப்ரபாவம் (ஆறாயிரப்படி, பன்னீராயிப்படி) யதிராஜ வைபவம், ராமாநுஜசம்பு, ராமாநுஜ திவ்ய சரிதம், திவ்ய சூரி சரிதம், யதிராஜஸப்ததி, யதிராஜ வம்ஸதி, கோயிலொழுகு ஆகியவை. **"ராமாநுஜர் என்ற ஒரு மாபெரும் மனிதரைப் பக்திப் பரவசத்தோடு பார்ப்பதினால் சரித்திரம்**

அவரவர்களுடைய கற்பனை விரிவாக்கங்களாவும் பரிணாமம் அடைந்திருப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்பர் இந்திரா பார்த்தசாரதி (ராமாநுஜர் நாடகம், 1997, முன்னுரையில்)

தி. பாஷ்யம்

1977 இல் தி. பாஷ்யம் எழுதி வெளிவந்த நூல் இராமாநுச வைபவம். அதில் பக்.117 இல் இருந்து சில வரிகள் இதோ.

"இராமப்பிரியர் என்னும் உற்சவ மூர்த்தி டில்லி பாதுஷாவால் களவாடப்பட்டு, அவன் அரண்மனையில் மீட்பாரில்லாமல் அடைப்பட்டுக் கிடக்கிறது." இராமாநுஜர் டில்லி சென்றார். மன்னனிடம் முறையிட்டு அதனைப் பெற்றுத் திரும்பினார்.

கா.ர.கோவிந்தராச முதலியார்

1950 இல் பேராசிரியர் கா.ர.கோவிந்தராச முதலியார் எழுதி வெளிவந்த நூல் 'ஆழ்வார்கள் வழிக்குரவர் வரலாறு', அதில் பக்கங்கள் 144-145 களில் இருந்து சில வரிகள் இதோ...

"...இராமப்பிரியர் இப்போது மகம்மதிய சக்கரவர்த்தியாகிய டில்லி வேந்தன் மனையிலே இருக்கின்றனர்.

அங்குச் சென்று, அவ்வரசனிடத்தினின்று, அவரைப் பெற்று வருக என்றருளினன்... இரமாநுசர் அம்முதலிகளோடு புறப்பட்டுச் சென்று டில்லியின்கண் உள்ள அவ்வேந்தனது அரண்மனையை அனுகி...

பின்பு மன்னரைச் சந்தித்தனர்; சிலையைப் பெற்று வந்தனர். இராமாநுசர் டில்லிக்குச் சென்று வந்த வரலாற்றைக் கேட்டு அவரைப் புகழ்ந்து செல்லப்பிளையை (விக்கிரகத்தை) இராமாநுசருடைய திருக்குமாரர் என்று போற்றினார்கள்.

ஆர். பார்த்தசாரதி

நேஷனல் புக் டிரஸ்ட் நிறுவனத்தார் வெளியிட்ட வாழ்க்கை வரலாற்று வரிசை நூலில் ஆர். பார்த்தசாரதி எழுதிய நூல் இராமாநுஜர். அதில் பக்கம் 73, 74 இல் சில வரிகள் இதோ . . .

"தில்லி முஸ்லிம் அரசர்களின் தாக்குதலின் போது விக்கிரகம் ஒன்றை எடுத்துச் சென்று விட்டார்கள்; இராமாநுஜர் இதன் காரணமாக தில்லிக்குச் சென்றாரென்ற கதை கேட்கப்படுகிறது. முஸ்லிம் அரசரின் மகள் அந்த விக்கிரகத்தின் மீது தீவிர மோகங்கொண்டு அதைத்தன் அந்தப் புரத்தில் வைத்துப் போற்றி வந்தாள். இராமாநுஜர் முஸ்லிம் அரசருடன் வாதாடி அந்த விக்கிரகத்தை மீண்டும் மைசூருக்கு கொண்டு வந்தார்."

திரு. எஸ். நாராயண அய்யங்கார்

'சேஷாவதார ஸ்ரீ ராமாநுஜாசார்ய' என்ற இந்தி நூலினை ஸ்ரீ வில்லிபுத்தூர் கிடாம்பியாரது மரபினரான வழக்கறிஞர் திரு. கே.எஸ். நாராயண ஐயங்கார் தமிழில் மொழிபெயர்த்து, 'ஸ்ரீராமாநுஜ வைபவம்' எனும் நூலாக கி.பி.1962 இல் வெளியிட்டார். 226 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் (பிழைதிருத்தம் 12 பக்கங்கள்.) பக்கங்கள் 176 முதல் 184 வரை டில்லி முகமதிய அரசர் - சிலை - இராமாநுஜர் சென்று மீட்டு வந்த வரலாறு கூறப்பட்டுள்ளது.

எஸ். கல்யாணராம ஐயங்கார்

1978 இல், 430 பக்கங்களைக் கொண்டு வெளிவந்த நூல் ஸ்ரீ 'இராமாநுஜர் சரித்திர ஆராய்ச்சி மகிமை'. இது எஸ். கல்யாணராம ஐயங்காரால் எழுதப்பட்டது. அதில் பக்கம் 331; "ஸ்ரீயதிராஜ ராமானுஜர், உத்ஸவ மூர்த்தியான செல்லப்பிள்ளை அர்ச்சாவதார விக்கிரகத்தை டில்லி, சுல்தான் சக்கரவர்த்தியிடமிருந்து கிடைக்கப்பெற்று திரு நாராயணபுரம் வந்தடைதல் - வைபவம் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

வரலாற்றின் வெளிச்சத்தில்

வைணவத்தின் பழம்பெரும் நூல்கள், அதையொட்டி எழுதப்பட்டு வரும் தற்காலத்திய நூல்களும், ஸ்ரீ ராமாநுஜர் கிபி. 1098 இல் மேலக் கோட்டையலிருந்து, டில்லி சென்று, அங்கு முஸ்லிம் மன்னரால் கவர்ந்து செல்லப்பட்ட ராமப்ரியர் சிலையைத் திரும்பப் பெற்று வந்தார். அதனை மிகுந்த பிரியத்துடன் வைத்திருந்த முஸ்லிம் இளவரசி, பின் தொடர்ந்து வந்து மேலக் கோட்டையில் மறைவைத் தழுவினாள். இன்றும் அங்கு இளவரசியையும் வணங்குகிறார்கள் என்று ஏகோபித்துக் கூறப்பட்டுள்ளது.

இதில் இராமாநுஜரின் சிறப்பைச் சொல்வதற்காக வைணவ நூல்கள், இலக்கியங்கள் எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்வதில் யாருக்கும் சிரமம் இருக்க முடியாது. அது அவர்களது விருப்பம்.

'லக்கும் தீனுக்கும் வலியதீன்' என்ற திருகுர்ஆன் மொழியில், 'அவர்கள் மார்க்கம் அவர்களுக்கு, உங்கள் மார்க்கம் உங்களுக்கு' என்பது இஸ்லாம் வழங்கும் சமயப் பொறையாகும்.

டில்லியில் முஸ்லிம் மன்னராட்சி இருந்ததா?

இராமாநுஜர் கி.பி. 1098 இல் டில்லிக்குச் சென்ற போது முஸ்லிம் மன்னர் அங்கு இருந்தாரா? அங்கு முஸ்லிம் ஆட்சி இருந்ததா? இல்லை! இல்லவே இல்லை.

பாரதிய வித்யா பவன் – 9373 பக்கங்கள்

'The History and Culture of The Indian People' *'இந்திய மக்களின் வரலாறும் கலாச்சாரமும்' என்ற தலைப்பில் பாரதிய வித்யாபவன்* (Bhartiya Vidyabhavan)" *பதினொரு தொகுதிகளை 9373 பக்கங்களில் வெளியிட்டுள்ளது. (முன்னுரை, பின்னால் புகைப்படங்கள் இவைகளின் எண்ணிக்கை பக்கங்களைச் சேர்த்திடவில்லை)*

The Struggle For Empire

அதில் ஐந்தாவது தொகுதி பேரரசிற்கான கலகம் 'The Struggle for Empire' *ஆகும். அது 940 பக்கங்களும், மேலும் பல படங்களையும் கொண்டது.*

அதில் பக்கம் 52 இல் . . .

'Northern India During 11th and 12th Centuries' *என்ற* D.C. *கங்குலி* (Ganguly)*யின் கட்டுரையில்* **அப்போது டில்லியை அரசாட்சி புரிந்தது தோமரா வமிசத்தினர் என்று தெளிவுபடக் கூறியுள்ளனர்.**

'As about this time the Tomaras were ruling Independently in Delhi'

வங்க மொழியில் வந்த நூலில்

ஸ்ரீராமாநுஜர் வாழ்க்கை வரலாறு (Life of Sri Ramanuja) *என்ற ஆங்கில நூல், வங்களாத்தில் சுவாமி ராமகிருஷ்ணானந்தர் எழுதிய* 'Sri Ramanuja Charit' *என்ற நூலிலிருந்து மொழியெர்ப்புச் செய்யப்பட்டு, சென்னை ஸ்ரீராமகிருஷ்ணமடம் சார்பில் வெளியிடப்பட்டது. அந்த நூலின் இரண்டாவது பதிப்பு, 15.2.1965 இல் வெளிவந்தது.*

அந்த நூலின் பக்கம் 243-இல் ஆசிரியர் தெரிவித்திருக்கும் செய்தியினை அப்படியே இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

"In about 1098 A.D. when Sri Ramanuja might have gone to the North to secure the image of Sampatkumara **there was possibly no 'Muhammadan Emperor' in Delhi,** which was being ruled by the Chief of the Tomaraclan. That Chief was a descendent of Anangapala, who a century earlier, had built the Red Fort, where the Kutub Mosque now stands . . ."

"சுமார் கி.பி.1098 ஆம் ஆண்டில் ராமாநுஜர் சம்பத் குமார விக்கிரகத்தை எடுத்துவர இந்தியாவிற்குச் சென்ற போது **டில்லியில்**

முஸ்லிம் சக்கரவர்த்தி யாரும் இருந்திருப்பது சாத்தியமில்லை. *அப்போது டில்லியைத் தோமரவம்சத்து அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். ஒரு நூற்றாண்டுக்கு முன்னமே செங்கோட்டையைக் கட்டிய அனங்கபாலனின் வம்சத்தவன் அவன்; இப்போது அங்கே குதுப்மினார் நிற்கிறது."*

(கி.பி.1153 முதல் 1163 வரை ஆட்சி செய்த சாகமான வமிசத்து நான்காம் விக்கிரகராஜர் காலத்தில் தான் டில்லியில் தோமர வம்சத்து ஆட்சி முடிவுக்கு வந்தது என்பது பிந்தைய சரித்திரம்)

தெள்ளத் தெளிவாக

புராதன வைணவ நூல்களிலும், இராமாநுஜரது சரித்திரங்களிலும் கி.பி.1098 இல் இராமாநுஜர் டில்லி சென்றது. முஸ்லிம் மன்னரிடமிருந்து சிலையை மீட்டு வந்தது முஸ்லிம் இளவரசி பின் தொடர்ந்து வந்தது- மறைந்தது- அவளும் வழிபாட்டிக்குரியவளாக ஆனது' என்று கூறப்படுவதானது எந்த அளவிற்கு நிஜமானது? என்பதை சரித்திரத்தினை ஆராய்கிறபோது தெள்ளத் தெளிவாக உண்மை நமக்கு புலப்படுகிறது.

கி.பி.1098 இல் டில்லியில் முஸ்லிம் மன்னரது ஆட்சி நடைபெறவே இல்லை. தோமர வமிசத்து மன்னரது ஆட்சி. அப்போது அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது என்பது சரித்திரம் தரும் தெள்ளத் தெளிவான வரவாற்று உண்மை ஆகும்.

முஸ்லிம் மன்னர்கள் மீது வேண்டுமென்றே காலங்காலமாக இது போன்ற களங்கங்களைச் சுமத்தி, சேற்றை வாரி இறைத்திடும் செயல்கள், கற்பனைக் கதைகளாக வரலாற்றின் இடைஇடையே சொருகப்பட்டிருப்பதை எவரும் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்.

கோயிலொழுகிலும்

இராமாநுஜர் காலத்திய சம்பவம் போன்றே, கி.பி.1311 இல் நடைபெற்றதாகக் கூறப்படும் மாலிக்காபூரின் ஸ்ரீரங்கம் படையெடுப்பின் போதும், ஸ்ரீரங்கத்திலிருந்து சிலையை டில்லிக்கு கொண்டு சென்றது - இங்கிருந்து சிலர் சென்றது - டில்லி முஸ்லிம் அரசரிடம் மீட்டு வந்தது- முஸ்லிம் இளவரசி பின் தொடர்ந்து வந்தது- மடிந்தது வழிபாட்டுக்குரியவளாக அவள் ஆனது, என்ற கதை ஒன்றும் 'கோயிலொழுகில்' குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி.1311, 1323 படையெடுப்புக்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளுக்கு வரும் முன் இந்த கால கட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் கதையைப் போன்றே, இறுநூறு ஆண்டுகளுக்கு முன்பும் அது போன்ற ஒரு சம்பவம் நடைபெற்றது என்று

வைணவ நூல்களில் கூறப்பட்டுள்ளதை கவனத்தில் கொள்வோமாக!

5

அராபியர்கள் சிந்துப் பகுதியை வென்று கி.பி.எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்தியாவில் இஸ்லாமியர்களின் ஆட்சி அதிகார வரலாற்றையும் தொடங்கினர்.

முஹம்மத் இப்னு காசிம் (கிபி712) மஹ்மூத் கஜ்னவி (கஜினி முஹம்மது) (கி.பி.998-1030) ஷஹாபுத்தீன் கோரி முஹம்மது) (கி.பி.1175-1206) இவர்களைத் தொடர்ந்து அடிமை வமிசம் (?) ஆளத்துவங்கியது.

அடிமை வமிசம்?

முகமது கோரி தனக்குப்பின் வாரிசாக ஆண் மக்களைப் பெற்றிருக்கவில்லை. அங்கங்கே இருந்த வைசிராய்கள் தங்கள் தங்கள் பிரதேசங்களில் சுய ஆட்சி பெற்றனர். குத்புதீன் ஐபெக் (Qutb-Ud-din Aibak) இந்தியப் பிரதேசங்களுக்கு மன்னரானார் (கிபி1206)

இவர் அடிமை வம்சத்து அரசர் என்று வரலாற்றில் சொல்லப்பட்டு வருகிறது. ஆரம்ஷா (கி.பி.1210) இல்டுமிஷ் (கி.பி.1210) பெரேஷா (கி.பி.1235) ரஸியா (கி.பி.1236) முயிஸுத்தீன் பஹ்ராம் ஷா (1239) மாஸுத்ஷா (1241) நாஸிருத்தீன் மஹ்மூத் (1246) பால்பன் (1265) முயிசுத்தீன் கைகோபாத் (கிபி1287) இவர்கள் டில்லி சுல்தானிய அடிமை வம்சத்து அரசர்கள் (?) என்றும் கூறப்படுகிறது. ஆனால் வரலாற்றில் உண்மை நிலை என்ன?

குத்புதீன், இல்டுமிஷ், பால்பன் ஆகிய மூவர் தவிர வேறு எவரும் அடிமை இல்லை. பின் எப்படி அவர்களை அடிமை வம்சத்து மன்னராகச் சொல்வது, சித்தரிப்பது நியாயமாகும்? குத்புதீன் அடிமை தானே! இல்டுமிஷ்ஷும், பால் பனும் அதே நிலை தானே, என்று கேள்வி பிறக்கக்கூடும். குத்புதீன்தன் விடுதலைக்கான கடிதத்தையும், அரசாங்க விதானத்தையும் தன் எசமான் மருமகனும், முகமது கோரியின் பின் பட்டமெய்தியவனுமான சுல்தான் கியாசுத்தீன் முஹமதுவிடமிருந்து பெற்றுக் கொண்டார். இது குத்புதீன் டில்லியின் அரியணையைப் பெறுவதற்கு முன்னரே அளிக்கப்பட்டு விட்டது.

'Outb-ud-din received a letter of Manumission and a canopy of state from Sultan Ghiyas-ud-din Mahumad, the nephew and Successor of his

master, Muhammad of Ghur, before his elevation to throne of Delhi' (Minhaj-ud-din Siraj *எழுதிய* Tabaqat-i-Nasiri. *ஆங்கில மொழியாக்கம் மேஜர்* H.G. Raverty, *பக்கம் 524 - 525) (இலண்டன் 1881). இதே நூலில் பக்கம் 605, 606 இல் இல்டுமிஷ் தனது எசமானரிடமிருந்து விடுதலை பெற்ற செய்தியைத் தெரிவித்துள்ளார்.*

இல்டுமிஷ்ஷின் நாற்பது துருக்க அடிமைகளைச் சார்ந்த பால்பனும் விடுதலையைப் பெற்றதை ஜியாவுதீன் பரணி குறிப்பிட்டுள்ளார். (Ziyauddin Barani, Tarikh-i-Firoz shahi, Calcutta, 1862).

எனவே அடிமை வம்சத்து அரசர்கள் என்று அழைக்கப்படும் இந்த மூவரும், மன்னர்களாவதற்கு முன்பே விடுதலை செய்யப்பட்டவர்கள் என்பதனை வரலாற்றின் வெளிச்சத்தில் நாம் காண முடிகிறது. **(இது போன்ற எத்தனையோ வரலாற்றுக் குறிப்புக்களை முஸ்லிம் மன்னர்கள் குறித்த உண்மைச் செய்திகளை வெளியே கொண்டு வரவேண்டிய நிலையில் தான் இன்னும் இருந்து வருகிறோம்)**

கில்ஜி வமிசம்

மாலிக் பீருஸ் என்ற ஜலாலுத்தீன் பீருஷ்ஷா (Jalal-ud-din Firuz) *கி.பி.1290 இல் மன்னரானார். இவர் அரசுரிமையைப் பெறுவதற்கு பெரும் ஆதரவு அளித்தவர் அலீ அல்லது குர்ஷான்* (Ali or Garshasp) *இவரது தந்தை ஷிஹாப்புத்தீன் மசூத் கில்ஜி* (Shihabuddin Masaud Khalji).

ஜமாலுத்தீன் அரியணை ஏறியதும் அலீ அல்லது குர்ஷான் என்று இயற்பெயர் தாங்கிய அலாவுத்தீன் கில்ஜிக்கு அமீர் இதுஸக் (Amir-i-Tuzuk) *என்ற பதவியை அளித்தார் என்று பரணி* (Barani) *குறிப்பிடுகிறார். பக்ருத்தீன் முபாரக் மெர் வருதியின், 'தாரிக் இ பக்ருதீன் முபாரத்ஷாயி, அலாவுதீன் குதிரைப் படையின் வலது அணித்தலைவர்* (Akhurueg-i-maimha) *பதவியில் நியமிக்கப்பட்டார் என்று குறிப்பிடுகிறது. ஜலாலுத்தீன் மகளை அலாவுதீன் திருமணம் செய்தார். இது போன்ற குறிப்புக்களே வரலாற்றில் காணப்படுகிறது. அலாவுதீன் கில்ஜியின் பிறப்பு, குழந்தைப் பருவம், வாலிபப் பருவம் ஆகியவற்றைப் பற்றிய விவரமான குறிப்புக்கள் அக்கால வரலாற்று ஆசிரியர்களால் அளிக்கப்படவில்லை.*

கே.எஸ். லால்

இடைக்கால இந்தியாவில் தோன்றிய பெரும்புள்ளிகளில் ஒருவராகக் கருதப்படும் அலாவுதீனுடைய முந்தைய

வாழ்க்கையினைப் பற்றிய குறிப்புக்களை வரலாற்றுப் பதிவாளர்கள் நமக்குத் தராமல் போனது வியப்பிற்குரியதாகும் என்பர் கே.எஸ்.லால் (. . . as one of the greatest personalities of Medieval India, Kishori Saranlal, History of the Khaljis AD 1290 - 1320, 1967, p. 33)

மலிக் சஜ்ஜுவின் (Malik Chhajju) கலகம் ஒடுக்கப்பட காரணமாக இருந்ததால் அலாவுதீன் கில்ஜியினை கி.பி.1291 இல் ஆளுநராக நியமித்தார் ஜலாலுத்தீன். திறமை மிகுந்த அலாவுதீன் கில்ஜி மன்னரின் மருமகன் என்ற தகுதியினையும் பெற்றதால், தனது மாமனாரின் பல வீனத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொள்ள முயன்றார்.

தேவகிரி

கி.பி.1296 பிப்ரவரி 26 இல்-8000 குதிரை வீரர்களுடன் அலாவுதீன் கில்ஜி மன்னருக்குத் தெரியாமல் தேவகிரிக்கு படையெடுத்திடப் புறப்பட்டார். மன்னரிடம் கோபித்துக் கொண்டு புகலிடம் தேடிப்போய்க் கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டே படைகளை நடத்திச் சென்றார்.

காதிலஜோரா

தேவகிரிக்கு 12 மைல் தொலைவிலுள்ள ‘காதிலஜோரா’ கனவாயை அலாவுத்தீன் கில்ஜி அடைந்தபோது கன்ஹா (Kanha) என்ற சிற்றரசர் அவரைத் எதித்துப் போரிட்டார். அவரை வென்ற பின் தேவகிரி நோக்கிப் பயணித்தார்.

இராமச்சந்திரதேவா

தேவகிரியின் மன்னர் இராமச்சந்திர தேவா (இராமதேவா) அவரது மகன் சிங்கனதேவா (இவர் சங்கர தேவா என்றும் அழைக்கப்படுகிறார். (Cambridge History of India, Vol. III, p. 96) அலாவுதீன் கில்ஜி தேவகிரியின் ஒரு பகுதியைக் கைப்பற்றினார். 40 யானைகள், ஓராயிரம் குதிரைகள் அவரிடம் சிக்கியது. தாமாக முன் வந்து தேவகிரி அரசர் சமாதானம் நாடிய போது அலாவுதீன் கில்ஜி அதனை ஏற்றுக்கொண்டார். அதன்படி 15 நாட்களுக்குள் தேவகிரியை விட்டு நீங்குவதாக ஒப்புக் கொண்டார். சிறை பிடிக்கப்பட்டவர்களை விடுவிக்கவும் இசைந்தார். அதற்குப் பதிலாக அவருக்கு போர் நஷ்டஈடு வழங்க தேவகிரி அரசர் ஒப்புதல் அளித்தார். தீர்த்தயாத்திரைக்குச் சென்றிருந்த இளவரசர் சிங்கனதேவா வேகமாகத் தம் படைகளுடன் நகருக்குத் திரும்பினார்.

சிங்கனதேவா

இராமச்சந்திரதேவா தனது மகன் சிங்கனதேவாவைப் போர்க்கோலத்தை விட்டொழிக்கும்படி கட்டளையிட்டார். ஆனால் இளவரசரோ மன்னரது சொற்கேளாமல், அலாவுத்தீன் கில்ஜியிடம் தூதர் ஒருவரை அனுப்பினார். அலாவுத்தீன் தாம் கைப்பற்றிய செல்வம் அனைத்தையும் விட்டுவிட்டு தம் நாட்டை விட்டுச் செல்ல வேண்டும் என்றும் தவறினால் அவருடன் போரிட நேரும் என்ற செய்தியை தூதுவர் கொண்டு சென்றார். இதனையறிந்ததும் அலாவுதீன் கில்ஜி கோபங் கொண்டார். முற்றுகை தொடர்ந்தது. தேவகிரி மன்னர் சமாளிக்க இயலாத நிலையில் சமாதானத்திற்கு வந்தார்.

நிபந்தனைகள்

அலாவுத்தீன் கில்ஜி இப்போது கடுமையான நிபந்தனைகளை விதித்தார். முன்பு தீர்மானிக்கப்பட்ட போர் நஷ்ட ஈட்டுத் தொகையை விட அதிகமான தொகை இப்போது அளிக்க வேண்டும். எல்லிச்பூரைத் தரவேண்டும் என்றும் கூறினார்.

எல்லிச்பூர் (Ellichpur)

600 மணங்குபொன், ஏழு மணங்கு முத்துக்கள் இரண்டு மணங்கு நவரத்தினங்கள், 400 பீஸ்பட்டுத் துணிகள் அலாவுதீனிடம் அளிக்கப்பட்டது. எல்லீச்பூர் நகரத்தின் வருவாயையும் அவரிடம் தந்தனர். ஆண்டுதோறும் கப்பங்கட்டிடவும் இராமச்சந்திரதேவா இசைந்தார்.

மகளைத் திருமணம் என்ற கதை!

அப்போது இராமச்சந்திர தேவாவின் மகளை அலாவுதீன் கில்ஜி திருமணம் செய்து கொண்டார் என்ற ‘இசாமி’ எழுதி வைத்துள்ளார். அக்கால வரலாற்று ஆசிரியர்கள் எவரும் இது குறித்து எதுவும் எழுதிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1296 ஜுலை 20

மன்னர் ஜலாலுத்தீனை ‘காரா’வின் ‘தம்ஹை’ பகுதியில் அகமது சாப் ஆற்றின் கரையின் மறுபுறத்தில் மணிக்பூரில் படகுக் கரையில் வைத்து கொன்றனர். 1296 ஜுலை 20 இல் மாமூத் சலீம் (Mahmud Salim) ஜலாலுத்தீனைக் கத்தியால் குத்தினார். இக்தியாத்தீன் ஹுத் (Ikhtiyaruddin Hud) மன்னரைக் கீழே தள்ளினார். மன்னரது தலை அவரால் கொய்யப்பட்டது. அலாவுதீன் மன்னரானார். (மன்னரின் இக் கொலைக்கான திட்டம் எப்போது தீட்டப்பட்டது என்பது குறித்து பலவித கருத்துக்கள்

கூறப்படுகின்றன.) அலாவுதீன் கில்ஜி செய்த இந்தக் காரியம் சரியானதென்று ஒரு நாளும் அவர் வாதிக்கவில்லை. (. . . be said to his credit that he never justified his action against his uncle . . . என்று பரணி (Barani) குறிப்பிடுகிறார்.

குஜராத் படையெடுப்பு

24-2-1299 இல் தனது சகோதரர் உலுக்கான் (Ulugh Khan) தளபதி நஸ்ரத்கான் (Nasrat Khan) ஆகியோரை குஜராத் மீது படையெடுத்திட அலாவுதீன் கில்ஜி அனுப்பி வைத்தார். தலைநகர் அன்ஹில்வார் (Anhilwar) தாக்கப்பட்டது. மன்னர் ராஜாகரண் (Rajakaran) தோற்கடிக்கப்பட்டார்.

காம்பே – ஷஜார்தினாரி

இப்போரின் போது காம்பே நகரம் (Kambayat) தாக்கப்பட்டது. அங்கு ஆயிரம் தினார்(பொன்)களுக்கு வாங்கப்பட்டிருந்தபடியால் 'ஹஜார் தினாரி' (Thousand Dinars) என்று அழைக்கப்பட்ட அடிமை ஒருவரை, அந்த நகரிலிருந்த பெரிய வணிகரிடமிருந்து கைப்பற்றினர். அந்த அடிமையே பின்னாளில் தென்னகப் படையெடுப்பின் தளபதியாகத் திகழ்ந்த மாலிக்காபூர் ஆவார். மாலிக்தாஜுல், மாலிக்நயுப் போன்ற பெயர்களும் அவருக்கு இருந்தது.

மாலிக்காபூர்

'காம்பே'யில் கைப்பற்றப்பட்ட அடிமை ஹஜார் தினாரி, அலாவுதீன் கில்ஜியிடம் அழைத்து வரப்பட்டார்; அவரது ஆற்றல் காரணமாக அமைச்சரானார்; பின்னர் அலாவுதீனின் படைத் தளபதிகளில் ஒருவரானார். கி.பி.1306 இல் மங்கோலியரின் படையெடுப்பை வெற்றிகரமாக முடித்தார். அதன் பின்னர் தலைமைத் தளபதியானார் மாலிக்காபூர்.

திரும்பவும் தேவகிரி

கி.பி.1296 இல் தேவகிரியை வென்று பெரும் செல்வத்தைக் கொண்டு வந்தவர் அலாவுதீன் கில்ஜி. தென்னகத்தின் செழிப்பை, வளமையை நன்கு அறிந்தவர்.

தேவகிரி அரசு, துவார சமுத்திர அரசு, வாரங்கல் அரசு, பாண்டிய அரசு என நான்கு அரசுகள் அக்காலகட்டத்தில் தென்னகத்தில் இருந்தது. தென்னிந்திய அரசர்கள் ஒருவருடன் ஒருவர் எந்த நேரமும் சண்டையிட்டுக் கொண்டிருந்த காலகட்டம் அது.

இராமச்சந்திர தேவா

தேவகிரியில் இராமச்சந்திர தேவாவின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிபி.1296 அலாவுத்தீன் கில்ஜி இங்கு வந்து வென்ற போது, வாக்களித்தபடி இரண்டு மூன்று ஆண்டுகளாக இராமச்சந்திர தேவா டில்லிக்கு கப்பம் செலுத்தவில்லை. இராமச்சந்திர தேவா டில்லி சுல்தானுக்கு கீழ்ப்படிந்து இருக்கவே விரும்பினார். ஆனால் அவரது மகன் தான் அவ்வாறு நடக்க விரும்பவில்லை. தந்தையின் விருப்பத்திற்கு மாறாக தேவகிரியின் சுதந்திரத்தை நிலைநாட்டும் முயற்சியில் அவர் ஈடுபட்டார். அதனால் இராமச்சந்திர தேவா கோபமடைந்து, சுல்தானுடைய உதவியை நாடினார். (Isami, Futuh-Us- Salatin, Ed. by A.M. Husain, Agra, 1938, pp 274 - 276) போரில் ஒருவேளை தேவகிரி தோற்றுப் போனால் சுல்தான் கடுமையான நிபந்தனைகளை விதிக்க முற்படக்கூடாது என்பதற்காக இந்த வகையான ஒரு நாடகத்தை தேவகிரி மன்னர் ஆடினார்.

“This might have been adiplomatic stroke on the part of the Yadava King to secure lenient treatment from Ala-ud-din, in case the Devagiri troops were defeated” (The History and Culture of the Indian People, The Delhi Sultanate, R.C. Majumdar, Vol. VI, Bombay, 1990, p. 30) என்று வரலாற்றாசிரியர் எஸ். ராய் (S. Roy) தனது ‘The Khalji Dynasty’ என்ற கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

போர்புரிய வாய்ப்பு

அலாவுத்தீன் பேரரசுக் கொள்கையினைக் கடைப்பிடித்து வந்தார் என்பதை எவரும் மறுக்க இயலாது. வட இந்தியாவில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டி விட்ட பிறகு எஞ்சியிருந்தது தக்காணமேயாகும். மேலும் தேவகிரியிலிருந்து அவர் பெற்ற செல்வமே அவர் சுல்தானாக முடி சூட்டிக் கொள்ளுவதற்கு பெரும் உதவியாக இருந்தது. மண்ணாசையும் பொன்னாசையும், கொண்ட மன்னர்களுக்கு தேவகிரி மன்னர் கப்பம் செலுத்தாமை போர்புரிவதற்கு காரணமாக அமைந்தது. என்பர் பேராசிரியர் டிஆர். ராமச்சந்திரன் (டில்லி சுல்தானியத்தின் வரலாறு, 1977, பக் 279)

படைகள் திரட்டப்படல்

தக்கானப்படையெடுப்பு நடைபெற்ற காலத்தில் அலாவுதீன் கில்ஜியிடம் 4,75000 பேர்கள் கொண்ட படை இருந்தது. தேவகிரி படையெடுப்பிற்காக 30,000 குதிரை வீரர்கள் கொண்ட படை திரட்டப்பட்டது. மாலிக்காபூரின் திறமையை அனைவருக்கும்

உணர்த்த வேண்டும் என்று ஆசைப்பட்ட அலாவுத்தீன் கில்ஜி அவரை தென்னகத்திற்கு அனுப்பிட முடிவெடுத்தார். (அலாவுதீன் கில்ஜியின் வரலாற்றில் சித்தூர் ராணி பத்மினி குறித்தும், குஜராத் மன்னரின் மனைவி கமலா தேவி குறித்தும் வழங்கப்படுகிற விஷயங்கள் குறித்த சரித்திர உண்மைகள் விரிவாக எழுதப்பட வேண்டிய வரலாறாகும்.

1306 – 1307 – 1308

மாலிக்காபூர் மேற்கொண்ட தேவகிரி படையெடுப்பு கி.பி1306 என்று பெரிஷ்டாவும், 1307 இல் என்று அமீர் குஸ்ரூவும், 1308 இல் என்று பரணியும் கூறியுள்ளார்கள்.

மாலிக்காபூர் தம் படை வீரர்களை தில்பத் என்னுமிடத்தில் கூட்டினார். 'தார்' வழியாக தேவகிரி நோக்கிப் பயணித்தார். காடிசகுன் (Ghati Sagun) கணவாய் வழியாக 'தாரை' அடைந்தார். அலப்கானும், அயின் உல்மூல்தானியும் அவருடன் சேர்ந்து கொண்டனர். அலப்கான் பக்லானாவிற்குச் சென்றார். காபூர் தேவகிரி நோக்கிப் பயணித்தார். தேவகிரியை அடைந்தார். இராமச்சந்திர தேவா அடி பணிந்தார். அவரது மகன் சில வீரர்களுடன் தப்பி விட்டார் என்று அமீர் குஸ்ரு குறிப்பிடுகிறார்.

டில்லியில் இராமச்சந்திர தேவா

தக்காணத்திற்கு மாலிக்காபூர் சென்றதும் அங்கிருந்த மக்களை தம் பாதுகாப்பின் கீழ் கொண்டு வந்தாரென்றும், அங்கிருந்த மக்களுக்கு எந்த விதமான தீங்கும் நேரா வண்ணம் பார்த்துக் கொண்டாரென்றும், மாலிக் காபூரை எதிர்த்து நின்று போராடுவது மிகக் கடினமென்பதை அறிந்த இராமச்சந்திர தேவா தாமே நேரில் சென்று நின்றார் என்றும் பெரிஷ்டா கூறுகிறார். சில யானைகள், பெருமளவு செல்வத்தையும் எடுத்துக் கொண்டு மாலிக்காபூர் டெல்லி திரும்பினார். உடன் இராமச்சந்திர தேவாவையும் அழைத்துச் சென்றார்.

வேறுபாடு காணாத வரவேற்பு

தோல்வியுற்ற இராமச்சந்திர தேவாவை அலாவுதீன் தக்க மரியாதையுடன் வரவேற்றார். அவர் அரசவையில் புகும்போது முத்துக்களும், விலையுயர்ந்த மாணிக்கங்களும் அவர் தலையின் மீது தெளிக்கப்பட்டன. ஆறுமாத காலம் இராமச்சந்திர தேவா அலாவுதீன் கில்ஜியின் அரசசபையில் தங்கியிருந்தார். அவருக்கும் அரசருக்கும் வேறுபாடு காணாத அளவிற்கு அவருக்கு மரியாதைகள் நடந்தன. ஒவ்வொரு நாளும் அவருக்கு அளிக்கப்பட்ட கௌரவம் வளர்பிறைபோல் வளர்ந்து வந்தது

என்று அமீர் குஸ்ரூ கூறியுள்ளார். இறுதியில் அவருக்கு அலாவுதீன் ஒரு இலட்சம் பொன் தங்கக் காசுகளைக் கொடுத்தார்.

ராய்ராயன்

இசாமியோ இரண்டு இலட்சம் பொற்காசுகள் தரப்பட்டதாக எழுதியுள்ளார். இராமச்சந்திர தேவாவிற்கு 'ராய்ராயன்' என்ற பட்டமும் வழங்கப்பட்டது. அத்தகுதியை எடுத்துக்காட்டுவதற்கு ஒரு வெண்குடையும் அளிக்கப்பட்டது. நவகரி என்ற குஜராத் மாவட்டமும் அவருக்கு பரிசாக அளிக்கப்பட்டது தாம் உயிருடன் உள்ளவரை இராமச்சந்திர தேவா ஒழுங்காக கப்பங்கட்டி வந்தார். அலாவுத்தீன் கில்ஜியின் ஆணைகளை நிறை வேற்றியும் வைத்தார். விசுவாசம் நிறைந்த நண்பராக தம் வாழ்நாள் முழுவதும் தேவகிரி மன்னர் நடந்து கொண்டார். அதற்குப் பின்னால் ஏற்பட்ட படையெடுப்புகளுக்குத் தக்க உதவியையும் செய்தார்.

வாரங்கல்

வாரங்கல் படையெடுப்பு துவங்குவதற்கு முன், அலாவுத்தீன் கில்ஜி மாலிக்காபூரை அழைத்தார். தனது படைகள் வெகுதூரம் செல்ல வேண்டியதாக இருந்தமையாலும், இதுவரை முஸ்லிம் படைகள் செல்லாத இடமாக இருந்தமையாலும் படைகள் கி.பி1309 அக்டோபர் 31 இல் கிளம்புவதற்கு முன் மாலிக்கா பூருக்கு அறிவுரைகளை அளித்தார்.

"நீ வெகுதூரத்திலுள்ள நிலப்பகுதிக்கு செல்ல இருக்கிறாய். வாரங்கல்லைக் கைப்பற்றி, ருத்ர தேவாவைத் தோற்கடிக்க உன் முழு பலத்தையும் செலவிட வேண்டியதிருக்கும்.

அலாவுத்தீனின் அறிவுரைகள்

ஆனால், வாரங்கல் அரசர் தம்முடைய செல்வம், யானைகள், குதிரைகள் ஆகியவற்றை இழக்க ஒப்புக் கொண்டு, வருங்காலத்தில் கப்பம் கட்டுவதாக வாக்குறுதி அளித்தால் அந்த ஏற்பாட்டினை நீ ஒப்புக் கொள்ள வேண்டும். உன்னுடைய புகழை நிலைநாட்டுவதற்கோ அவர் உன் முன்னர் மண்டியிடும்படி வற்புறுத்தவோ அல்லது டில்லிக்கு அவரை அழைத்து வரவோ முற்படக் கூடாது. **தேவையில்லாமல் கடுமையாக நடக்கலாகாது; கொடூரச் செயல்களில் ஈடுபடக்கூடாது.**

செந்நிறக் குதிரையில்

மாலிக்காபூர் அலாவுத்தீன் கில்ஜி வழங்கிய செந்நிறக் குதிரையில் வாரங்கலை நோக்கிப் பயணித்தார். ரேவாரியை

அடைந்தார். அமீர் குஸ்ரு கூறியுள்ள ஊர்களின் விவரங்களைக் கொண்டு அவர் குறிப்பிட்டுள்ள நகரங்களை இன்று நாம் அடையாளம் காண இயலாது. மாலிக்காபூர் 9 நாள் பயணத்திற்குப்பின் மசூத்பூரை அடைந்தார். ஆறுகளைக் கடந்தார். இறுதியில் தேவகிரி அரசின் எல்லைக்குள் இருந்த நில்கந்தை (Nilgantu) அடைந்தார்.

தளபதியின் கட்டளை – கோஹினூர் வைரம்

நில்கந்த் பகுதிக்குள் **மாலிக்காபூர் நுழைந்ததும், தம் படைகள் கொள்ளை முதலிய கொடுஞ் செயல்களில் ஈடுபடக் கூடாது என்று கட்டளை பிறப்பித்தார்.** இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்தார். **தேவகிரி அரசரின் அமைச்சர் மாலிக்காபூரைச் சந்தித்தார். அவரது படைகள் எல்லாவித வசதிகளுடன் தம் நாட்டின் வழியாக வாரங்கலுக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்து கொடுத்தார்.** வழி நெடுக கடைகளையும் அமைத்துக் கொடுத்தார். அந்த கடைகளில் பொருட்கள் அரசு நிர்ணயித்த விலைக்கே வழங்கப்பட்டது. முஸ்லிம் படைகளின் வலிமையை பெருக்கும் நோக்குடன், தேவகி அரசர் சில யாதவப் படைகளையும் கொடுத்து உதவினார். மாலிக்காபூர் வாரங்கல் சென்றார். வென்றார், பெரும் செல்வம் பெற்றார். கோஹினூர் வைரமும் அப்போதுதான் கிடைத்தது. 20000 குதிரைகள், 100 யானைகள், விலையுயர்ந்த கற்கள், பொன்னும் மணியும் பெருவாரியாகப் பெற்றார். 1310 மார்ச் 20 டில்லிக்குத் திரும்பினார். 9-6-1310 இல் மாலிக்காபூருக்கு சிறப்பான தர்பார் வரவேற்பு அளிக்கப்பட்டது.

துவாரசமுத்திரம் படையெடுப்பு

வாரங்கல் படையெடுப்பின் போது மாபாரில் (மலபார்) நூற்றுக்கணக்கான பெரிய யானைகள் இருப்பதைக் கேள்விப்பட்டார் மாலிக்காபூர். டில்லி சென்றதும் அலாவுத்தீனிடம் இதனைக் கூறினார். தெற்கே உள்ள யானைகளையும், பெருஞ்செல்வத்தையும் கொண்டு வர மீண்டும் ஒரு படையெடுப்பு நடத்திட 1310 நவம்பர் 20 இல் மாலிக்காபூர் தக்காணம் நோக்கித் திரும்பவும் பயணித்தார். தனக்கல் (Tanakal) கன்ஹூன், குர்காம் (Gurgam) ஆகியவற்றைக் கடந்து, தபவி நதியையும் தாண்டி தேவகிரியை அடைந்தார். மாலிக்காபூருக்கு தக்க வரவேற்பு அளிக்க எல்லா ஏற்பாடுகளையும் நகரில் இராமச்சந்திர தேவா செய்திருந்தார்.

நகரத்தை தேவலோகம் போல அலங்கரிக்கச் செய்தார். படையினருக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் அங்காடிகளுக்குக் கொண்டு வரச் செய்தார். ஒவ்வொரு

அங்காடியையும் ஒவ்வொரு விதமாக அமைத்தார். பொன், வெள்ளி, தங்ககாசுகளைக் கொண்டு பைகளுடன் நாணய மாற்றுபவர்கள் அல்லது ஷராப்பு (Sarafs) ஒவ்வொரு அங்காடிகளிலும் உட்கார்ந்திருந்தனர். எல்லா விதமான துணிகள் கடைகளுக்கு கொண்டு வரப்பட்டன. பழங்கள் குவியல் குவியல்களாகக் குவிக்கப்பட்டிருந்தன. பொருட்கள் நியாயமான விலைக்கு விற்கப்பட்டன. **முஸ்லிம்கள் இந்துக்களைத் துன்புறுத்தவில்லை. இந்துக்களும் முஸ்லிம்களுக்கு விரோதமாக நடக்கவில்லை.**

தளவாய் பரசுராமதேவா

இராமச்சந்திர தேவா தனது தலைமைத் தளபதி பரசுராமதேவாவை, மாலிக்காபூரின் படைகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருமாறு கட்டளையிட்டார். அவரும் பெரிதும் உதவினார்.

'Rama Deva deputed Parasuram Dalavay (Paras Deo Delvi of Chronicles), his commander-in-Chief on the Southern Frontier, to help the Trukish army on its Southward March. Parasuram rendered all help and assistance in the conquest of 'Bir and Dhur Samandar' (Dwar Samudra and the country of Vira Pandya) (Kishori Saran Lal, History of The Khaljis, p. 246)

26-2-1311 இல் மாலிக்காபூர் துவாரசமுத்திரத்தை அடைந்தார். மன்னர் பல்லாள தேவாவிற்கு உதவியாக பாண்டிய நாட்டிலிருந்தும் படைகள் அனுப்பப்பட்டிருந்தது என்று வாசப் குறிப்பிடுகிறார். துவார சமுத்திரக்கோட்டை முற்றுகையிடப்பட்டது. இராமச்சந்திரதேவா, பிரதாபருத்ரதேவா ஆகியோர் எந்த நிபந்தனைகளின் பேரில் சரண் அடைந்தனரோ அதே நிபந்தனைகளின் பேரில் பல்லாள தேவாவும் அடிபணிய விரும்புவதாக மாலிக்காபூரிடம் கூறப்பட்டது. அரசரிடமிருந்து விலை உயர்ந்த பொருட்கள் பெறப்பட்டது.

பல்லாள தேவா

மாலிக்காபூரின் படைகள் 1311 மார்ச் 10 இல் மாபாரை நோக்கிப் புறப்பட்டன. துவார சமுத்திரத்தின் பல்லாள தேவா மாலிக்காபூருக்கு உறுதுணையாக இருந்தார்.

மாறவர்மன் குலசேகரன்

பதிமூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாறவர்மன் சுந்தர பாண்டியன்; அந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன், அவருக்குப் பின் பட்டம் எய்திய மாறவர்மன் குலசேகரன் கி.பி. 1310 வரை பாண்டிய நாட்டை ஆட்சி செய்தார்.

இரண்டாவது பாண்டியப் பேரரசில் தலை சிறந்த மன்னரான இவருக்கு இரண்டு பிள்ளைகள். ஒருவர் சுந்தர பாண்டியர், மற்றொருவர் வீர பாண்டியர். பின்னவர் பட்டத்து ராணிக்குப் பிறந்தவர் இல்லை. எனினும் திறமை மிக்கவர். எனவே தமக்குப்பின் அவரே பட்டத்திற்குரியவர் என்று குலசேகரன் அறிவித்தார். இது கண்டு பொறாத சுந்தரபாண்டியர் 1310 இல் மாறவர்மன் குலசேகரரை கொலை செய்தார். அதன்பிறகு இரு சகோதரர்களும் அரச பதவிக்குப் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். வீரபாண்டியர் மதுரையைக் கைப்பற்றினார். சுந்தர பாண்டியரைத் துரத்தியடித்தார். சுந்தர பாண்டியர் மாலிக்காபூரிடம் உதவியை நாடினார். துவார சமுத்திரத்தை மாலிக்காபூர் தாக்கிடும் போது அங்குள்ள மன்னருக்கு ஆதரவாக வீரபாண்டியர் ஏற்கனவே படையையும் அனுப்பியிருந்தார். எனவே தனக்கு எதிராக படை அனுப்பிய பாண்டிய மன்னரது பகுதிக்கும் படை நடத்திச் செல்லத் தீர்மானித்தார். மாலிக்காபூர்; ஏற்கனவே இங்குள்ள **பெருஞ்செல்வம் ஒருகாரணம், சுந்தர பாண்டியரது உதவிக்குரல் மற்றொரு காரணம்; வீரபாண்டியர் படை தனக்கு எதிராகப் போரிட வந்தது மற்றொரு காரணம்; எனவே மாலிக்காபூர் படை தெற்கே வந்தது.**

பிர்துல் (Birdhull)

துவாரசமுத்திரத்தை விட்டு புறப்பட்ட மாலிக்காபூர் ஹோய்சல நாட்டினையும், மலபாரையும் பிரித்த மலைப்பகுதியை அடைந்தார். கூர்மையான கற்கள் படைவீரர்களின் குதிரைகளின் குளம்புகளைப் பதம் பார்த்தன. இரவு நேரத்தில் போதிய வசதியின்றி இராணுவ வீரர்கள் தரையில் படுத்து உறங்கினர். முஸ்லிம் தளபதிகள் பலர் படையை விட்டு ஓடிவிடவும் முடிவெடுத்தனர். படைகள் மலபாரை அடைவதற்கு முன்னரே நான்கு தளபதிகள் முன்னரே சென்று அங்குள்ள நிலையைக் கண்டறிய வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டது.

பஹ்ராம் கரா (Bahram Kara) கட்லாநிகாங் (Katla Nihang) மஹ்மூது ஷெரிகா (Mahmud Sartiha) அபாஸி முகல் (Abaji Mughal) ஆகியோர் முன்னரே சென்றனர். மலபார் அரசரின் துரோக வலையில் விழுந்தனர். மன்னரிடம் பேசி தனக்கு நல்ல பதவி தர ஏற்பாடுகளையும் அபாஸி முகல் செய்தார். மலபார் இராணுவப் பிரிவில் ஏற்பட்ட குழப்பத்தால், குழப்பம் அடைந்த அபாஸி முகல் திரும்பவும் மாலிக்காபூரிடம் வந்தார். இதனை அறிந்த மாலிக்காபூர் அவரை விலங்கிட்டுச் சிறை செய்தார். பின்னர் தொடர்ந்து முன்னேறினார்.

மாலிக்காபூர் பயணித்த இடங்களைப் பற்றிய சரித்திரக் குறிப்புக்களை வரலாற்றாசிரியர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (அவைகளை விளக்க ஆரம்பித்தால் ஒரு தனிக்கட்டுரையாக அது அமையும்) மாலிக்காபூர், காவிரிக் கரையை அடைந்தார். அங்கிருந்து பிர்துல் நோக்கி முன்னேறினார்.

அமீர் குஸ்ரு

அமீர் குஸ்ரு 'பிர்தூல்' என்ற சொல்லை ஒரு சமயம் தலைநகரைக் குறிக்கவும் மற்றொரு சமயம் அரசரைக் குறிக்கவும் பயன்படுத்தியுள்ளார். S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அதனை தலைநகரின் பெயராகக் கொள்ளலாம் என்று கூறுகிறார். பிர்தூல் விருத்தாசலத்தைக் குறிக்கிறது என்பது பர்னலின் கருத்தாகும். வீரபாண்டியர் உயிர் தப்பி காட்டிற்குள் ஓடினார். மாலிக்காபூர் அவரை விடாது துரத்தினார். வீரபாண்டியர் படையிலிருந்த பலர் மாலிக்காபூரின் படையில் சேர்ந்து கொண்டனர். கந்தூரிலிருந்து (Kandur) வீரசோழத்திற்கு வந்த மாலிக்காபூர் ஜலகோடாவிற்குச் (Jal-Kota) சென்றார். அங்கிருந்த பாண்டிய மன்னர் தப்பி காட்டிற்குள் ஓடினார். அடுத்த நாள் 'பர்மத்புரி' அல்லது 'பிரமஸ்த்புரி' என்னுமிடத்தில் பொன்னலான கோயில் இருப்பதாகவும், அந்த ஊரைச் சுற்றி வீரபாண்டியரின் யானைகள் மேய்ந்து கொண்டிருப்பதாகவும் மாலிக்காபூர் கேள்வியுற்றார். அங்கு விரைந்தார். 250 யானைகள் கைப்பற்றப்பட்டன. கோயிலில் இருந்த பெருஞ்செல்வம் அனைத்தும் கைப்பற்றப்பட்டது.

பர்மத்புரி

இப்படையெடுப்பின் போது ஸ்ரீரங்கம் கோயில் முஸ்லிம் படைகளின் தாக்குதலுக்கு இலக்காகியிருந்ததா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. பர்மத்புரி ஸ்ரீரங்கத்தைக் குறிக்கிறது என்பர் சிலர். பர்மத்புரியில் லிங்கம் இருந்தது என்று குறிப்பிடப் பட்டுள்ளதாலும், ஸ்ரீரங்கத்தில் லிங்கத்தைக் காணுவதற்கு அரிது என்பதாலும் பர்மத்புரி ஸ்ரீரங்கத்தைக் குறிக்காது என்பர் சிலர்.

ஸ்ரீரங்கக் கோயிலைத் தாக்கியதாக அமீர் குஸ்ரூ ஐயத்திற்கு இடமற்ற வகையில் குறிப்பிட்டிருக்கவில்லை. கந்தூருக்குச் சுற்றியுள்ள இடங்களில் அமைக்கப்பட்டிருந்த கோயில்களைத் தாக்கினார் என்று குறிப்பிட்டிருப்பதால், கந்தூரை, கண்ணனூர் என்று கருதப்படும் பட்சத்தில் அதனை ஏற்றுக் கொள்வோமேயானால் அதற்கு அருகேயிருந்த ஸ்ரீரங்கம் கோயிலும் முஸ்லிம்களால் தாக்கப்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்பட்டு, அதன் அடிப்படையிலேயே மாலிக்காபூர் ஸ்ரீரங்கம் கோயிலை கொள்ளையிட்டார் என்று கூறுகிறார்கள்.

ஸ்ரீரங்கம் என்ற பெயர் எங்கேயாவது உள்ளதா?

ஸ்ரீரங்கம் என்று பெயர் குறிப்பிடப்படாத நிலையில் அமீர்குஸ்ரூ கூறிய பிர்தூல், கந்தூர், ஜலகோட்டா என்ற ஊர்களை தங்கள் தங்கள் விருப்பப்படி இது இந்த ஊராகத்தான் இருக்க வேண்டும் என்று கருத்துக்கூறி, அதன் அடிப்படையில் சரித்திரத்தைப் புனைந்து, ஸ்ரீரங்கம் கோயில் மாலிக்காபூரால் கொள்ளையடிக்கப்பட்டது. அங்கிருந்த சிலைகள் டில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்றும் அதன் பின்னர் முன்பே குறிப்பிட்டது போல இராமாநுஜர் மேல் கோட்டையிலிருந்து தில்லிக்குச் சென்று அங்குள்ள முஸ்லிம் அரசரிடம் சிலையைப் பெற்று வந்ததைப் போலவும், (அங்கு முஸ்லிம் மன்னர் ஆட்சிபுரியவே இல்லை என்பது நாம் ஏற்கனவே பார்த்த விஷயம்) இப்போதும் டில்லி சென்று சிலையைத் திரும்பப் பெற்று வந்தார்கள் என்று கோயிலொழுகுவில் எழுதி வைத்துள்ளார்கள்.

வரலாற்று நிஜம் வெளிவர வேண்டிய காலகட்டம்

தென்னிந்தியாவில் முஸ்லிம்களின் படையெடுப்பு பற்றி தவறுதலாக பல கருத்துக்கள் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. இந்நிலையில் தென்னிந்திய வரலாற்றின் உண்மைப் பக்கங்களை, இயன்ற அளவு வெளிக் கொண்டு வர எதிர்கால இளைய சமுதாயம் வரலாற்று நிஜங்களை உணர்ந்து கொள்ள வாய்ப்பாக அமையும் என்பதாலும் சற்று விரிவாகவே எழுதிட வேண்டிய அவசிய நிலை அத்யாவசியமாகிறது.

6

கணித மேதையாகப் புகழ் பெற்றிருந்தாலும் கூட எல்லா ஆய்வுத் துறைகளிலுமே புத்துணர்வு தூண்டப்பெற்ற பேராசிரியராக விளங்கியவர் டி.டி.கோசாம்பி (1907-1966) (D.D. Kosambi) *அவரது 'பண்டைய இந்தியா அதன் பண்பாடும் நாகரிகமும் பற்றிய வரலாறு'* (The Culture Civilization of Ancient India in Historical Outline) *எனும் நூலின் முன்னுரையில் (1964) கூறுவார்* **"ஆக்கப் பூர்வமான ஈடுபடானது வெட்டிப் பேச்சுக்களை விட எவ்வளவு முக்கியமானதோ, அதைப் போலவே வரலாற்றை எழுதுவதைவிட, வரலாற்றை மாற்றுவது முக்கியமானது என்பதில் சற்றும் ஐயம் வேண்டாம்.**

"It is doubtlessmore important to change history than to write it, just as it would be better to do something about the weather rather than merely talk about it."

வரலாற்றை வரைவதைவிட புதிதாக வரலாற்றை மாற்றி அமைப்பது, (எழுதப்பட்டுள்ள வரலாற்றுச் செய்திகளில் காணப்படும் தவறுகளை நீக்கிட முயல்வது) உண்மைச் செய்திகளை எடுத்துரைப்பது கூடுதல் முக்கியமானது என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. இதனை இதயத்தில் ஏந்தியவாறு மாலிக்காபூர் படை நடத்திய வரலாற்றுப் பாதையைத் தொடர்வோம்.

கர்னல் காலின் மெக்கன்சி

ஸ்காட்லாந்து நாட்டில் ஸ்டோர்னோ நகரில் கி.பி.1754 இல் பிறந்தவர் கர்னல் காலின் மெக்கன்சி, கிழக்கிந்தியக் கம்பெனிப் பணியில் பணியாற்ற இந்தியாவிற்குக் குறிப்பாகத் தமிழகத்திற்கு அவர் 1783 இல் வந்தார். திப்பு சுல்தானுடன் ஆங்கிலேயர் நடத்திய போர்களிலும் பங்கேற்றவர். சென்னை மண்டல முதல் தலைமை நிலை ஆய்வாளராகவும், அனைத்திந்தியாவிற்குமான முதல் தலைமை நில ஆய்வாளராகவும் 38 ஆண்டுகள் விடுமுறையே எடுக்காமல் பணி புரிந்த மெக்கன்சி 8.5.1821 இல் ஹூக்ளி நதிக்கரையில் இறந்தார்.

தொல் பொருள்கலைச் செல்வங்கள்

மெக்கன்சி தமது பணிகளுக்கிடையே ஓய்வின்றி போகும் இடமெல்லாம் தொகுத்த தொல்பொருள் கலைச் செல்வங்கள், அரிய கருவூலங்கள் ஆகும். அவற்றில் கல்லிலும், செம்பிலுமாக இடம்பெற்றுள்ள 3000 சாசனங்கள், 15 மொழிகளைச் சேர்ந்த 1568 சுவடித் தொகுப்புகள், 8076 கல் வெட்டுக்கள், 2630 ஓவியங்கள், 78 வரைபடங்கள், 6216 நாணயங்கள், 102 படிமங்கள் குறிப்பிடத்தக்கது ஆகும். மெக்கன்சியின் மறைவிற்குப் பின் திருமதி மெக்கன்சியிடமிருந்து அக்கலைச் செல்வங்களைத் கிழக்கிந்தியக் கம்பெனி விலைக்கு வாங்கிக் கொண்டது. அவற்றுள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டவற்றையும், வரைபடங்கள், நாணயங்கள், ஓவியங்கள், படிமங்கள், இலண்டனிலுள்ள இந்திய அலுவலக நூலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. தென் மாநிலங்களைச் சேர்ந்த சுவடிகள் சென்னையில் வைக்கப்பட்டுள்ளன.

அரசின் கீழ்த்திசை சுவடிகள்

தென்னிந்தியா பற்றிய இலக்கியம், வரலாறு குறித்த பல செய்திகள் மெக்கன்சியின் சுவடிகளிலிருந்து பெற்றவைதான். சென்னையில் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் ஆராய்ச்சி நூலகத்தில் உள்ள மெக்கன்சியின் சுவடிகளில், 1534 சுவடிகள் தமிழக வரலாறு,

கலை பண்பாடு பற்றியவைதான். (மேலும் விவரங்களை அறிய ம. இராசேந்திரன் எழுதிய, 'காலின் மெக்கன்சி வரலாறும் சுவடிகளும்', 'மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடி மக்கள்' ஆகிய நூல்களை வாசிக்கலாம்.)

வில்லியம் டெய்லர்

கிழக்கியல் நாடுகளில் இலக்கியம், வரலாறு ஆகியவற்றைப் பற்றி நன்கு அறிந்த வில்லியம் டெய்லர் என்பவரை 10-5-1837 இல் சென்னையிலிருந்த மெக்கன்சி தொகுப்பினை ஆய்வு செய்ய வெள்ளையர் நியமித்தனர். கடுமையாக முயன்று மெக்கன்சி தொகுப்பு பற்றிய ஆறு அறிக்கைகள் சென்னைக் கல்விச் சங்கத்து இதழ்களில் வெளிவந்தன.

Oriental Historical Manuscripts

The Rev. William Taylor, 1835-இல் இரண்டு பாகங்களாக வெளியிட்ட நூல் 'ஓரியண்டல் ஹிஸ்டாரிக்கல் மானுஸ்க்ரிப்ட்ஸ்.'

சரித்திர சம்பந்தமான ஏட்டுச் சுவடி நூல்கள்

வில்லியம் டெய்லர், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள சரித்திர சம்பந்தமான ஏட்டுச் சுவடி நூல்கள், முதல் பாகம், பக்கம் 203 இல் (1835) பாண்டியர் வரலாறு பற்றிய செய்திகளைச் சொல்லியுள்ளார்.

கி.பி.1323

"பிறகு, சாலி வாகன சகாப்தம் ஆயிரத்து இருநூற்று நாற்பத்தாறுக்குச் சரியான கொல்லம் அழிந்த ஆண்டு இருநூற்று இருபத்தேழு ருதிரோத்காரி வருஷம் ஆனி மாதம் பராக்கிரம பாண்டியன் ஆண்டு வந்த நாளையில் தில்லியிலிருந்து ஆதி சுல்தான் முல்க்கும் நேமி என்பவனும் வந்து" நாட்டைப் பிடித்துக் கொண்டார்கள் இதற்கு 'கி.பி.1323 ஆம் ஆண்டு மே -ஜுன் மாத காலத்தில் முஸ்லிம்கள் மதுரையைப் பிடித்துக் கொண்டு, அவ்விடம் ஒரு படையை நிலையாக வைத்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது' என்று தி.நா. சுப்பிரமணியன், தனது தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 3 பகுதி 2 நூலில் தமிழ், பக்கம் 116 இல் விளக்கம் தந்துள்ளார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கம் செந்தமிழ்ப்பிரசுரம் வெளியீடாக பல நூல்களை வெளியிட்டது.

திருப்பணி மாலை

விபவ வருடம் மாசி மாதம் எட்டனா விலையில் மதுரைத் தமிழ் சங்க முத்திராசாலையில், செந்தமிழ்ப் பிரசுரம் 27 வது (உஎ) வெளியீடாக வந்த நூல். 'திருவாலவாயுடையார் கோயில்', 'திருப்பணிமாலை'. இது மதுரைத்தல வரலாற்றுடன், மதுரைத் தமிழ்ச்சங்கத்- தக்கிராசனாதிபதியும், பாலவனத்தம் ஜமீந்தாருமான பொ. பாண்டித்துரைத் தேவரால் பரிசோதிக்கப் பெற்றது. அந்த நூலின் துவக்கம் 'மதுரைத்தல வரலாறு' ஆகும்.

மதுரைத்தல வரலாறு

"சுவாமி உடையார் திருவாலவாயுடைய தம்பிரானார் கோயில் கபாலியுடைய நயினார் மதுரைக்கு வாய்த்த பெருமாள் கோயில் (ஞாபகம்)" உடைய சிவன் புதல்வனுக்கிரனுக்கப்பால், அடையு முடியையெட்டுலக்கத் துடையறுபத் தையாயிரத்தறு நூற்றைம்பதின் மேலழகன் கைவேற் குலசேகரன்" இப்படி, குல சேகர பாண்டியன் முதல் வாளால் விழித்துறங்கும் பெருமாள் பராக்கிரம பாண்டியத் தேவர் வரைக்கும் வெகு பாண்டியாதிக்கம் அனுபவித்து, வாளால் விழித்துறங்கும் பராக்கிரமபாண்டிய தேவரை கலியுகத்தில் சாலிவாகன சகாப்தம் 1246 க்கு கொல்லமழிந்து ஆண்டு "ரு0௧"க்கு மேல், ருத்ரோத்காரி வருட ஆனி மாதம் வடக்கே டில்லியிலிருந்து ஆதி சுலுத்தானும் **மலுக்கு நேமியான்** *என்பானும் வந்து பராக்கிரம பாண்டிய தேவரைப் பிடித்துக் கட்டிக் கொண்டு டில்லிக்கு அனுப்புவித்துப் போட்டு, ராச்சியத்தைக் கட்டிக் கொண்டார்கள்."*

மலுக்கு நேமியான்

இதற்கு அடிக்குறிப்பில், இது நடந்தது கி.பி. 1323 மலுக்கு நேமியான் அபகீர்த்தி வாயந்த "அல்லா I" என்பவனது சந்நதியானாகிய பிரிஷ்டாவைச் சார்ந்த மாலிக் நேபிகாபராக இருக்கும் வேண்டுமென்பர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயில் மாநகர்

1963 சூனில், மதுரை மீனாட்சி திருக்கோயில் திருப்பணி குழு வெளியிட்ட நூல் கோயில் மாநகர் (மதுரை மீனாட்சி சுந்தரர் திருக்கோயில் வரலாறு): திருப்பணிக் குழுத்தலைவர் தமிழவேள் பி.டி. இராசன் அவர்கள் விருப்பத்திற்கிணங்கத் திருப்பணிக் குழு உறுப்பினர் கி. பழநியப்பன் இயற்றிய நூல் இது. அந்த நூலில் பக்கம் 198 இல் உள்ள வரிகள் இதோ..

பூட்டிக் கிடந்த கோயில்

"கி.பி. 1310 இல் மாலிக்காபூர், தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வந்து, கோயில்கள் பலவற்றைக் கொள்ளையிட்டான்; இதைக் கேள்வியுற்ற பாண்டியன் மதுரையை விட்டுக் காளையார் கோயிலுக்கு ஓடிவிட்டான்.

கோயில் நிருவாகிகள், கோயிலின் பாதுகாவலை முன்னிட்டுக் கருவறையிலிருந்த மூர்த்திகளை மறைவிடத்தில் வைத்து விட்டுத் தங்க விக்கிரங்களையும், நகைகளையும் மட்டும் எடுத்துக் கொண்டு, நாஞ்சில் நாட்டுக் கிலுகிலுப்பைக் காட்டுக்குச் சென்று விட்டனர். அவ்வாறு செல்லுமுன் அவர்கள், கோயிலைப் பூட்டிக் கரிய மாணிக்கப் பெருமாள் கோயிலில் பூசைசெய்யும் குல சேகரப்பெருமான் என்பாரிடம் சாவியைக் கொடுத்து, அவர்கள் வகையில் பின்னொரு காலத்தில் எவர் வந்து கேட்பினும் சாவியைத் திரும்பத் தந்துவிட வேண்டுமென்று செப்புப்பட்டயம் எழுதிப் பெற்றுக் கொண்டனர்.

இக் குலசேகரப் பெருமான் இரண்டாம் நிருவாகியாகிய மனுநீதி கண்ட பிரமாதிராயர் குடும்பத்தில் வளர்ப்பு மகனாகச் சென்றவராவர். மாலிக்காபூரும் மதுரைக் கோயிலின் பெரும் பகுதிகளை இடித்துச் சென்றான்.

குல சேகரப் பெருமானே நீண்ட நாட்களாச் சூனிய பூசையாகக் கோயிலில் செய்து வந்தார். பின்னர் கி.பி.1378 இல் மகமதியர் ஆட்சியினின்று மதுரையை மீட்டு வித்த கம்பண்ண உடையார், **பூட்டிக் கிடந்த கோயிலைத் திறக்க விரும்பினார்.**

மறைத்து வைக்கப்பட்டிருந்த திரு உருவங்கள்

அவர், கோயில் தானிகர் யாரென்று கேட்ட போது குலசேகரப் பெருமான், தானே தானிகர் என்று கூறி கோயிலைத் திறந்து, மறைத்து வைக்கப் பெற்றிருந்த திருவுருவங்களைக் காட்டினார். கம்பண்ண உடையாரும் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து அட்டபந்தனக் கும்பாபிடேகமும் செய்தார்." இவை,

'கோயில் மாநகர்' நூலில் ஆலய ஆட்சி வரலாறு பகுதியில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் ஆகும்.

பூட்டிக்கிடந்த கோயிலைத் திறந்து திரும்பவும் பூஜை துவங்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

மறைத்து வைக்கப்பட்டிருந்த திரு உருவங்களும் கொண்டு வரப்பட்ட செய்தியையும் அறிந்து கொள்ளுங்கள்,

திருப்பணிமாலை நூலில் கி.பி. 1323 இல் மதுரை முஸ்லிம் ஆட்சியின் கீழ் வந்தது என்று குறிப்பிட்டுட்டிருப்பதையும்,

கோயில் மாநகரில் கி.பி. 1310-இல் கோயில் பூட்டப்பட்டதாக கூறப்பட்டிருப்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

15.3.1311

பல கஷ்டங்களைக் கடந்து, கடினமான பாதைகளைத் தாண்டி 15.3.1311 மாலிக்காபூர் மலபார் எல்லைக்குள் வந்து சேர்ந்தார். அப்பாஜி முகல் (Abaji) என்பவர் உடனிருந்தே மாலிக்காபூரைக் கொல்லத் திட்டமிட்டுத் தோற்றார்.

தரமாலி (Tarmali) தாபர் (Tabar) கணவாய்களைக் கடந்து கனோரி (Kanauri) Kanobar) நதி வழியாகச் சென்று, 26.3.1311 இல் கடற்கரையில் உள்ள பிர்துல் பட்டனை (Birdhul Pattan) நோக்கிப் புறப்பட்டனர் மாலிக்காபூரும் அவரது படையினரும்.

வீரபாண்டியன்

மாலிக்காபூர் நெருங்கி வரும் செய்தி அறிந்ததும் வீரபாண்டியன் கடல் மார்க்கமாக தப்பி ஓடிட முதலில் எண்ணினார்.

ஆனால் கடற்கரை ஆபத்துக்களை மனதில் கொண்டு, தனத முடிவை மாற்றி, தனது நாட்டின் உள்புறத்தில் ஏதாவது பாதுகாப்பான இடத்திற்கு போகத் தீர்மானித்தார். அவரது தலைநகரை முஸ்லிம்படை அடைந்தபோது, தன்னால் சேகரித்துக் கொள்ளக்கூடிய மட்டும் படைகளைச் சேகரித்து அவர்களைப் பகைவர்கள் வரும் வழியில் நிறுத்தி விட்டு, அந்த இடத்தைக் காலி செய்தார் வீரபாண்டியன்.

ஹிந்து – முஸ்லிம் கூட்டுப்படை

மாலிக்காபூர் நகரத்தின் எல்லைக்குள் வந்தபோது அவரது வழியை மறித்துக் கொண்டு, **ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் கொண்ட பாண்டிய மன்னரின் குதிரைப்படை நிற்பதைக் கண்டார்.**

'Therefore, when Malik Naib approached the Precincts of the City he found that his path was barred by an army **consisting of the Hindu and Muslim Cavalry in the service of the Pandya.**

ஹிந்துக்களும் - முஸ்லிம்களும் இணைந்த பாண்டிய மன்னரது குதிரைப்படை மாலிக்காபூர் படையைத் தாக்கியது. *இருதரப்பினருக்கிடையே கடுமையான யுத்தம், பிற்பகல் வரை தீவிரமானப் போர், பொழுது சாய்ந்ததும் போர் நிறுத்தம்.*

"He comanded his forces to attack them furthwith, and a fierce engagement took place between the two armies.

என். வெங்கடரமணய்யா

"The battle raged with much ferocity throughout the afternoon up to the time of the Sunset" (N. Venkataramanyya, M.A., Ph.D., Reader in Indian History and Archaeology, University of Madras, 1942, Madras, The Early Muslim Expansion in South India, page 60).

பாண்டிய மன்னர் பக்கமிருந்து மாலிக்காபூரை எதிர்த்துப் போரிட்டவர்கள் 20,000 முஸ்லிம்கள் ஆவர்.

கிஷோரி சரன்லால்

History of the Khaljis (A.D. 1290 - 1320) *என்ற நூலில்* Kishori Saranlal, *(1967-இல்) குறிப்பிடும் வரிகள் இதோ . . .*

'About 20,000 Musalmans, who had settled for long in South India and who were fighting on the side of the Hindu's deserted to the imperialists and were spared.'

பாண்டியர் படையில் முஸ்லிம்கள்

மாலிக்காபூர் தென்னகத்தில் படையெடுத்து வந்தபோது, பாண்டிய மன்னரின் படையில் பெரும் பங்காற்றியவர்கள் முஸ்லிம்கள்.

இது, மன்னர்களுக்கிடையே பொன்னாசையாலும் நடைபெற்ற போரே தவிர, மதங்களுக்கிடையே நடைபெற்ற போர் அல்ல என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்றினைக் காட்டிட முடியும்?

தலைநகரிலிருந்து பாண்டிய மன்னர் தப்பினார்; மாலிக்காபூர் அவரைப் பின் தொடர்ந்தார். Ariz-I-Mamalik *அரெஸ் இ மம்மாலிக் ஆன குவாஜா காஜி* (Khwaja Haji) *தலைமையின் கீழ் ஒரு பெரும் ராணுவம் பிர்துலைக் கண்காணிக்குமாறு செய்து விட்டு மாலிக்காபூர் தொடர்ந்தார்.*

பெரும்மழை – பெரும்போர் – பெரும் சேதம்

பெரும் மழை பெய்தது. திரும்பவும் பிர்துலுக்கு வந்தார் மாலிக்காபூர். மழையின் கோரத்தாண்டவத்தால் அவரது இராணுவ வீரர்கள் மிகுந்த சங்கடங்களுக்குள்ளாயினர். மழைநீர் ஆயுதங்களில் புகுந்து திறனற்றதாக்கியது. வில்கள் திறன் இழந்தது. வாட்கள் துருப்பிடித்தன. அம்புகளை எய்திட முடியவில்லை.

பாண்டிய வீரர்களின் தாக்குதல்

பெரும் மழையினால் பெருத்த சேதத்திற்குள்ளாகி இருக்கும் வேளையில் பாண்டியரின் படை வீரர்கள் வீராவேசமாக வந்து, மாலிக்காபூரின் சேனைகளைத் தாக்கினர்.

மழை பொழிந்து கொண்டிருந்தது. போர் நடந்து கொண்டிருந்தது.

தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. இரத்தமும் மழையெனப் பொழிந்தது.

The Hindu rawats or the Cavalry came riding in the rain and charged them. A Fierce fight followed. A deluge of water and blood flowed forward. (Khusrau Khaza'in-ul-Futch, JIH, ix, p. 69)

பல்லாளா வழி நடத்திய முஸ்லிம் படை

போரில் பாண்டிய வீரர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இனி 'சும்மா' இருந்தால் திரும்பவும் தாக்கப்படுவோம் என்பதனை உணர்ந்த மாலிக்காபூர் முன்னேறிச் செல்ல முடிவெடுத்தார்.

மூன்றாம் பல்லாளா மாலிக்காபூர் படையை வழி நடத்திச் சென்றார். ('Ballala led the Way', ISamy, Futuh-Us-Salatin, p. 289).

காண்டூரில் கடும் போர்

மாலிக்காபூரின் படை முன்னேறுகிறது. நகரெங்கும் செல்லும் வழியெங்கும் மழை வெள்ளம் வழியில் கிணறுகளும் சாலைகளும் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு வித்தியாசமே தெரியாத நிலை. (The roads could not be distinguished from the wells and the tanks)

குதிரை வீரர்கள் வழிகாட்டிச் சென்றனர். மாலிக்காபூர் செல்லும் பாதையில் கிராமங்களில் பாண்டிய மன்னரின் படை வீரர்கள் இருந்தனர். படை பயணித்தது. வீரபாண்டியன் காண்டூருக்கு தப்பினார். உளவாகிளக் நடுஇரவில் தகவல் தந்தனர். மாலிக்காபூர் பின் தொடர்ந்தார். அங்கு வீரபாண்டியனைக் காணவில்லை. அங்கு 120 யானைகள் முகாம்; அருகில் பொன்னும் மணியும் நிறைந்த பொக்கிஷங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதைச் சுற்றி சில குதிரை வீரர்கள் காவல்காத்து நின்றனர். அவர்களை மாலிக்காபூரின் படை விரட்டியடித்தது. யானைகளும், பொக்கிஷங்களும் கைப்பற்றப்பட்டன.

காண்டூருக்குச் சென்ற மாலிக்காபூர் அங்கு கடும்போர் நிகழ்த்தினார். வீரபாண்டியன் அங்கிருந்தும் தப்பினார். மாலிக்காபூர் அந்த நகரத்தைக் கைப்பற்றினார்.

ஜலக்கோட்டா

வீரபாண்டியன் அங்கிருந்து ஜலக்கோட்டாவிற்குத் தப்பினார் என்பதை அறிந்த மாலிக்காபூர் பின் தொடர்ந்தார். அங்கிருந்து நுழைய முடியாத காட்டிற்குள் சென்று வீரபாண்டியன் ஒளிந்து கொண்டார் என்ற செய்தி கிடைத்தது. வெறுப்புடன் மாலிக்காபூர் காண்டூருக்குத் திரும்பினார்.

மர்கத்புரி (Marhatpuri)

காண்டூரில் மாலிக்காபூர் இருக்கும் வேளை; மர்கத்புரியில் கோயில் மிகுந்த செல்வமிக்கது. பொன்னும் பொருளும் பெருமளவு குவிந்து கிடக்கின்றது என்ற செய்தி சொல்லப்பட்டது. மறுநாள் கண்டூரிலிருந்து புறப்பட்டு மர்க்கத்புரியை அடைந்தார். நகைகள், வைரங்கள், முத்துக்கள், யானைகள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றிய செல்வங்களை எடுத்துக் கொண்டு 1.4.1311 இல் பிர்துலுக்கு மாலிக்காபூர் வந்தார். 3.4.1311 இல் படைகள் அனைத்துடன் புறப்பட்டார் 10.41311 இல் மதுரையை அடைந்தார். மாலிக்காபூர் மதுரை வருவதற்கு முன்பே சுந்தரபாண்டியன் தகவல் தெரிந்து குடும்பத்துடன் தப்பிச் சென்று விட்டார்.

நடக்க முடியாத இரண்டு யானைகள்

மாலிக்காபூர் மதுரை நகரில் நுழைந்தார். கோவில் வளாகத்தில் இரண்டு நடக்க முடியாத கிழட்டு யானைகள் மட்டும் நிற்பதைக் கண்டார்.

The Muslim soliders ransacked the city and the temple where they found only two old elephants which could not even walk about and they set fire to a Portion of the temple.

மிகுந்த விரக்தியுற்ற நிலையில் கோவிலின் ஒரு பகுதிக்குத் தீயிட்டார். (Dr.A. Krishnaswamy, Topics in South Indian History, From early times up to 1565 A.D. (1978, p. 222)

எரிபரந்தெடுத்தல்

போர் செய்யும் அரசன் எதிர் அரசனை அஞ்சப்பண்ணி மேற்சென்று போர் செய்தலைக் குறிக்கும் வஞ்சித்திணையில் அதன் துறைகள் 13 என்று தொல்காப்பியர் பொருளதிகாரத்தில், புறத்திணையியலில் கூறுவார். வஞ்சித்துறையில் முதலாவது இயங்குபடை அரவம், அதாவது படை செல்வதால் எழுகின்ற பேரொலி, அடுத்தது எரி பரந்தெடுத்தல் அதாவது பகை நாட்டில் தீ வைத்தல், இது பழங்கால மன்னரின் போர் மரபு ஆகும். எதிர் நாட்டு அரசன் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு ஓடி

விட்டான். ஏமாற்றப்பட்ட இன்னொரு அரசன் அந்த நாட்டிற்கு தீ வைப்பது வழக்கமான ஒன்று. அதே காரியத்தைத் தான் மாலிக்காபூர் செய்தார். பகையை எதிர்பாராது பாதுகாப்பு பற்றி கவனியாது நகருக்குள் பிரவேசித்தார்.

பாண்டிய இளவரசர்கள் பகையை மறந்தனர். பொது ஆபத்தை எதிர்கொள்ள விக்கிரம பாண்டியன் தலைமையில் படையைத் திரட்டினர். போர் நடந்தது. இறுதியில் மாலிக்காபூர் படை தோற்றது. எனினும் கைப்பற்றிய பொன்னும், மணியும், யானைகளையும் பத்திரமாக டில்லிக்கு கொண்டு சென்றார் மாலிக்காபூர்.

டில்லியில் மாலிக்காபூர்

III ஆம் பல்லாளாவின் வாரிசான இளவரசரை டில்லிக்கு அழைத்துச் சென்றார் மாலிக்காபூர். தனது தென்னகப் போர் வெற்றிக்குப் பெரும் உறுதுணையாக இருந்த இளவரசர் பல்லாளவை டில்லி அரசர் மகிழ்வுடன் உபசரித்தார். மரியாதை அங்கி, பரிசுகள், வெண் கொற்றக்கொடை ஆகியவற்றையும் வழங்கினார்.

The Sultan who was pleased with Ballala treated his son very kindly. He invested him with a robe of honour, placed a royal tiara over his head and presented him with an umbrella.

மாலிக்காபூர் வென்றெடுத்த பகுதிகளை இளவரசர் பல்லாளவிற்கே கொடுத்தும் விடுகிறார். அத்தோடு பத்து லட்சம் பொன்னும் பரிசாக அளித்தார். (He restored to him the Kingdom which MalikNaib had conquered and offered him a gift of ten Lakhs of tankas. The Sultan having thus shown much liberality to Prince Ballala, sent him back to the court of his father (Futuh-us-Salatin, p. 290) (முற்கூறிய வெங்கடரமணய்யா நூல் பக்கம் 67)

தேவகிரி இராமச்சந்திர தேவாவை மிக்க மரியாதையுடன் முன்பு நடத்தியதைப் போல, வீரவசந்த வல்லாளனையும் அன்புடன் உபசரித்து, மரியாதை செய்து, கைப்பற்றிய பகுதியையும் திரும்பவும் அவருக்கே அளித்து ஆட்சி புரியவும் அனுப்பி வைத்தவர் அலாவுதீன் கில்ஜி. இந்தப் படையெடுப்புக்களின் போது தான் ஸ்ரீரங்கம் கோயிலைத் தாக்கி அழித்தார். ராமேஸ்வரம் கோயிலை அழித்தார் என்பன போன்ற செய்திகளை இடைக்கால இந்திய வரலாற்றில் மாலிக்காபூர் சரித்திரத்தைப் பற்றி மிகைப்படுத்தி கூறிவருகிறார்கள். இதனை ஆய்வு செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம்.

மர்கத்புரி அல்லது பிரமாஸ்திபூர்

பிரமாஸ்திபூர் அல்லது மர்கத்புரி என்னுமிடத்தில் இருந்த மிகப் பெரிய ஆலயத்தில் மாலிக்காபூர் கொள்ளையிட்டார் என்று கூறுகிறார்கள்.

இந்த ஊர் எது என்பதை இதுவரையில் உறுதியிட்டு எவரும் முடிவு கூறவில்லை.

மாலிக்காபூரின் பாண்டிய நாட்டுப் படையெடுப்பைப் பற்றிய விவரங்கள் அமிர் குஸ்ரூ, ஜியாவுதீன் பரணி ஆகியோரின் குறிப்புக்களிலிருந்து கிடைக்கின்றன. **அவற்றுள் சில ஊர்ப் பெயர்களும் மற்ற சில விவரங்களும் இன்னும் வரலாற்றில் தெளிவு பெறவில்லை என்பதை எவரேனும் மறுத்திட முடியுமா?**

கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி

வரலாற்றாசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி மாலிக்காபூர் படை சென்ற பாதையைப் பற்றிக் கூறுகையில் 'கண்டூர் எங்கிருந்தது என்று தெரியவில்லை' என்கிறார். மர்ஹத்புரியை காஞ்சிபுரம் என்கின்றார்.

He therefore marched to Kanchipuram (or Marhatpuri to the Muslim Historians) (A History of South India, 1958, p. 220).

டாக்டர் A. கிருஷ்ணசாமி

மர்கத் புரி, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பாலாற்றின் தென் கரையிலுள்ள விரிஞ்சிபுரத்தைக் குறிக்கும் என்கிறார்.

"Brahmastipur or Marhatpur might refer to Vrinchipuram on the Southern bank of the river palar in North Arcot."

தனது 'Topics in South Indian History' *நூலில் (1978) பக்கம் 221 இல் அடிக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கும் டாக்டர் அ. கிருஷ்ணசாமி, நூலின் உள்ளே, இந்த பிரமாஸ்திபூர் என்ற இடம் காஞ்சிபுரம், அல்லது சிதம்பரம் அல்லது சீர்காழி என்ற இடங்களில் ஒன்றாக இருக்கக்கூடும் என்று குறிப்பிடுகிறார்.*

அதற்கு மேலும் மாலிக்காபூர் துவார சமுத்திரத்திலிருந்து, மேற்குப் பகுதியோரமாக வீரதவளப்பட்டினத்திற்கு (பீர்துல்) வந்ததாகத் தெரிகிறதேயன்றி, கீழைக் கடற்கரைப் பாதையாக வந்ததாகத் தெரியவில்லை. எனவே பிரமாஸ்திபூர் என்னும் இடம் திருவரங்கம் அல்லது திருவானைக்காவாக இருக்க வேண்டும் என்கிறார்.

எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்

பிரமஸ்தபூரை 'சிதம்பரம்' என்று வரலாற்றாசிரியர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் தனது 'South India and Her Muhammadan Invaders' *நூலில் வாதிடுகிறார்.*

ஸ்ரீரங்கம் தாக்கப்பட்டதா?

பிரமஸ்தபுரி 'சிதம்பரம்' என்றால் மாலிக்காபூரால் ஸ்ரீரங்கம் தாக்கப்பட்டதா? அமீர் குஸ்ருவின் கூற்றுக்களில் ஹிந்துக் கோவில்களைத் தாக்கியதாக மட்டுமே செய்தி உள்ளது. பெயர் குறிப்பிடப்படவில்லை.

பிரமஸ்தபுரி என்பது ஸ்ரீரங்கத்தை குறிக்காது என்பர் சிலர். பர்மத் புரியில் இருந்த லிங்கம் உடைக்கப்பட்டது என்று கூறி இருப்பதால், ஸ்ரீரங்கம் கோவிலில் லிங்கத்தைக் காணுவதற்கு அரிது என்பதாலும், பர்மத்புரி ஸ்ரீரங்கத்தை குறிக்காது என்பர்.

(லிங்கம்- சைவர்கள் வழிபடுவது - ஸ்ரீரங்கம் வைணவக் கோயில்) ஸ்ரீரங்கக் கோயிலை அழித்ததாக அமீர் குஸ்ரு ஐயத்திற்கு இடமற்ற வகையில் எதையும் குறிப்பிட்டிருக்கவில்லை.

கந்தூருக்குச் சுற்றியிருந்த இடங்களில் கோயில்களை அழித்தார் என்று கூறப்பட்டிருப்பதால் கந்தூர் என்பது கண்ணனூரைக் குறிக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்வோமேயானால் அதற்கு அருகிருந்த ஸ்ரீரங்கம் கோயிலும் படையெடுப்பின் பாதிப்பில் இருந்து தப்பித்திருக்க வழியில்லை என்று கூறப்படுகிறது; கருதப்பப்படுகிறது; சொல்லப்படுகிறது.

7

'14-ஆம் நூற்றாண்டில் தமிழர் சுதந்திரம் குலைந்தது. பாண்டி நாட்டின் பட்டத்திற்கு இருவர் போட்டி போட்டனர். ஒருவர், தில்லி சுல்தான் அல்லாவுதீன் உதவியை நாடினார். சுல்தான் மாலிக்காபூரைத் தெற்கே அனுப்பினான். கி.பி. 1310 இல் மாலிக்காபூர் தென் நாட்டைத் தவிடு பொடியாக்கினான். எங்கும் தீ மூட்டி மதுரையைப் பொட்டலடித்தான். (மீனாட்சி சுந்தரேச்சுவரர் சந்நிதி தான் பாக்கி) இராமேஸ்வரத்தில் ஒரு மசூதி கட்டினான்; வந்த வழியே போய்ச் சேர்ந்தான்; (கவியோகி, சுத்தானந்த பாரதி, தமிழ் உணர்ச்சி, சென்னை, 1963, பக்கம் 55)

மாலிக்காபூரின் தென்னகப் படையெடுப்பு (1311) நிகழ்ச்சிகளை வர்ணிக்கும் உள்ளூர் சரித்திர ஆசிரியர்கள் அவரை கொள்ளைக்காரனைப் போல் சித்தரித்துக் காட்டுகிறார்கள்.

தென்னாட்டையே துவம்சம் செய்து விட்டதைப்போல அங்கலாய்க்கிறார்கள். வரலாற்றில் ஒரு துளி . . . ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.... மாலிக்காபூர் குறித்த உண்மை வரலாற்றுக் குறிப்புகள் இதோ...

என். வெங்கடரமணய்யா

சென்னைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்று நூல்களின் (Historical Series) *வரிசையில் 17 வது நூலாக 1942-இல் பேராசிரியர் டாக்டர் என். வெங்கடரமணய்யா எழுதி வெளியிட்ட 216 பக்கங்களைக் கொண்ட, 'துவக்க காலத்தில் தென் இந்தியாவில் முஸ்லிம்கள் விரிவடைதல்'* (The Early Muslim Expansion in South India) *எனும் நூலில், பக்கம் 73-இல் காணப்படும் அரிய செய்தி . . .*

பாதுகாப்பும் பொதுமன்னிப்பும்

'Malikkafur, there upon, advanced on Devagiri and took Possession of it. **He treated the people with kindness and Moderation. As soon as he entered Devagiri, he assured the people of safety; nobody was slain and none imprisoned. He despatched letters to all parts of the Kingdom declaring general amnesty.**

மாலிக்காபூர் தேவகிரிக்கு முன்னேறிச் சென்று அதனைக் கைப்பற்றினார். மக்களை அன்பாகவும் மிதமாகவும் நடத்தினார். தேவகிரியைச் சென்று அடைந்தவுடன் மக்களுக்கு பாதுகாப்பை உறுதி அளித்தார். ஒருவரும் கைது செய்யப்படவோ, கொல்லப்படவோ இல்லை. ராஜ்யத்தின் எல்லா பாகங்களுக்கும் பொது மன்னிப்பை அறிவித்து கடிதங்களை அனுப்பினார். அது மட்டுமா? வரலாற்றுப் பேராசிரியர் வெங்கடரமணய்யா தொடர்ந்து எழுதுகிறார் . . .

பயமற்ற ஆட்சி

"These measures restored tranquillity in the minds of the people, and they felt that they **had nothing to fear from their new Muslim masters.**

இந்த நடவடிக்கைகள் மக்களின் மனங்களில் அமைதியைத் திரும்ப ஏற்படுத்தித் தங்களுடைய புதிய முஸ்லிம் ஆட்சியாளர்களிடம் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று அவர்கள் உணர்ந்தனர்.

"Kafur next devoted his attention to administrative affairs. He summoned the officials of the secretariat, and examined the general accounts of the kingdom as well as of the Palace establishment.

அடுத்து மாலிக்காபூர், நிர்வாகக் காரியங்களில் தனது கவனத்தைச் செலுத்தினார். தலைமைச் செயலகத்தின் அதிகாரிகளை அழைத்து ராஜ்யத்தின் பொதுவான கணக்குகளையும், அதோடு அரண்மனை நிர்வாகத்தினரையும் ஆய்வு செய்தார்.

அன்பைப் பொழிதல்

'Though he showed kindness to people who submitted to his authority, he put down rebels with a stern hand.'

தன்னுடைய அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்த மக்களிடம் அன்பைப் பொழிந்தார்; கலகக்காரர்களை உறுதியான கரம் கொண்டு ஒடுக்கினார்.

"Under his wise administration the country greatly prospered. Malik Naib knew that the prosperity of the state depended on agriculture; he summoned the Cultivators to his presence; Spoke to them kindsly and granted them leases. The farmer being convinced that they had a ruler who was interested in promoting their welfare devoted themselves to their lands vigorously, and extracted greater yield from the soil than before. Although the rule of the Malik Naib was generally characterised by great wisdom and sagacity, it was harsh and oppressive in one respect"

வளர்ந்த வேளாண்மை

'மாலிக்காபூரின் அறிவார்ந்த நிர்வாகத்தின் கீழ் நாடு மிகவும் செழிப்பான நிலையை அடைந்தது. நாட்டின் செழிப்பு வேளாண்மையைச் சார்ந்து இருந்தது என்பதை மாலிக்காபூர் அறிந்திருந்தார். அவர் விவசாயிகளை தன்னிடம் அழைத்து, அவர்களிடம் அன்பாகப் பேசி, அவர்களுக்கு நிலங்களை குத்தகைக்கு வழங்கினார்.

தங்களது நலன்களை முன்னேற்றுவதில் அக்கறை கொண்ட ஒரு ஆட்சியார் தங்களுக்குக் கிடைத்திருக்கிறார் என்று வேளாண் மக்கள் திருப்தியுற்றனர். தங்களது நிலங்களில் உழவர்கள் முனைப்புடன் செயல்பட தங்களை அர்ப்பணித்துக் கொண்டு காரியமாற்றினர். அதன் பயனாக நிலத்தில் முன்பு கிடைத்ததை விட கூடுதல் மகசூலைப் பெற்றனர். பொதுவாக மாலிக்காபூரின் ஆட்சி மிகுந்த அறிவோடும், புத்திக் கூர்மையுடனும் நடத்தப் பட்டாலும், ஒரு வகையில் அது கடுமையானதாகவும், ஒடுக்கும் தன்மையோடும் இருந்தது."

மாலிக்காபூரின் மகோன்னத நிர்வாகத் திறமை பற்றிய இத்தகைய செய்தியினை முற்றிலுமாக வரலாற்றில் இருந்து

மறைத்து விட மேற்கொள்ளப்படும் முயற்சிகளை உணர்ந்து கொள்ள வேண்டிய பொறுப்பு தலையாயக் கடமையாக உள்ளது என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

சித்பந்ராமேஸ்வர்

வரலாற்றாசிரியர் பெரிஷ்டா (Ferishta) சித்பந்ராமேஸ்வரில் (Sit Band Ramesvar) மாலிக்காபூர் கல்லாலும், சாந்தினாலும் ஒரு பள்ளி வாசல் கட்டினார் என்று உறுதியாகச் சொல்லியுள்ளார். இதை வைத்துக் கொண்டு, மாலிக்காபூர் ராமேஸ்வரம் வரை சென்றார்; அங்கு கோயிலை அழித்தார்; பள்ளிவாசலை நிர்மாணித்தார் என்று எழுதி வருகிறார்கள்.

சித்பந்ராமேஸ்வரத்தை, பாம்பன் தீவிலுள்ள இராமேஸ்வரத்துடன் குழப்பிக் கொள்ளக்கூடாது.

ஏனென்றால் பெரிஷ்டா குறிப்பிடும் சித்பந்ராமேஸ்வர் என்பது உமான் கடலில் (ஏமன் கடலில்) (அரபிக் கடலில்) உள்ளது. Sea of Umman (the Arabian Sea) துவாரசமுத்திர துறைமுகத்திற்கு அடுத்து அந்த நகரம் இருந்தது. மேலும் இங்கு கூட மாலிக்காபூர், பள்ளி வாசல் எதுவும் கட்டினாரா? என்பதே சந்தேகத்திற்குரியது தான். ஏனென்றால் பெரிஷ்டாவைத் தவிர வேறு முந்தைய எந்த இஸ்லாமிய வரலாற்று ஆசிரியரும் இது பற்றிக் கூறவில்லை.

பள்ளிவாசல்

மாலிக்காபூரின் படையெடுப்பு பற்றிய நிகழ்ச்சிகளைப் பற்றி விரிவாகவே விளக்கிடும் குஸ்ரூ (Khusrau) வாசப் (Wassaf) இசாமி (Isamy) பரணி (Barani) போன்ற சரித்திர ஆசிரியர்கள் எவரும் சித்பந்ராமேஸ்வரத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலேயும் மாலிக்காபூர் பள்ளிவாசல் கட்டினார் என்று கூறவே இல்லை. உண்மை இவ்வாறு இருக்க, இராமேஸ்வரத்தில் இருந்து மிகப் பெரிய ஹிந்து ஆலயத்தை இடித்துவிட்டு, அங்கு மாலிக்காபூர் பள்ளிவாசல் ஒன்றை எழுப்பி, அதற்கு அலாவுதீன் கில்ஜி பெயரையும் சூட்டினார் என்று இன்று வரை வரலாற்றுப் புத்தகங்களில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. பிஞ்சு உள்ளங்களில் பிள்ளைப் பருவத்திலேயே நஞ்சு சொரியப்பட்டு, மததுவேஷ உணர்வு வளர்க்கப்பட காரணமும் ஆகிறது.

இம்பீரியல் கெஜட்டியர் ஆப் இந்தியா

இப்பொழுது ராமேஸ்வரத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அந்தக் கோயில், சகல சிற்பக் கலை மேன்மையுடனும், அழகுடனும், இம்பீரியல் கெஜட்டியரில் சொல்லப்பட்டுள்ள அதனுடைய

அளவுகளுடனும் (Imperial Gazetteer of India, Index Volume, pp 818 - 819. *இன்னும் இருந்து கொண்டிருக்கிறது என்பர் கிஷோரிசரன்லால்.* "Now the well-known temple of Rameshvarm still exists in all its architectural splendour, the beauty and dimensions of which are given in the Imperial Gazetteer")

வரலாற்றாசிரியர் குஸ்ரூ மர்கத்புரியைப் பற்றிப் பேசுகிறார். இது சிதம்பரமாக இருக்கக்கூடும்; எந்த சம காலத்திய ஆசிரியரும் ராமேஸ்வரம் என்ற பெயரைக் குறிப்பிடவில்லை. (No contemporary writer mentions the name of Rameshvaram)

இந்தியன் ஆன்டிகுவரி

சில நவீன காலத்திய ஆசிரியர்கள், மாலிக்காபூர் மதுரை வரை வந்ததைப் பற்றிக் கூட சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள். ராமேஸ்வரம் பற்றி அப்படியானால் சொல்லவே வேண்டியதில்லை. (Indian Antiquary, 1911, pp. 131 - 144) *கோயில் ஒழுகின் படி முஸ்லிம்கள், மதுரைக்கு வந்தது கி.பி.1324 க்கு முன் அல்ல என்பதுதான்.*

கே.எஸ்.லால்

மேற்கூறப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் ராமேஸ்வரத்தில் உள்ள புகழ்பெற்ற கோவிலை மாலிக்காபூர் தாக்கவே இல்லை என்று துணிந்து கூறுவேன் என்பர். கே.எஸ். லால்.

"On the basis of the above facts I venture to suggest that Malik Kafur did not raid the renowned temple of Rameshwaram" K.S. Lal, History of the Khaljis AD 1290 - 1320, 1967, p. 353).

முல்லைக்குடி எம்.ஆர். ஸுந்தரேச சாஸ்திரிகள்

இராமாயணத்தை வால்மீகி வட மொழியில் இயற்றினார். இராவணன் சீதையைக் கவருமிடத்தில் 'கோவேறு கழுதைகள்' பூட்டிய ரத்தில் வைத்து சீதையைக் கொண்டு சென்றார். (ஆரண்ய காண்டம், 1935 முல்லக்குடி எம். ஆர். ஸுந்தரேச சாஸ்திரி மொழிபெயர்ப்பு, ப714)

பி.எஸ். கிருஷ்ணசாமி அய்யர்

வால்மீகி ராமாயண ஆரண்ய காண்டம் (1970, (பக்336) ராவ் சாகிப் பி.எஸ்.கிருஷ்ணசாமி அய்யரின் மொழிபெயர்ப்பிலும் ' கோவேறு கழுதைகள்' பூட்டிய ரதத்தில் சீதையை இராவணன் கொண்டு சென்றதைக் குறிப்பிடுகிறார்.

டி. பரமசிவ அய்யர்

இராமாயணமும் இலங்கையும் (Ramayana and Lanka) என்ற கட்டுரையில் டி. பரமசிவ அய்யர் இராவணன் ஆண்ட இலங்கை மத்திய இந்தியாவில் இந்திரனா மலையுச்சியில் விந்திய மலையை அடுத்திருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

டி. ஆர். பண்டார்கர்

தண்டகாரண்யம் (Dandakaranya) எனும் கட்டுரையில் டி. ஆர். பண்டார்கர் (Bhandarkar) இதே கருத்தை உறுதி செய்கிறார்.

ஹிரலால் – எம். வி. கிபி.

இராவணன் இலங்கை இருந்த இடம் (The Situation of Ravana's Lanka) எனும் கட்டுரையில் ஹிரலாலும் (Hiralal), 'Ravana's Lanka Located' என்ற கட்டுரையில் எம்.வி. கி.பி.(M.V.Kibe)யும் விந்திய மலையைச் சார்ந்த அமரகண்ட சிகரத்தில் இராவணனது இலங்கை இருந்தது என்று ஆராய்ந்து தெளிவு படுத்தியுள்ளனர். ஜி. ராதாஸூம் இதனை உறுதி செய்கிறார்.

தீட்சிதர்

சிங்களத்தீவாகிய இலங்கையும், இராவண இலங்கையும் வெவ்வேறு இடங்கள் என தீட்சிதர் வாதிடுகிறார் மிஷ்ரா (Mishra) வி. ஹெச். வதர் (V.H. Vadar) இதனை உறுதி செய்கிறார்.

பல்வேறு இலங்கை

கீழ்க் கோதாவரி, சோட வரம்பிரிவில் **பூகலலங்கா தேமுடுலங்கா**, கிருஷ்ணா, கைகலூருவில் **சொவ்வாடலங்கா** திண்டிவனத்தில் **மாவிலங்கை,** திருப்பத்தூரில் கீழ் திருவிலங்கை முதுகுளத்தூர், பரமகுடி, திருச்சி, பெரம்பலூர், சிவகங்கை, திருவாடானை பகுதியில் **மாவிலங்கை,** திருவள்ளூரில் புது **மாவிலங்கை,** கேரளத்தில் **பாதாளலங்கா,** துளுநாடு மூல்கி அருகில் **வளலங்கா** இப்படி பல்வேறு ஊர்கள் 'இலங்கை' எனும் பெயரில் உள்ளது.

மயிலை. சீனி. வேங்கடசாமி

இலங்கையின் புராதன நூலாகிய ' மகாவம்சத்தில் இலங்கை என்னும் பெயரோ, இராவணன் என்ற பெயரோ இல்லை. 'இராவணன் இலங்கை' (1966) கட்டுரையில் மயிலை சீனி. வேங்கடசாமி 'பல நூற்றாண்டுகளாக இராவணன் ஆண்ட இலங்கைப் பற்றி தவறான எண்ணம் இருந்து வருகின்றது. இதற்குக்

காரணம் இலங்கை என்னும் பெயர் ஒற்றுமையேயாகும்' என்று ஆராய்ந்துரைப்பர். அதுபோல மாலிக்காபூர் படையெடுத்த பகுதிகள், ஊர்கள், இடங்கள் குறித்த ஆய்வு இன்னும் முற்றுப் பெறவில்லை. ஆனால் 'சித்பந்ராமேஸ்வர்' என்ற ஊர் பெயரை வைத்து, ராமேஸ்வரம் கோயிலை மாலிக்காபூர் அழித்தார் என்று அபாண்டமாக கூறிவருவதை இனியாவது நிறுத்திக் கொள்வார்களாக!

மிகைப்படுத்தப்பட்ட வரலாறு

"Exaggerated accounts of Malik Naib's Ma'bar expedition are embodied in some modern works on the history of Mediaeval India"

மாலிக்காபூரின் மலபார் படையெடுப்பைப் பற்றிய குறிப்புகள் மிகைப்படுத்தப்பட்டு, மத்திய கால இந்திய வரலாற்றைப் பற்றிய நவீன நூல்களில் கூறப்பட்டுள்ளது.

ஹிந்து சரித்திர ஆதாரங்கள்

"அலாவுதீன் கில்ஜி, முஹமது பின் துக்ளக் ஆகியோரின் படையெடுப்புக்களைப் பற்றிய உண்மைகளை இந்து சரித்திர ஆதாரங்கள் குழப்புகின்றன"

(. . . . . and the Hindu Chronicles mixup the facts connected with the Khalji and the Tughlaq expeditions (N. Venkataramanyya, The Early Muslim Expansion in south India, p. 68. p. 70)

ஸ்ரீரங்கத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் முஸ்லிம் படையெடுப்புக்கள்; எத்தனை, எத்தனை குழப்பமான செய்திகள்.

கியாஸ் உத்தீன் துக்ளக் (1320–1325)

'துக்ளக்' என்பது ஒரு குடும்பம் அல்லது ஓர் இனத்தைக் குறிக்கும் சொல் என்பர். துக்ளக் அரச குலத்திற்கு அடிகோலியவர் கியாஸ் உத்தீன் துக்ளக். அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக் காலத்தில் 'சிந்து'வின் கவர்னராக இருந்தவர், அவரது தம்பியான அல்மாஸ் பெக் (Almas Beg) இவரிடம் பணியாற்றியவர் கியாஸ் உத்தீன் துக்ளக்.

உலுக்கான் (Ulugh Khan)

சிந்துவின் கவர்னரும் அலாவுதீன் கில்ஜியின் சகோதரரும், அல்மாஸ்பெக் என்ற இயற்பெயரை உடையருமான உலுக்கானிடம் துவக்க காலத்தில் பணியாற்றி, மெல்ல மெல்ல தனது திறமையால் உயர்ந்து, அரசரானார் கியாஸ் உத்தீன் துக்ளக்.

கியாஸ் உத்தீன் துக்ளக் தனது மூத்த மகனான மலீக் பக்ருத்தீனுக்கு (Malik Fazhruddin) உலுக்கான் என்ற பட்டத்தையும் மற்ற பிள்ளைகளுக்கு, பஹ்ராம் கான், ஜபர்கான், மாமூத் கான், நஸ்ரத்கான் என்ற பட்டங்களையும் வழங்கினார்.

தனது துவக்க கால வாழ்வில், தனது முன்னேற்றத்திற்கு காரணமாக அமைந்த சிந்துவின் கவர்னர் உலுக்கான் பெயரை நினைவூட்டும் வகையிலேயே தனது மூத்த பிள்ளைக்கு 'உலுக்கான்' என்று பட்டம் வழங்கி அழைத்தார். உலூக் என்றால் 'சக்தி வாய்ந்த', 'மாபெரும்' என்று பொருளாகும் (Ulugh means powerful, great)

முகமது பின் துக்ளக் (1325–1351)

முகமது பின் துக்களக்கை வரலாற்றாசிரியர்கள் பலவாறு அழைக்கின்றனர். முஹமது ஷா துக்ளக் (Muhammad Shah) முஹமது பின் துக்ளக் (Muhammad bin Tughluq) முஹமது சாகி துக்ளக் (Muhammad Shai-i- Tughluglug) முஹமது பின் துக்ளக் ஷா (Muhammad Bin Tughkluq Shab) இப்படி பலவாறாக அழைக்கப்பட்ட முஹமது பின் துக்ளக்கிற்கு உலுக்கான் என்ற பெயரும் இருந்தது. இவரது தென்னிந்திய படையெடுப்புக்கள். . . இவர் மலபார் வரை வந்தாரா? இல்லையா? அல்லது அவரது தளபதிகள், மலபார் பகுதிக்கு வந்தார்களா? என்பது பற்றிய விரிவான விவாதத்திற்கு, விரிவஞ்சி செல்லவில்லை.

இந்த காலகட்டத்தில் உலுக்கான் தென்னகத்திற்கு வந்தபோது, ஸ்ரீ ரங்கத்திற்கும் வந்தார். அங்கு பல்லாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர் என்பது தான் சுஜாதாவின் அங்கலாய்ப்பு.

ஆனந்த விகடன்

17.04.2005 ஆனந்தவிகடன் பக்கம் 148 இல் 'கற்றதும் பெற்றதும்' பகுதியில் சுஜாதா எழுதிய வரிகளை மீண்டும் ஒரு முறை நினைவு கூறுவோம்.

துவேஷ நஞ்சு

'கோயில் ஒழுகு' நூலில் ஆராய்ச்சிக்குரிய விஷயங்கள் என்று பதினோரு விஷயங்கள் குறிப்பிட்டிருக்கிறார் வைஷ்ணவஸ்ரீ. அதில் கோவிந்தா கூட்டத்தினர் பாடும் நாட்டுப் புறப்பாடல்களில் வரலாற்று உண்மைகள் ஏதேனும் பொதிந்துள்ளதா என்று கேட்டிருக்கிறார். நிச்சயம் இருக்கலாம். நாட்டுப்புறப்பாடல்கள் கல்வெட்டுகள் போல! முக்கியமான பஞ்சம், வெள்ளம், இயற்கையின் சீற்றங்கள், படையெடுப்புக்கள் எல்லாம்

நாட்டுப்புறப் பாடல்களில் ஏதேனும் வரியில் பிரதிபலிக்கும் இத்துடன் இந்தப் பகுதியை நிறைவு செய்திருந்தால் சுஜாதாவின் 'நடுநிலைமை'யை நாடு புரிந்திருக்கும். ஆனால் அதற்கு மேலும், அவர் உள்ளத்தில் இருந்து 'துவேஷ நஞ்சு' கொட்டுகிறது என்பதை நிரூபிக்கும் வகையில் எழுதுகிறார். **'யாராவது கோவிந்தா கூட்டத்தின் பாடல்களை உன்னிப்பாகப் படியெடுத்தால் கி.பி.1323 இல் முகமதியர் படையெடுப்பின் போது 13,000 ஸ்ரீ வைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி பற்றி ஏதாவது செய்தி கிடைக்கலாம்'.**

அவரது உள்ளத்தில் உள்ளதை வார்த்தையாக்கியிருக்கிறார். கோவிந்தா கூட்டத்தின் பாடல்கள் ஆராய்ச்சி செய்யப்படட்டும், உலகிற்கும் மனித சமுதாயத்திற்கும் நன்மை பயக்கும் விஷயங்கள் அதில் இருந்தால் நாட்டுக்கு அறிவிக்கட்டும். நாமும் சேர்ந்து வரவேற்போம்; ஆனால் அதை விடுத்து, பிரசித்தி பெற்ற அவர், எழுதினால் அடுத்த நொடியே வாசகர்களை நேராகச் சென்று அடையக்கூடிய சிகரத்தில் இருக்கும் எழுத்தாளரான சுஜாதாவின் சிந்தனையில் இந்த துவேஷ உணர்வு எழுவது அழகா? நாட்டிற்கு நல்லதா?

கோவிந்தா கூட்டம்

சுஜாதா, கோயிலொழுகையும், ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயையும் மேற்கொள்காட்டி எழுதியுள்ளாரே! அந்த நூலில் 'கோயிலொழுகு' பகுதி 1 பக்கம் 227 இல் வைஷ்ணவ ஸ்ரீ சொல்லியுள்ள செய்தி இதோ . . .

"ஸ்ரீ ரங்கத்தில் தற்போது நடைபெற்று வரும் மூன்று ப்ரஹ்மோத்ஸவங்களில் சித்திரை ப்ரஹ்மோத்ஸவமாகிய விருப்பன் திருநாளுக்கு மட்டுமே குறிப்பாக 8 ஆம், 9 ஆம் உத்ஸவ நாட்களில் பாமரமக்கள் பெருமளவில் கூடி நம் பெருமானைப் போற்றி மகிழ்ந்து வருகின்றனர். தம்முடைய விளைநிலங்களிலே பயிரிடப்பட்ட பொருட்களில் மற்றும் தம்முடைய கால்நடைச் செல்வங்களாகிய பசுமாடு, கன்று ஆகியவற்றுடன் குடும்பத்தினரோடு வருகை தந்து நம் பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கின்றனர் இவர்கள் "கோவிந்தா கூட்டமென்று" அழைக்கப்படுகிறார்கள்.

துவேஷத்திற்குத் தூபம்

விருப்பண்ண உடையார் காலந்தொடங்கி வழி வழியாக அரங்கனுக்கு தங்களால் இயன்ற ஏதாவது ஒரு பொருளைத் தந்து அவனுக்கு பல்லாண்டு பாடும் நினைவோடு இவர்கள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் எங்கே? எழுதி வைத்த 'ஸ்ரீவைஷ்ணவர்களான' நாம் எங்கே?

அவர்களுக்குத் தெரிந்த நாட்டுப்புறப் பாடல்களைக் கூட்டம் கூட்டமாக அமர்ந்து அதிலும் குறிப்பாகச் சித்திரைத் தேரின் பின் பகுதியில் அமர்ந்து பாடுகிறார்கள். அவர்கள் பாடும் பாட்டில் பல வரலாற்றுச் செய்திகள் புதைந்திருக்கலாம். இது பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொண்டால் பல புதிய செய்திகள் வெளிவரக்கூடும்.''

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ இவ்வாறு தான் தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்; ஆனால் சுஜாதா அவர்களே நீங்களோ துவேஷத்தைத் தூண்டும் வகையில் தூபம் போட்டு எழுதியிருப்பது நியாயந்தானா?

ஆராய்ச்சியில் நல்ல விஷயங்கள் நாட்டிற்கு கிடைக்க வேண்டும் என்று தாங்கள் எதிர் பார்த்திருக்கக் கூடாதா?

முகமதியர் படையெடுப்பின் போது வைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி பற்றி செய்தி கிடைக்கலாம் என்று தங்களது எதிர்பார்ப்பு, தங்களது உள்ளுணர்வு, நாட்டிற்கு நல்லது தானா?

விசாரணைக்கு முன்பே தீர்ப்பா?

'இந்தப் பாடல்களில் வரலாற்று உண்மைகள் ஏதேனும் பொதிந்துள்ளனவா? என்பதைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும்' என்று தான் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ தனது கோயிலொழுகு நூலில், 'கோயிலொழுகு கல்வெட்டுகள் தரும் செய்திகளின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால ஆய்வுகள்' எனும் தலைப்பில் (பக்கம் (XV to XVIII)*) கூறியுள்ளார். ஆனால் தாங்களோ வெகு வேகமாக முந்திக் கொண்டு வைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி பற்றி ஏதாவது செய்தி கிடைக்கலாம்' என்று வழக்கு விசாரணைக்கு முன்பே தீர்ப்புச் சொன்னதைப் போல சொல்லுகிறீர்களே! நியாயமா?*

கோயில் ஒழுகு நூலைப் பற்றிய வரலாற்றாசிரியர்களின் கருத்துக்களை வாசித்திருக்கிறீர்களா?

கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி

வரலாற்றாசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி எழுதி 1963 இல் ஓரியண்ட் லாங்மன் நிறுவனத்தார் வெளியிட்ட நூல் 'Development of Religion in South India' *அதில் பக்கம் 125, 126 களில் நீல கண்ட சாஸ்திரி கூறும் வாசகங்கள் இதோ . . .*

"Vaisnav tradition preserved in the Srirangam temple Chronicle known as Koyil-Olugu (Chronicle of the temple) and other works avers that the Ranganatha temple of Srirangam was sacked twice by the Muslim invaders,

once during the invasion of Malikkafur about 1310-11 and again during the Tughlak in roads of 1327 - 8. **The different accounts differ much in details and include a number of Miracles . . .**"

"*கோயிலொழுகிலும், இதர நூல்களிலும் குறிப்பிடப்பட்டு வருகின்ற வைஷ்ணவ பாரம்பரிய வரலாறானது ஸ்ரீரங்கத்தில் உள்ள ரங்கநாதர் கோயில், மாலிக்காபூரால் 1310 - 11 இல் ஒரு முறை படையெடுக்கப்பட்டதாகவும், மறுபடியும் 1327 -28 களில் துக்ளக் காலத்திலும் படையெடுக்கப்பட்டு முஸ்லிம் படையெடுப்பாளர்களால், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் இருமுறை கொள்ளையடிக்கப்பட்டது என்றும் கூறுகிறது.* **பல்வேறுபட்ட இந்தக் குறிப்புகள் விவரங்களில் ஒன்றுக்கு ஒன்று மாறுபடுகின்றன. அநேக அற்புதங்களையும் கொண்டிருக்கின்றன.**

டாக்டர் இரா. அரங்கராஜன்

மதுரைப் பேராசிரியர் டாக்டர் இரா. அரங்கராஜன் 'கோயில் ஒழுகு' பற்றிய தனது அணிந்துரையில்' "கிபி. 1311 மற்றும் 1323 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த முகம்மதியப் படையெடுப்புக்காகக் கோயிலொழுகு மிகவும் உருக்கமான உணர்வோடு விவரித்துக் கூறுகிறது. இதில் பல சம்பங்கள் கால மாறுபாடுகள் ஏற்பட்டுக் குழப்பத்தையும் தருகின்றன. முகமதியப் படையின் தாக்குதலை வருணித்த பிறகே ஆசார்யர்களின் வரலாறு இந்த நூலில் இடம் பெறுகிறது" என்கிறார்.

வரலாற்று வரிசைமுறை சரியானதுதானா?

கோயில் ஒழுகில் 29 வது தலைப்பு டில்லீசுவரன் அழகிய மணவாளனைக் கொண்டு போனது. 30-வது தலைப்பு ஸ்தலத்தார் அழகிய மணவாளனை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்தது. 31-வது தலைப்பு ஸுரதாணி பெருமாளைத் தேடிக் காணாமல் சரீரம் விட்டது. 32 -வது தலைப்பு கொடவர் அழகிய மணவாளனைக் காத்தது. 33 -வது தலைப்பு டில்லீசுவரன் ஆச்சரியப்பட்டது. 34-வது தலைப்பு திருவரங்க மாளிகையாரையும் வேறே நாச்சியாரையும் கோயிலில் ப்ரதிஷ்ட்ப்பித்தது. 35-வது தலைப்பு அழகிய மணவாளனையும் கொடவரையும் இருளர் கண்டது. 36-வது தலைப்பு பெருமாளையும் கொடவரையும் சந்திரகிரிப்ரபு வெளிப்படுத்தினது. 37-வது தலைப்பு கொடவர் பெருமாளுடன் கோயிலில் எழுந்தருள பரிஜநங்கள் தகைந்தது. 38-வது தலைப்பு கோபணபுடையார் அழகி மணவாளனை சிங்கபுரத்தில் ஆதரித்து எழுந்தருளப் பண்ணியது. 39-வது தலைப்பு கோபணவுடையார், குண்டு ஸாளுவயர் விருப்பண உடையார் கைங்கர்யம்.40 -வது

தலைப்பு வண்ணானாலே அழகிய மணவாளனென்று தெளிந்த ராஜேந்திர சோழன் கைங்கர்யம். 41-வது தலைப்பு திருத்தாழ்வரை தாஸர், ஈரங்கொல்லி, பஞ்சு கொண்டான், இசையறியும் பெருமாள் கூட்டத்தார் என்னும் அருளப்பாடு; இப்படி முஸ்லிம் படையெடுப்பைப் பற்றியும், (கி.பி. 1311-1328 -1371) அரங்கநாதர் சிலை மீண்டது பற்றியும் சொல்லிக் கொண்டு வரும் கோயிலொழுகு.

42 வது பிரிவில் கூறும் விஷயம் ஸ்ரீமத்நாத முனிகள் கல்பித்த கட்டளையாகும்.

எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

ஸ்ரீவைஷ்ணவதாஸன், ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்ஸனம் ஆசிரியரும், கோயிலொழுகை 1976 இல் திரும்பவும் பதிப்பித்தவருமான புத்தூர் எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி எழுதிய நூல் கால நிர்ணயம்.

கால நிர்ணயம்

2002-இல் 411 பக்கங்களில் 150 ரூ விலையில் சென்னை கலைஞன் பதிப்பகம் வெளியிட்ட நூல் கால நிர்ணயம்.

அதில் நாத முனிகளின் காலம் கி.பி.823-917 என்று தெரிவித்துள்ளார். கோயில் ஒழுகில் 43-வது தலைப்பு உய்யக் கொண்டார், மணக்கால நம்பி ஆளவந்தார் வைபவம், உய்யக் கொண்டார் காலம் கி.பி.886-975 மணக்கால் நம்பி காலம் கி.பி.929-1006 ஆளவந்தார் காலம் 976-1042 இப்படி கோயிலொழுகில் வரலாறு பின் நோக்கிச் சென்று வருகிறது.

கோயிலொழுகு நூலில் கோயில் நிகழ்ச்சிகளிற் பல கால வரிசையில் இடம் பெயர்ந்து காணப்படுகின்றன. முஸ்லிம் படையின் தாக்குதலை முதலில் வருணித்த பிறகே ஆசார்யர்களின் வரலாறு கோயில் ஒழுகுவில் இடம் பெறுகிறது. விஜய நகர மன்னர்களின் ஆட்சிக் காலத்திய நிகழ்ச்சிகள் மட்டும் இந்த நூலில் கால வரிசை மாறாத படி குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே கோயிலொழுகு விஜயநகர சாம்ராஜ்யத்தின் உச்சநிலை காலத்தில் தான் எழுதப்பட்டிருக்க வேண்டும். அதிலும் தவறுகள் சில உண்டு.

விருப்பண்ண உடையார்?

கோயிலொழுகு விருப்பண்ண உடையாரை இரண்டாம் ஹரிஹரருடைய மகனாகக் குறிப்பிடுகிறது. இது தவறு, புக்கராயருடைய மூன்றாம் மகனும், இரண்டாம் ஹரிஹரருடைய சகோதரனுமான விருப்பண்ண உடையார் என்று ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ தனது நூலில் பக்கம் 226 இல் தெளிவுபடுத்துகிறார்.

ஆக கோயில் ஒழுகு நூலில், கால வரிசையும் சரியாக இல்லை; பிந்தைய நிகழ்ச்சிகள், முந்தியும்; முந்தைய நிகழ்வுகள் பின்னுக்கும் கொண்டு செல்லப்பட்டதோடு, பல தவறுகளும் இருப்பதைக் காணலாம்.

உ.வே.ஏ.வி. ரங்காசாரி

தில்லை திருச்சித்திர கூடம் உ.வே.ஏ.வி. ரங்காசாரி கோயிலொழுகு நூலிற்குத் தந்த அணிந்துரையில் கூறுகிறார்; (கோயிலொழுகு பகுதி 1 பக். அ23)

"மேலும் முகம்மதியர்களுடைய இரண்டு படையெடுப்புகளில் முதலாவதான கி.பி. 1311 இல் உத்ஸவரான அழகிய மணவாளன் திருவரங்கத்தை விட்டு அகன்றாரா? அல்லது கி.பி. 1323 இல் நடந்த இரண்டாம் படையெடுப்பில் திருவரங்கத்தை விட்டு அகன்று பல ஆண்டுகள் கழித்து திரும்பினாரா? உத்ஸவர் அழகிய மணவாளன் திருமேனிகள் ஒன்றா? அல்லது இரண்டா? இரண்டு அழகிய மணவாளர்கள் எவ்வாறு திருவரங்கத்தில் கோயில் கொண்டனர்? கி.பி. 1323 ஆம் ஆண்டு படையெடுப்பின் போது திருவரங்கத்தை விட்டு அகற்றப்பட்ட உத்ஸவத்திருமேனிகளில் திருவரங்க மாளிகையாரும் இருந்தாரா? துலுக்கநாய்ச்சியார் வைபவத்தோடு இந்த நிகழ்ச்சிகள் எவ்வாறு பொருந்துகின்றன? **பன்னீராயிரம் குடிமக்களுடைய தலை எந்தப் போரின் போது துண்டிக்கப்பட்டது? ஆகியவை பற்றிய விளக்கங்கள் கோயிலொழுகில் தெளிவாகக் கிடைக்கவில்லை"** *என்று கூறிவிட்டு "இவைகளுக்கு இந்நூல் ஆசிரியர் முழுமையான ஆராய்ச்சி செய்து, அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கங்களை விரிவாக அளித்திருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும்" என்றும் கூறியுள்ளார். நடுநிலையாளர்களே, அந்த நூலில் அதன் பதிப்பு ஆசிரியர் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பக்கம் XV, XVI-இல் முன்னுரையில் கூறுகிறார்.*

ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீயின் ஒப்புதல்

"திருவரங்க மாளிகையார் எந்தக் காலக் கட்டத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டார்? நம் பெருமாள் கி.பி.1311 ஆம் ஆண்டு நடைபெற்ற படையெடுப்பின் போது திருவரங்கத்தை விட்டு அகன்று மீண்டும் கி.பி.1323-க்கு முன்பாகவே ஆஸ்தானம் எழுந்தருளினாரா? அல்லது கி.பி.1311 ஆம் ஆண்டு படையெடுப்பின் போது திருவரங்கத்தை விட்டு அகன்று 1371 ஆம் ஆண்டு மீளவும் எழுந்தருளினாரா? அல்லது கி.பி. 1323 ஆம் ஆண்டு நடந்த உலுக்கான் படையெடுப்பின் போது பிள்ளை லோகாசார்யரால் எழுந்தருளப்பண்ணப்பட்டு, கி.பி. 1371 ஆம் ஆண்டு ஆஸ்தானம்

எழுந்தருளினாரா? போன்ற விடைகாண இயலாத நிகழ்ச்சிகளுக்கு மேலும் விளக்கம் தேட வேண்டும். இந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் தானொரு கதாபத்திரமாய் இருந்த **நம் பெருமாள் தான் சோதிவாய் திறந்து வார்த்தை அருளிச் செய்யக் கூடுமானால் இக் கேள்விகளுக்கான சரியான விடை கிடைக்க வாய்ப்புண்டு?**

பெருமாளே வந்தால்தான் புரியும் புதிர்!

சுஜாதா அவர்களே! 17.04.2005 ஆனந்த விகடனில் 'அண்மையில் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அவர்கள் பதிப்பித்த அருமையான கோயில் ஒழுகு புதிய பதிப்பைப் படிக்க ஆரம்பித்தேன்' என்று தாங்களே புகழ்ந்து போற்றிய, மதிப்பிற்குரிய வைஷ்ணவ ஸ்ரீ தான் அலசி, ஆராய்ந்து, 102 பக்கங்களையே கொண்ட கோயிலொழுகு மூலத்தை விரிவாக விளக்கி பகுதி 1, பாகம் 1, பாகம் 2 என 676 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். கோயிலொழுகு பகுதி II, *(கிபி. 1623 கிபி. 1803) ஸ்ரீரங்க மஹாத்மியம் எனப்படும் ஸ்ரீரங்கம் கோயில் வரலாறு* Part 1 of 2, Part 2 of 2 *என 470 பக்கங்களிலும் வெளியிட்டுள்ளார். அத்தகைய விரிவான ஆராய்ச்சிக்குப் பின்னும், அவரே குறிப்பிடும் வரிகள் இதோ..*

"பெருமாளே வந்து சோதிவாய் திறந்தால் தான் சரியான விடை கிடைக்க வாய்ப்புண்டு என்று ஒப்புக் கொண்டுள்ள பிறகு, சிக்கலும் குழப்பங்களும் நிறைந்த இந்த வரலாற்றுப் பகுதியைப் பற்றி, பொத்தாம் பொதுவாகவும், போகிற போக்கிலே சேற்றை வாரி இறைப்பதைப் போலவும் 'கி.பி. 1323 இல் முகமதியர் படையெடுப்பின் போது 13,000 வைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி' என்று குறிப்பிட்டுச் சொல்கிறீர்களே! இது நியாயமா? தர்மமா?

8

சத்தியம் வந்தது, அசத்தியம் மறைந்தது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்.

"சொல்வீராக! மெய்யானது வந்து விட்டது. பொய்யானது மறைந்து விட்டது. நிச்சயமாகப் பொய்யானது மறைந்து போகக் கூடியதாயிருந்தது. (திருக்குர் ஆன் 17:81)

"And say! "Truth has (now) arrived, and Falsehood Perished; For Falsehood is (by its nature) Bound to Perish" (Holy Qur-an 17: 81)"

"மேலும் நீங்கள் உண்மையை அறிந்து கொள்வீர்களாக, உண்மை உங்களைப் பந்தத்தினின்றும் விடுவிக்கும்."

"And ye shall know the truth and the truth shall make you free" (Bible, John 8: 32"

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை"

ஒருவன் தன் மனத்தோடு பொருந்த உண்மை பேசுவானானால் அவன் தவத்தோடு தானமும் ஒருங்கே செய்வாரை விடச் சிறந்தவன்.

"ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால், அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான்" (திருக்குறள் 295, 294)

'உண்மை உரைமின்' என உலகோர்க்கு உபநிஷதங்கள் உபதேசிக்கின்றன.

"Stand upright, speak thy thought, de clare The truth thou hast, that all may share" - William Morris.

எல்லோரும் உணருமாறு தைரியமாய் நிற்பாயாக, உன் எண்ணத்தை (உள்ளபடி) வெளியிடுவாயாக; உனக்குத் தெரிந்த உண்மையைப் பறையறைவாயாக - வில்லியம் மாரிஸ்.

சுஜாதா அவர்களே, வரலாற்று உண்மைகளை விவரமாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொல்லிடும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து விட்டீர்கள்!

அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள்

கலைமாமணி கபிலவாணர், மூத்த பத்திரிகையாளர் கே.சி. லட்சுமிநாராயணன் பிரதம ஆசிரியராக இருந்து 4 தொகுதிகளாக வெளிவந்த நூல், 'அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள். 3147 பக்கங்களைக் கொண்ட அந்த நூலின் முதற்பதிப்பு ஆகஸ்ட் 2002-இல் வெளிவந்தது (அண்மையில் ஐந்தாவது பாகமும் வந்துள்ளது.)

சரித்திர ஆய்வு

அதில் சரித்திர ஆய்வு செய்த வி. வெங்கையா, கே.வி.சுப்பிரமணிய ஐயர், டி.என்.சுப்பிரமணியன், எஸ். ஆர். பாலசுப்பிரமணியன், கே.ஆர். ஸ்ரீநிவாசன், கே.வி. ரங்கஸ்வாமி ஐயங்கார், டாக்டர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஆர். சத்தியநாத அய்யர், வி. ரங்காசார்யா, பி.டி.சீனிவாச ஐயங்கார், பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, சி.எஸ்ஸ்ரீநிவாஸா சாரியார் (சிக்கா), வி. விருத்தகிரீசன், வி.ஆர். ராமச்சந்திர தீட்சிதர், டி.ஜி.ஆராவமுதன், டி.வி.மகாலிங்கம், ஆர். பாஸ்கரன், டி.ஏ.கோபி

நாதராவ், என். வேங்கடரமணயா, குடந்தை என். சேதுராமன், டாக்டர் எஸ். கோபால் ஆகியோரைப் பற்றி தொகுதி 2-இல் 1423 வது பக்கம் முதல் 1465 வது பக்கம் வரை தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த நூலின் பக்கம் 1439 இல் உள்ள வரிகள் இதோ...

"ஆராய்ச்சி என்பது விருப்பு வெறுப்பு இல்லாமல் எடுத்துக் கொள்ளும் பொருளுக்குப் புறத்திலே நின்று கூரிய அறிவுடனும் உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்ற நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டியது ஆகும்." *அவ்வாறு, தமிழ்நாட்டில்* **தோன்றிய பல பிராமணர்கள் பல்வேறு துறைகளில் மிக அரிய ஆராய்ச்சிகளை நடத்தித் தமிழ்நாட்டுக்குச் சிறப்பாகவும் இந்தியாவுக்குப் பொதுவாகவும் ஈடு இணை இல்லாத பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள்.**

மேற்சொன்ன வரிகளை எழுதிய ஆசிரியர், சரித்திர ஆய்வு செய்திட்ட 21 பிராமணர்களைப் பட்டியலிட்டவர் எம். ஸ்ரீனிவாச அய்யங்கார் எம்.ஏ. போன்றவர்களை மட்டும் மறந்து விட்டது ஏன்?

எம். ஸ்ரீனிவாச அய்யங்கார்

சென்னை, கார்டியன் பிரஸில் அச்சிட்டு 427 பக்கங்களைக் கொண்டு வெளிவந்த நூல் "Tamil studies or essays on the history of the tamil people, language, Religion and Literature" *1914-இல் வெளிவந்த இந்த நூலின் ஆசிரியர் எம். ஸ்ரீனிவாச அய்யங்கார் எம்.ஏ., அவர் தனது அரிய ஆய்வு நூலில் பக்கம் 296 இல் சொல்லியுள்ள வைர வரிகள் இதோ.*

"No necessity for an essay of this kind should have occured, had there been atleast one reliable and faithful biography of the vishnava saints ..."

"வைஷ்ணவ அடியார்களைப் பற்றிய உண்மையுள்ளதும், நம்பிக்கைக்குரியதுமான குறைந்தது ஒரு வாழ்க்கை வரலாறாவது இருந்திருக்குமானால், இம்மாதிரியான ஒரு கட்டுரைக்கு அவசியமே நேர்ந்திருக்காது"

வைணவ நூல்களின் நம்பகத் தன்மையைப் பற்றி அதில் உண்மையற்ற நிலையைப் பற்றி மேலே கூறியுள்ள வரிகள், முஸ்லிம் வரலாற்று ஆசிரியர் எழுதியது அல்ல. 1914 இல் எம்.ஸ்ரீனிவாச அய்யங்கார் எழுதியிருக்கிற வரிகள்,

(3147 பக்கங்களில் 'அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள்' நூலைத் தந்தவர்கள் உண்மையை உலகத்திற்கு உரைத்த எம். ஸ்ரீனிவாச அய்யங்காரைப் பற்றி சொல்லாமல் விட்டுவிட்ட வரலாற்று இருட்டடிப்பை கி.பி.2002-லும்

தொடரத்தான் செய்கிறார்கள் என்பதனை வரலாற்று ஆய்வாளர்கள் கவனிப்பார்களாக)

வைணவ இலக்கியம்

வைணவப் பாசுர இலக்கியம், ஐந்து - ஆறு நூற்றாண்டுகளிலிருந்து தொடர்ச்சியாக வளர்ந்து வந்தது முதலாழ்வார் மூவர் பாடிய மூன்று அந்தாதிகளும் தோன்றின. பின்னர் 9-ஆம் நூற்றாண்டில் நம்மாழ்வார் வரையில் நாலாயிரம் பாசுரங்கள் தோன்றி, தமிழில் வைணவ நெறியைத் தனிப்பெருநெறியாக அமைத்தன.

9-ஆம் நூற்றாண்டில் உச்ச நிலையை அடைந்திருந்த வைணவ இலக்கிய உலகில் நம்மாழ்வாருக்குப் பின் வறட்சி கண்டது. பத்தாம் நூற்றாண்டில் எந்த நூலும் எழவில்லை.

தனியன்

நாத முனிகள் காலம் தொடங்கி மணவாளமாமுனி காலம் வரையில் ஆசாரியார் பலர் நாலாயிரப் பிரபந்தங்களைப் போற்றியும், ஆழ்வார்களைப் போற்றியும் சில தனிப்பாடல்கள் பாடியுள்ளார்கள். இலக்கியங்களுக்கு இவ்வாறு அமைந்த பாடல்களைச் சிறப்புப்பாயிரம் என்று சொல்வது போல, இப் பாடல்களை வைணவர் 'தனியன் பாடினோர் தொகை சுமார் 40 க்கு மேல் இருக்கக்கூடும். இவர்களில் 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தோர் உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, குருகை காவலப்பணி, ஈசுவரமுனி, திருக்கண்ணமங்கையாண்டான், ஆளவந்தார், வங்கிபுரத் தாய்ச்சி ஆகியோர் என தமிழறிஞர் மு. அருணாசலம் குறிப்பிட்டுள்ளார்.

இராமானுசர்

11-ஆம் நூற்றாண்டில் பிரசித்தி பெற்ற ஆசாரியார் இராமானுசர் தோன்றினார். 12-ஆம் நூற்றாண்டில் வைணவ சமயத்தில் சிறப்புடைய ஆசிரியர் பலர் தோன்றினர். நூல்கள் உருவாயின. பிற்கால வைணவ இலக்கிய வளர்ச்சிக்கு இவை தோற்றுவாயாக அமைந்தன.

மூங்கிற்குடி அமுதனார்

அணியரங்கத்து அமுதனாரின் பிள்ளையாக மூங்கிற்குடியில் பிறந்தவர். அடியார்கள் இவரை பெரிய கோவில் நம்பி என்று போற்றினர். இவர் திருமால் ஆலயங்களையும், ஆழ்வார்களையும் குறிப்பிட்டு இராமானுசர் புகழாக நூற்றெட்டுக்கலித்துறைப் பாடல் கொண்ட 'இராமானுச நூற்றந்தாதி' என்ற நூலைப் பாடி

முடித்தார். இதைப் பார்த்து இராமானுசர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இந்நூலைச் செய்தாருடைய வாக்கு அமுத வாக்காயிருக்கிற படியால் இவருக்கு அமுதன் என்னும் அரிய திருநாமத்தையும் அகங்குளிர்ந்து பிரசாதித்தார். அது முதல் பெரிய கோயில் நம்பி என்ற இவருக்கிருந்த பெயர் மாறி திருவரங்கத்தமுதனார் என்று வழங்கலாயிற்று.

திருஅரங்கத்தமுதனார்

நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களை முதலாயிரம், பெரிய திருமொழி. திரு வாய்மொழி, இயற்பா என்று நான்கு பிரிவாகப் பாகம் செய்து அவற்றோடு இந்த நூற்றந்தாதியையும் இயற்பா இறுதியில் கூட்டி நாலாயிரம் பாடல் என்று இராமானுசர் கணக்கிட்டார் என்றால், திருவரங்கத்தமுதனாரின் பெருமைக்கு வேறு சொல்வது மிகை.

அருளாளப் பெருமாள்

இராமானுசரின் சீடர் அருளாளப் பெருமாள் 40 வெண்பாக்களும், ஒரு தனியனும் உடைய 'ஞானசாரம்', பத்து வெண்பாவும் ஒரு தனியனும் உடைய 'பிரமேயசாரம்' இவர் செய்த நூல்கள்.

பட்டர்

வராகபுராணத்தில் சொல்லப்பட்டுள்ள 'கைசிக புராணம்' என்ற 92 சுலோகங்களுக்குத் தமிழ் உரை தந்தவர் பட்டர். மைவண்ண நறுங்குஞ்சிவியாக்கியானமும் தந்துள்ளார்.

தனியன் பாடிய ஆசிரியர்கள்

ஆழ்வான், முதலியாண்டான், எம்பார், சீராமப்பிள்ளை, கிடாம் பியாச்சான், அனந்தாழ்வான், பிள்ளை திருநறையூர் அரையர், சோமாசியாண்டான், வேதப்பிரான்பட்டர், பிள்ளை உறங்காவில்லிதாசர், எம்பெருமாருரடியாள் போன்றவர்கள் இந்த நூற்றாண்டில் தனியன் பாடியவர்கள் ஆவர்.

திருக்குருகைப் பிரான் பிள்ளான்

பெரிய திருமலை நம்பியின் புதல்வரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் 12-ஆம் நூற்றாண்டில் இராமானுசரின் நியமனப்படி, திருவாய் மொழி வியாக்கியானம் ஆறாயிரப்படி செய்தார்.

வைணவ சம்பிரதாயத்தில், மணிப்பிரவாள நடையில் அமைந்த, முதன் முதலாகத் தோன்றிய வியாக்கியான நூல் இது.

மணிப்பிரவாளம்

மணிப்பிரவாளம் என்பதன் பொருளாவது, மணியும் பவளமும் கலந்து கோத்தமாலையொத்து, வட சொல்லும் தமிழ்ச்சொல்லும் கலந்து தொடுத்த உரை நடைச் சொல் மாலை என்பதாகும். மணி என்ற சொல்லை இரு வகையாகச் சொல்வர். மாணிக்கம் என்று பொருள்கூறி, மாணிக்கமும் பவளமும் கலந்து தொடுத்திருந்தால் தம்மில் வேறுபாடு தோன்றாமல் ஒரே செந்நிறமாயிருப்பது போல, வடசொல்லும் தமிழ்ச் சொல்லும் கலந்த நடை வேறுபாடின்றி படிக்க ஒன்று போலிருப்பது என பொருள். மற்றது மணி என்றால் முத்துமணி என்று பொருள் செய்து, முத்தும் பவளமும் தங்கள் வெண்மை, செம்மை ஆகிய நிறவேறுபாட்டால் அழகு தருவது போல, இரு மொழியும் கலந்த நடை தன் சொல்வேறுபாட்டால் அழகு தருவது என்றும் சொல்லப்படும் என்பர் தமிழறிஞர் மு. அருணாசலம்.

வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியர்

'பிரவாளம் - பவழம் செந்நிறமணியும் (மாணிக்கம்) செந்நிறப் பவழமும் சேர்ந்த கோவை. வட மொழி, தென்மொழி இரண்டும் ஒத்த தெய்வ மொழிகள். அதனால் இரண்டும் விரவிய நடை மணிப்பிரவாளம் எனப்பட்டது என்றும் மேலும் சில விளக்கங்களையும், செந்தமிழ் 12-ஆம் தொகுதியில் 485-495 வது பக்கங்களில் மணிப்பிரவாள நடை பற்றி வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியார் விளக்கம் தந்துள்ளார்.

சாத்திரஞ் செய்த வைணவ ஆசாரியர் மிகவும் அதிகமாக மணிப்பிரவாளத்தைக் கைக் கொண்டார்கள். மணிப்பிரவாளத்தை முதலில் வழங்கியவர் வைணவரே.

நஞ்சீயர்

9-ஆம் நூற்றாண்டில் நம்மாழ்வார் பாடியருளிய தமிழ் வேதமாகிய திருவாய்மொழிக்கு 13-ஆம் நூற்றாண்டில் நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படி என்ற பேருரை தோன்றியது. திருப்பாவை ஈராயிரப்படி, திருவந்தாதி கண்ணி நுண் சிறுத்தாம்பு திருப்பல்லாண்டு வியாக்கியானம், ரகஸ்யத்ரய விவரணம், நூற்றெட்டு சரணாகதி, கத்யத்ரய வியாக்கியானம் ஆகிய நூல்களையும் நஞ்சீயர் தந்தார்.

நம் பிள்ளை

நஞ்சீயருடை ஒன்பதினாயிரப்படியை இவர் ஆற்றில்விட்டு விட்டு நினைவாற்றலினால் மீண்டும் எழுதினார்.

பெரிய வாச்சான்பிள்ளை

திவ்யப்பிரபந்தம் நாலாயிரத்துக்கும் சிறப்பான வியாக்கியானம் எழுதி 'வியாக்கியான சக்கரவர்த்தி, என்ற புகழ் பெற்றவர் பெரிய வாச்சான் பிள்ளை. இராமாயண சுலோகங்கள் 24000. அத்தனை கிரந்தம் கொண்ட திருவாய் மொழி வியாக்கியானம் 24 ஆயிரப்படி செய்தார் பெரியவாச்சான் பிள்ளை, திரிமதசித்தாந்தசாரசங்கிரம், பாசுரப்படி ராமாயணம், கலியன் அருள்பாடு, பரந்தரகஸ்ய விவரணம், மாணிக்கமாலை, நவரத்தினமாலை, சகலப்ரமாண தாத்பர்யம், உபகாரரத்னம், க்த்யத்தர யவ்யாக்யானம், ஆளவந்தார் தோத்திரரத்நவ்யாக்யானம், பரந்தபடி, அபயப்ரதானவியாக்யானம், சரம ரஹஸ்யம், அனுசந்தாரை ஹஸ்யம், நிகமனப்படி முதலியன யாவும் பெரிய வாச்சான் பிள்ளை தந்த வியாக்கியானமே. (பிரபந்தரகசியம் என்பது மட்டும் தனி நூல். இது மந்திர வியாக்கியானம்)

வடக்கு திரு வீதிப்பிள்ளை

நம்பிள்ளையின் அந்தரங்க சீடரான வடக்கு திரு வீதிப்பிள்ளை, திருவாய் மொழிக்கு 36 ஆயிரப்படி செய்தார். வைணவர்களிடையே 'ஈடு' என வழங்கும் 'சுருதப்பிரகாசி'யின் அளவில் அதற்கு ஈடாக இருத்தலால் ஈடு எனப்படும்.

பின்பழகிய பெருமாள்ஜீயர்

நம் பிள்ளையின் சீடர்களில் ஒருவர் பின்பழகிய பெருமாள் ஜீயர். இவர் செய்த ஆறாயிரப்படி குரும்பரம்பராப்ரபாவம் என்ற மணிப்பிரவாள நடை நூலினால், புகழ் பெற்றவர்.

குருபரம்பராப்ரபாவம்

வைணவ ஆசாரியார் வரலாறுகளைக் கூறும் நூல்கள் குருபரம்பரை எனப் பெயர்பெறும். 'குரு பரம்பராப்ரபாவம்' என இவை அச்சிடப்பெற்றுள்ளன. முதலாவதாகத் தோன்றியது பின்பழகிய பெருமாள் ஜீயர் செய்த குருபரம்பராப்ரபாவம். ஆறாயிரப்படி, ஆறாயிரம் கிரந்தம் கொண்டது.

ஆறாயிரப்படி

படி என்பது ஓர் அளவு; படி என்பது ஒரு கிரந்தம். கிரந்தம் என்பது வடமொழியில் ஒற்றெழுத்துக்கைள நீக்கி 32 எழுத்துக் கொண்ட ஒரு அளவு ஆகும். தமிழில் கட்டளைக் கலித்துறை என்பது நிரை அசையில் தொடங்கினால் 17 எழுத்தும், நேர் அசையில் தொடங்கினால் 16 எழுத்தும் வர வேண்டும் என்பது ஒரு விதி. இதே போன்று எழுத்துக் கணக்கிடுகின்ற விதி வடமொழிச்

சுலோகங்களுக்கும் உண்டு. வைணவ ஆசாரியார்கள் வடமொழிப் பாடலுக்கு இருந்த இக்கணக்கைத் தமிழில் வசனத்திற்கும் வைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு நூலையும் எழுத்தை எண்ணி இத்தனைக் கிரந்தம் என்று சொல்வது இவர்கள் மரபு. ஆறாயிரப்படி என்றால் ஆறாயிரம் கிரந்தம் என்று பொருள்.

மூலம்

பிறகு வந்த குருபரம்பரைகள் அனைத்துக்கும் பின்பழகிய பெருமாள் ஜீயரின் ஆறாயிரப்படி குருபரம்பராப்பிரபாவமே மூலமாக உள்ளது. (குரு பஞ்சார்ந்த ரகசியம் என்ற நூலையும் இவர் தந்துள்ளர்) (வார்த்தாமாலையும் இவரே தொகுத்தார் என்பதும் வரலாறு.)

(நடாதூரம்மாளின் சுருதப்பிரகாசிகை திருக்கோனேரி தாஸ்யையின் திருவாய்மொழி வாசகமாலை என்னும் விவரண சதகம், பரகாலதாசரின் தனியார் பாடல் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும்)

வேதாந்த தேசிகர்

தேசிகன் என்ற சொல்லுக்கு ஆசாரியன் என்பது பொருள். இவர் தோன்றிய பிறகு இவருக்கேயுரிய சிறப்புப் பெயராக இச்சொல் அமைந்துவிட்டது. வேதாந்த தேசிகன், நிகமாந்த மகாதேசிகன் (நிகமம் = வேதம்) என இவரைப் பெரியோர் வழங்குவர். வடமொழியில் இவர் பாடிய சாத்திரங்கள், தோத்திரங்கள் 82, தமிழில் இவர் பாடிய பிரபந்தங்கள், அமிர்த ரஞ்சனி முதலான 24, இவை தேசிகப் பிரபந்தம் என வழங்கும் வைணவரிடையே இவரது காலத்தை தொடர்ந்து வடகலை, தென்கலைப்பூசல்கள் தோன்றத் துவங்கியது.

வடகலை – மர்க்கடநெறி

இறைவனை நாமே சென்று பற்ற வேண்டும் (குரங்குக் குட்டி போல) என்று சொல்லுகிற மர்க்கட நெறியே வடகலை நெறியாகும். (மர்க்கடம் - குரங்கு)

தென்கலை – மார்ஜாலம்

இறைவனே வந்து உயிர்களைக் காப்பான் பூனை தன் குட்டியைத் தூக்கிச் செல்வதுபோல, (மார்ஜாலம் - பூனை) என்று சொல்லுகிற நெறி தென்கலை நெறியாகும்.

சுஜாதாவின் ஸ்ரீரங்கத்து தேவதைகள்

1983-களில் ‘சாவி’, ‘குங்குமம்’, ‘கலைமகள்’ இதழ்களில்

சுஜாதா எழுதிய கதைகளை சென்னை விசா பப்ளிகேஷன்ஸ் 150 பக்கங்களில் வெளியிட்டது. 'ஸ்ரீரங்கத்து தேவதைகள்' என்ற தலைப்பில் வந்த அந்த கதை நூலில், கதைகளைப் பற்றி சுஜாதா என்ற தலைப்பில் எழுதியுள்ள வரிகள் இதோ,

"நான் பிறந்த ஊர் சென்னை. ஆனால், வளர்ந்து படித்து ஆளானது எல்லாம் ஸ்ரீரங்கத்தில்தான். 'நேட்டிப்ப்ளேஸ்' என்று ஏதாவது மனுவில் கேட்டால் ஸ்ரீரங்கம் என்று தான் எழுதுகிறேன். **இன்றைய தேதிக்கு எனக்கும் ஸ்ரீரங்கத்துக்கும் தொடர்பு எதுவுமே இல்லாவிட்டாலும் அதனுடன் ஒரு பிணைப்பு இருக்கிறது.** இந்தப் புத்தகத்தின் கதைகளில் சம்பவங்கள் அனைத்தும் என் சிறு வயதில் நிகழ்ந்தவை.

சுஜாதா தொடர்ந்து எழுதுகிறார்

'எந்தக் கதாசிரியனும் நிஜத்தை அப்படியே எழுத மாட்டான். கோர்ட் உபத்திரவங்களை நீக்கிவிட்டால் அப்பட்டமான நிஜம் சுவாரஸ்யமாக இருப்பதில்லை. ஜோடனைகள் தேவையாகத்தான் இருக்கின்றன. எனவே இந்தக் கதைகளில் கற்பனைச் சம்பவங்கள் கலந்து தான் இருக்கின்றன.

சுஜாதா அவர்களே, கதைகளில் கற்பனையைக் கலப்பது உங்கள் உரிமை, ஆனால், வரலாற்றிலும், நெறிமுறைகளிலும் கற்பனையைக் கலக்க முயற்சிக்கிறீர்களே, இது நியாயமா?

9

திண்ணா

ஸ்ரீரங்கத்து தேவதைகள் நூலில் ஐந்தாவது கதை திண்ணா. சுஜாதா அவர்களே! அதில் இடையில் நீங்கள் கூறியிருக்கிற வாசகங்கள் இதோ...

'அய்யங்கார்களில் இரண்டு பிரிவு உண்டு. வடகலை, தென்கலை, (அடையவளைஞ்சான் பெரியார் கட்சிக்காரர்கள் எச்சக்கலை' என்று மூன்றாவதையும் சேர்த்துக் கொள்வார்கள்)

அய்யங்கார் என்பதே ஒரு விதமான சிறுபான்மைதான். இந்த சிதறிய சமூகத்தில் இரண்டு வகை. வடகலை, தென்கலை, தீவிர தென்கலைக்காரர்கள் வடகலையில் பெண்ணெடுக்க மாட்டார்கள்.

வடகலை நாமம் போட்ட கோயிலில் வணங்க மாட்டார்கள். அதே போலத் தீவிர வடகலைக்காரர்கள், தென்கலையெல்லாலாம் கீழ் சாதி; ராமானுசர் போகிற போக்கிலே இழுத்துவிட்ட

நாமங்கள்' என்று சொல்லிக் கொண்டு தென்கலையைச் சீண்ட மாட்டார்கள். இப்படிச் சொன்னதோடு நின்றிருந்தால் உங்களது நடுநிலையை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அதற்கு அடுத்து தங்களது உள்ளுணர்வு இப்படி எழுத வைக்கிறது தங்களை.

"இரண்டு பிரிவுகளுக்கும் நாமத்தைத் தவிர வித்தியாசம் என்னவென்று உன்னிப்பாகப் பார்த்தால் யாருக்கும் தெரியாது என்றே சொல்ல வேண்டும்" என்று மழுப்பியிருக்கிறீர்கள்.

ஓம் – அம்

'பிராமணியத்தைப் பின்பற்றினால்தான் மோட்சம்', 'பெண்களுக்கு மோட்சம் இல்லை', 'பெண்கள் கணவனை இழந்தபின் மொட்டையடித்தல் வேண்டும்', 'பெண்கள் ஓம்' என்று கூறக்கூடாது. 'அம்' என்று தான் கூற வேண்டும். இது 'வட கலை'யாளர் கொள்கை. வேதாந்ததேசிகரைப் பின்பற்றுவோரின் வழி.

வேதத்தையும், திவ்யப்பிரபந்தங்களையும் இரு கண்களாகக் கொள்வது தென்கலை நெறி. இராமானுசரைப் பின்பற்றுபவர்கள் போற்றும் வழி இது. இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறதா இல்லையா?

'குருபரம்பராப்ரபாவம்' பற்றி எழுதிக் கொண்டு வருகையில், வட கலை - தென்கலைப் பூசல் பற்றி நினைத்தபோது, 1983-களில் நீங்கள் எழுதிய வரிகள் இடையில் நினைவிற்கு வந்துவிட்டது.

வைணவ ஆசாரியர் வரலாறுகள்

குருபரம்பராப்பரபாவம் ஆறாயிரப்படி பின்பழகிய பெருமாள் ஜீயரால் தரப்பட்டது இது எல்லா வைணவர்களுக்கும் பொதுவானது. குறிப்பாக தென்கலையார் போற்றுவர். கி.பி.1878 இல் இது அச்சுவடிவம் கண்டது. சென்னை கார்டியன் அச்சுக் கூடத்தில் கா. ராமசாமி நாயுடு, ரா. ராமகிருஷ்ணபிள்ளை பதிப்பித்த ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் ஆசூரி ராமானுசாரியார் பதிப்பாசிரியர்.

15 -ஆம் நூற்றாண்டில் குருபரம்பராப்ரபாவம் மூவாயிரப் படியை பிரமதந்திர சுவதந்திர சுவாமி வடகலையார் போற்றும் வண்ணம் எழுதினார். திருக்குடந்தை தட்டை கிருஷ்ண மாசாரியார் 19-ஆம் நூற்றாண்டில் இதனை அச்சில் கொண்டு வந்துள்ளார்.

பிள்ளைலோகம் ஜீயர்

15-ஆம் நூற்றாண்டில் பிள்ளை லோகம் ஜீயர் யதீந்திரப்பிரவணப் பிரபாவம் தந்துள்ளார். அதனை 1909-இல்

வைஷ்ணவ சம்பிரதாய புத்தகசாலை பதிப்பித்தது. தென்கலையார் இதனைப் போற்றுவர். கி.பி.2000-இல் வி.விராமானுஜம் இதனைத் திரும்பவும் பதிப்பித்தள்ளார். இந்த நூல் குறித்து முந்தைய தொடர்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பூர்வாசாரியர்

பூர்வாசாரியர் அருளிச் செய்தபடி வெளிவந்த குருபரம்பராப்ரபாவம் பன்னீராயிரப்படி, இதனை செஞ்சியில் வீடு திருவேங்கட முதலியார் பதிப்பித்தது. தென்கலையார் இதனைப் போற்றுவர். 1928-இல் பூமகள் விலாச அச்சுக் கூடத்தில் சென்னையில் கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி, திருமலைநல்லான் சக்கரவர்த்தி முதலியோர் பதிப்பித்துள்ளனர். இந்த **பன்னீராயிரப்படி** குரு பரம்பராப்ரபாவம் தற்போது புழக்கத்தில் குறைந்துள்ளது.

பழநடை விளக்கம் – மூவாயிரப்படி

ஆதியில் இருந்த குருபரம்பரை வரலாற்றை, வடகலையார் மாற்றி, தங்கள் சம்பிரதாயத்துக்கு ஏற்றபடி ஒரு மூவாயிரப்படி புதிதாய் எழுதிக் கொண்டமையால் அதை மறுக்கும் முகமாக மூவாயிரப்படி ஒன்றை தென்கலையார் செய்தனர்.

பழநடை விளக்கம் - மூவாயிரப் படி என்னும் குருபரம்பராப்ரபாவம் திருமழிசை- கோவில் கந்தாடை அண்ணா அப்பங்கார் சுவாமிகள் இயற்றியது. கி.பி.1895-இல் கோ. சீனிவாசாசாரி இதனை அச்சில் பதிப்பித்துள்ளார். வடகலை, தென்கலைப் பூசலைப் பற்றி விளக்கமாகப் பல செய்திகளை இது தெரிவிக்கின்றது.

நன்னடை விளக்கம்

பழநடை விளக்கம் என்னும் தென்கலையாரின் மூவாயிரப்படி குருபரம்பராப்பிரபாவத்திற்கு மறுப்பாக, மேல்நாட்டு ரங்காசாரியார் நன்னடை விளக்கம், தென்னடை விளக்கம் எனும் நூலைத் தந்துள்ளார்.

கி.பி.1858-இல் திருக்குடந்தை தட்டை கிருஷ்ணமாசாரியார் என்பவர் ஒரு வடகலை குருபரம்பராப்ரபாவம் அச்சிட்டார். இந்த குரு பரம்பராப்ரபாவ கிரந்தங்கள், பிரம தந்திரசுவதந்திர சுவாமி (இவர் வேதாந்த தேசிகரின் சீடர்) முதலானவர்களால் சங்கிரமாகவும், விஸ்தாரமாகவும் செய்யப்பட்டன. இப்படி சத்சம்பிரதாய பரம்பரையிலேயே வந்த கிரந்தங்கள் இருக்க, கொஞ்ச நாளைக்கு முன்னே ஒரு தருணத்திலே திருமழிசை அண்ணாப்பங்கார் என்பவர்.

பொய்க்கதைகள்

அசூயையினாலும், ஆக்கிரகத்தினாலும் அநேகம் பொய்க் கதைகளைக் கலந்து பழநடை விளக்கம் என்று ஒரு புத்தகம் எழுதியுக்தா யுக்த விவேகம் இல்லாத சாதாரண ஜனங்களுக்குள் வழங்குவித்தார். அக்காலத்திலேயே அவரோடு பிரத்தியட்சத்தில் வாதித்து அவர் கட்சிகளையெல்லாம் கண்டித்துக் கொண்டிருந்த மேல்நாட்டு ரங்காச்சாரியர் என்பவர் அப்பழநடை விளக்கத்திற்குக் கண்டனமாக நன்னடை விளக்கம் என்ற ஒரு கிரந்தம் செய்திருக்கிறார் என்று இப்புத்தக முகவுரையில் காணப்படுகிறது.

மு. அருணாசலம்

இவ்வாறு ஆச்சாரியார் வரலாற்றிலும் கூட இராமானுசருக்குப் பின் வரும் வரலாறுகளில் மிக வேற்றுமையும் பூசலும் ஏற்படுகின்றன என்பர் தமிழறிஞர் மு. அருணாசலம்.

வைணவ ஆசாரியர் வரலாறுகளைக் கூறும் குருபரம்பராப்ரபாவம் நூல்கள் தான் எத்தனை! இதனை அபசாரமாகச் சொல்லும் எண்ணம் அடியேனுக்கு சிறிதுங் கிடையாது. வரலாற்றை வெளிப்படுத்துவதே எளியேனது நோக்கம்.

மணவாளமாமுனிகள்

15-ஆம் நூற்றாண்டில் சிறப்பாக கருதற்குரியவர் மணவாளமாமுனிகள் தென்கலைச் சம்பிரதாயத்தில் மிகச் சிறந்த ஆசாரியர் 'யதிராஜவிம்சதி' என்ற தோத்திரத்தை அருளிச் செய்தார்.

திருவரங்கத்தில் கோயிலில் நடைபெற்ற அனேகம் குறைபாடுகளை எல்லாம் திருத்தம் செய்தார். உபய வேதாந்தாசாரியர் என்று புகழப்பட்ட இவர் உபதேசரத்தின மாலை, திருவாய் மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப் பிரபந்தம் ஆகிய நூல்களை யாத்தார்.

அட்டதிக்கஜங்கள்

மணவாளமாமுனிகளின் சீடர் எண்மர்; எறும்பியப்பா, கந்தாடை யண்ணன், பிரதிவாதி பயங்கர மண்ணன், பரவஸ்துபட்டர் பிரான் ஜீயர் வானமாமலை ஜீயர், திருவேங்கட ஜீயர், அப்பிள்ளை அப்புள்ளார் இவர்களும் வைணவ நூல்களைத் தந்துள்ளனர்.

நவரத்தினங்கள்

மணவாளமாமுனி திருவடியில் ஆசிரயித்த நவரத்தினங்களான, சேனை முதலியாண்டான் நாயனார், சடகோபதாசரான நாலூர்கிற்றாத் தான் கந்தாடை போரேற்றி, நாயன், ஏட்டூர் சிங்கவிசாரியர் கந்தாடை அண்ணப்பன், கந்தாடை திருக்கோபுரத்து நாயனார், கந்தாடை நாராணப்பை, கந்தாடை தோழப்பரப்பை, கந்தாடை அமைத்து வாழ்வித்த பெருமாள்.

15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வைணவ நூல்கள் தந்த பெரியார்கள் இவர்கள்.

16–ஆம் நூற்றாண்டு

முன்னோ, பின்னோ வேறு எக்காலத்திலும் இல்லாதவாறு இந்த நூற்றாண்டில் தான் வைணவச் சார்பாக பெருநூல்கள் பல வெளிவந்தது.

பாகவதம்

ஸ்ரீமகா விஷ்ணு வானவர் யது குலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் என்ற நாமதேயத்துடன் அவதரித்துச் செய்த லீலையை விளக்கிக் கூறுவதே ஸ்ரீமத்பாகவதம்.

பாகவத பேதங்கள்

பாகவதமானது ஏழு வகையுள்ளது.

இதிகாச பாகவதம்

18,000 சுலோகங்கள் கொண்டது வியாசமகரிஷியால் செய்யப்பட்டது. 12 ஸ்கந்தங்கள், 200 அத்தியாயங்கள்.

புராண பாகவதம்

வியாசமஹரிஷியால் செய்யப்பட்டது. இது 600 அத்தியாயங்களைக் கொண்டது.

ஸம்ஹிதாபாகவதம்

12 காண்டங்கள் 1,100 அத்தியாயங்கள், 50,000 க்ரந்தங்களைக் கொண்டது.

உபஸம்ஹிதா பாகவதம்

70,000 ஸ்லோகங்கள், 2000 அத்தியாயங்கள், 100 பரிச்சேதங்களைக் கொண்டது.

விஷ்ணு ரஹஸ்ய பாகவதம்

இடையிலே தண்டகங்கள் கலந்த 1,00,000 சுலோகங்கள், 10,000 அத்தியாயங்கள், 1,000 அங்கங்களைக் கொண்டது.

விஷ்ணு யாமன பாகவதம்

8 ஸ்தானங்கள்; 800 அத்தியாயங்கள், 8000 ஸ்லோகங்களைக் கொண்டது.

கௌதமஸம்ஹிதா பாகவதம்

கௌதமர் கௌசிகருக்குச் சொல்லியது 100 அத்தியாயங்கள், 10,000 ஸ்லோகங்களைக் கொண்டது.

ஆர். சிவராம சாஸ்திரி

வடமொழியில் பாகவதப் பெருநூல்கள் இந்த ஏழு என்பர் பண்டிட் ஆர். சிவராம சாஸ்திரி

இதில் குறிப்பிட்ட ஏழு பாகவதங்களில் இதிஹாஸ பாகவதம், புராண பாகவதம் இரண்டும் தமிழிற் செய்யப்பட்டிருக்கிறது.

செவ்வைச் சூடுவார்

16-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இதிகாச பாகவதத்தை தமிழில் செவ்வைச் சூடுவார் செய்தார். (1500 - 1525) இது 4,973 பாடல்களைக் கொண்டது.

வரதராஜ ஐயங்கார் (அருளாளதாசர்)

வரதராஜ ஐயங்கார் என்ற நெல்லிநகர் அருளாள தாசர் புராண பாகவதத்தை 9,147 பாடல்களில் (கி.பி.1543) தந்தார்.

இதுகாறும் விரிவாக வைணவ இலக்கியங்களைப் பற்றிச் சொல்லிவந்ததின் நோக்கம் இது தான்!

தலபுராணங்கள்

இனி, இக்காலத்தில் தான் முதன் முதலாக வைணவத்தில் தல புராணங்கள் (கோவில் வரலாறுகள்) தோன்ற ஆரம்பிக்கின்றன.

வைணவ இலக்கிய வரலாறு முழுமையிலும் ஒரு பத்துத்தல புராணந்தானும் காண்பது அருமை. பழைய தல புராணங்கள் என்று சொல்லத் தக்கவை திருக்குருகை மான்மியம். கூடற்புராணம், திருவேங்கடத்தல புராணம், கோலாசலபுராணம் போன்ற சிலவே ஆகும்.

திருக்குருகை – ஆழ்வார் திருநகரி

நம்மாழ்வார் திரு அவதாரம் செய்த ஆழ்வார் திருநகரி என்ற திருக்குருகையில் பிறந்த பெரும்புலவரான திருக்குருகைப் பெருமாள் கவிராயர் செய்த புராணம் 'திருக்குருகை மான்மியம்' இது முழுவதுமாக கிடைக்கவில்லை. 28 சருக்கங்கள் 3,030 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளது.

கூடற்புராணம்

மதுரை மாநகரில் கோயில் கொண்டெழுந்தருளிய கூடலழகர் கோயிலுக்குரியது. இந்தப் புராணம் இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 12 சருக்கங்கள், 757 பாடல்களைக் கொண்டது கூடற்புராணம். (கி.பி.1575-1600)

கோயில் ஒழுகு

இராமானுசர் கால வரலாறுகளை மிக விரிவாகச் சொல்லும் 'கோயில் ஒழுகு' எப்போது எழுதத் துவங்கப்பட்டது என்பதற்குத் தெளிவான சரித்திரச் சான்றுகள் இல்லை. ஸ்ரீரங்கம் கோயில் வரலாற்றைக் கூறும் 'கோயில் ஒழுகு' 17-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் மதுரை நாயக்க மன்னரான முதலாம் முத்துவீரப்ப நாயக்கர்கால (கி.பி.1623) நிகழ்வுகளோடு முடிவடைகிறது.

விஜய நகர மன்னர்கள்

விஜய நகரப் பேரரசு மன்னர்கள் காலத்தில் நடை பெற்ற நிகழ்ச்சிகளைக் கோயிலொழுகு மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

ஓலைச் சுவடிகள்

ஸ்ரீரங்கம் கோயில், நிர்வாகத்தினர் வசம் கோயிலொழுகின் ஓலைச் சுவடி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்பர் ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாச்சார்யர்.

இவைகளை எல்லாம் நடுநிலையோடு எண்ணிப் பார்த்தால், கோயிலொழுகு, 16-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 17-ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் விஜய நகரப் பேரரசு, மதுரை நாயக்க மன்னர்கள் காலத்தில் நூல் உருப்பெற்றிருக்கக் கூடும்.

16, 17-வது நூற்றாண்டுகளில் தமிழகத்தில் வைணவம் பெற்றிருந்த செல்வாக்கு காரணமாக, அதன் பெருமையை உயர்த்தியும், புகழ்ந்தும் பிற சமயங்களை நிந்தித்தும் இகழ்ந்தும் எழுதப்பட்டிருக்கக்கூடும்.

10

"If ideological considerations, political affiliations, group prejudice, and Partisan attitudes are allowed, history would be reduced to the level of fiction"

'தத்துவங்களைக் கருத்தில் கொள்ளுதல், அரசியல் சார்வுடைமை, குழுவினரின் தப்பெண்ணம், ஒரு சார்பு மனப்பான்மைகள் ஆகியவைகளை அனுமதித்தால் வரலாறானது கட்டுக்கதை அளவிற்கு குறைந்து போய்விடும்' என்பர் டாக்டர் செய்யது சகாப்தீன்.

தலபுராணங்கள்

புராணம் மான்மியம், மகாத்மியம், வரலாறுகள், வசனம், சுருக்கம், சாரம், மகத்துவம், மஞ்சரி, காண்டம், ரகசியம், லீலை, மாலை, திரட்டு, மகிமை, சரிதை அல்லது சரித்திரம், பிரபாவம், சங்கிரகம், விளக்கம், கீர்த்தனை, விசேடம், கோயில், கைபீது, புராணகதை, பிரபாவம், பிரபாவ சிந்தாமணி லிங்கோற்பம், மகாத்மிய வியாக்கியானம், விசேசரத்தினம், குறிப்புகள், புராணபெம்கரஹம், வைபவம், தோத்திரம், 'ஒழுகு' என்று பல பெயர்களில் தமிழில் கோவில் தல புராணங்கள் வழங்கப்படுகின்றன. (வே. கிருஷ்ணமூர்த்தி, தமிழில் தலபுராண இலக்கியம், 1974, பக்கம் 123).

கோயிலொழுகு

ஸ்ரீரங்க மஹாத்மியம் எனப்படும் ஸ்ரீரங்கம் கோயில் வரலாறு 'கோயிலொழுகு' ஆகும். கி.பி. 1623-ஆம் ஆண்டோடு, மதுரை நாயக்க மன்னர் முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் கால நிகழ்வுகளோடு 1888 இல் அச்சுக்கு வந்து, 1909, 1976, 2005 களில் மறு மதிப்புக்களையும் கண்டுள்ளது.

டாக்டர் வீ. என். ஹரிராவ்

இந்திய வரலாற்று நூல்களையும், கிரேக்க வரலாற்றையும் உலக வரலாற்றையும் எழுதிய சரித்திரப் பேராசிரியர் வீ.என். ஹரிராவ் திருப்பதி வேங்கடேசுவர பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்.

1948

தனது பி.எச்டி. ஆய்வேட்டிற்காக 'The History of Sri Rangam and Trichinopoly' *(ஸ்ரீரங்கம் வரலாறும் திருச்சிராப்பள்ளியும்) எனும் ஆய்வேட்டை 1948 இல் தந்தவர்.*

1961

டாக்டர் யரிராவ், 1961-இல் கோயிலொழுகு (Koil - Olugu) *என்னும் ஆங்கில நூலை 206 பக்கங்களில் தந்தார். (207 முதல் 214 வரை நூலின்* Index) *முன்னர் தமிழில் அச்சுக்கு வந்த கோயிலொழுகு நூலில் உள்ளதை தனது நூலில் 179 வது பக்கம் வரை மொழி பெயர்த்துள்ளார். 180வது பக்கம் முதல் 206 வது பக்கம் வரை அதாவது 27 பக்கங்கள் புதிதாக ஆங்கிலத்தில் கோயில் வரலாற்றைக் கூறியுள்ளார். கி.பி.1623 முதல் கி.பி.1803 வரையிலான கோயில் வரலாற்றை, கோயில் நிர்வாகத்தினரிடம் இருந்து பெற்று, அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.* **தற்போது கோயில் நிர்வாகத்தினர் வசம் கோயிலொழுகின் ஓலைச் சுவடிகள் எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை.**

1967

டாக்டர் வி.என். ஹரிராவ் 1967 இல், 'The Srirangam Temple Art and Architecture' *என்ற ஆங்கில நூலை 171 பக்கங்களில் வெளியிட்டார். (24 பக்கங்கள் படங்கள் பின்னிணைப்பாகவும் உள்ளது) (திருப்பதி வேங்கடேசுவரா பல்கலைக் கழகம் இதனை வெளியிட்டது.*

1976

டாக்டர் வீ.என் ஹரிராவ், 1976 இல் History of The Sri Rangam Temple *என்னும் ஆங்கில நூலை 260 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். ஸ்ரீரங்கம் கோயில் வரலாற்றுக்கெனவே தனது வாழ்நாளை அர்ப்பணித்த டாக்டர் வீ.என். ஹரிராவ் ஸ்ரீ ரங்கம் கோயில் வரலாற்றைக்கூறும் கோயிலொழுகைப் பற்றி என்ன சொல்கிறார்கள்?*

முன்னுரையில் (1961)

கோயிலொழுகின் முன்னுரையில் (Introduction) *பக்கம்* XII-*இல் வீ.என் ஹரிராவ் கூறியுள்ள வாசகங்கள் இதோ ...*

After dealing with a number of minor benefactors, among whom figure a few unidentifiable chola names, the Olugu proceeds to deal with the Muhammadan invasions of 1311 and 1323 A.D. at some length.

The Second invasion is given a separate treatment in a different context. **There is some confusion in the Olugu's treatment of the two invasions and details of the one are mixed with those of the other"**

குழப்பம்

'அடையாளங்கண்டு கொள்ளப்பட முடியாத சில சோழ மன்னர்கள் உள்பட அநேக சிறிய தானமளிப்பவர்களைப் பற்றி குறிப்பிட்டுவிட்டு, கோயிலொழுகு முஸ்லிம் படையெடுப்புகள் கி.பி.1311, 1323 ஆகியவற்றைப் பற்றி, அதில் நடந்தவைகளைப் பற்றி விரிவாகச் சொல்ல முற்படுகிறது. இரண்டு படையெடுப்புக்களைப் பற்றி 'ஒழுகு' சொல்லியிருப்பதில் சிறிது குழப்பம் இருக்கிறது. (என்ன குழப்பம் என்றால்) ஒரு படையெடுப்பின் விவரங்கள் மற்றொரு படையெடுப்பின் விவரங்களோடு கலக்கப்பட்டு இருக்கின்றன' என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் ஹரிராவ்.

வரலாற்று முரண்

கோயிலொழுகுவில் 'எம்பெருமானடியாள் கோயிலைக் காத்தது' என்ற பகுதியில் வரும் செய்தி இதோ . . .

"ஈயான் ராமாநுஜாசார்யருக்கு பிறகு அவருடைய திருக்குமாரரான திருக்கோபுரத்து நாயனார் ஸ்ரீ கார்யம் நிர்வகித்து வந்தார். அவருடைய காலத்திற்குப் பிறகு, நாயனாரின் இரண்டாவது குமாரரான சிற்றண்ணர் ஸ்ரீ கார்யம் பார்த்து வந்தார். அவர் காலத்தில் பஞ்சதிருவடி கேசவராஜாவின் துணை கொண்டு அநேக கைங்கர்யங்களை மேற்கொண்டு வந்தார் சிற்றண்ணருடைய குமாரர் ஸ்ரீரங்கராஜநாதன் வாதூல தேசிகர், இவருடைய குமாரர் நரஸிம்ஹ தேசிகர் என்று கோயிலொழுகு குறிப்பிடுகிறது.

கோயிலொழுகில் ஸ்ரீ ரங்கராஜநாதன் வாதூல தேசிகர் பஞ்ச திருவடி வீரப்பராஜா அளித்த நிதி கொண்டு, அழகிய மணவாளப் பெருமாளுக்குப் பல கைங்கர்யங்களை நடப்பித்து வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குறிப்பு வரலாற்றுச் செய்திகளுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும்.

பாண்டியப் பேரரசு

இந்தக் காலகட்டத்தில் பாண்டியப் பேரரசுக்கு உட்பட்ட பகுதியாகத் திருவரங்கம் விளங்கி வந்தது.

கி.பி.1225 ஆம் ஆண்டு தொடங்கி கி.பி.1323 ஆம் ஆண்டு வரை (படையெடுப்பு வரை) பாண்டிய மன்னர்களான மாறவர்மன் முதலாம் சுந்தர பாண்டியன் (கி.பி.1216 -1238) இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1239-1251) (திருவரங்கம் கோயிலுக்கு பொன்வேய்ந்தவன் பொன் வேய்ந்த பெருமாள் என்று வழங்கப்

பெற்றான். (டி.வி.சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, 1972, ப.133) சடையவர்மன் வீரபாண்டியன் (1253 - 1268) முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268 - 1311) சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1276 - 1292 - 93)

மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (1283 – 1296)

மாறவர்மன் வீர பாண்டியன் 1296 - 97) சுந்தரபாண்டியன் (1303) மாறவர்மன் இரண்டாம் குலசேகரன் ஆகியோர் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தனர்.

ஆர். சத்தியநாத அய்யர்

பாண்டிய மன்னர்களுடைய ஆட்சிக் காலத்திலே பஞ்ச திருவடி வீரப்பராஜா போன்றவர்கள் ஸ்ரீரங்கம் கோயிலுக்கு, கோயிலொழுகு குறிப்பிடுவது போல் எந்த கைங்கர்யத்தையும், தானத்தையும் உதவியையும் செய்திருக்க முடியாது. ஏனென்றால் மதுரை நாயக்கர் அரச வம்சமே கி.பி.1529 இல் தான் தோற்றுவிக்கப்பட்டது. இதிலும் முதலாம் முத்து வீரப்ப நாயக்கரின் காலம் கி.பி. 1609 - 1623) ஆகும். (ஆர். சத்தியநாத அய்யரின் History of The Nayakas of Madura *நூல் 1924, ப. 98)*

கோயிலொழுகின் இந்தப் பகுதியில்தான் ‘துலுக்கர் தொண்டை மண்டலம் வியாபித்தார்கள். ஸ்ரீரங்கராஜ நாதன் திருவோலக்கத்திலே எழுந்தருளியிருக்கிற பன்னீராயிரம் ஸ்வாமிகளையும் திருவோலக்கம் குலையாமலிருக்கும் படி நியமித்து– துலுக்கரும் திரையில் புகுந்த விக்ரஹத்தைக் காணாமல் பன்றி யாழ்வானை அபசாரப்பட்டு, ஸ்வாமிகளனைவரையும் திருமுடி திருத்தி கோவிலிலே ப்ரவேஸித்து... என்று கோயிலொழுகு குறிப்பிடும் சம்பவத்தை வைத்துதான் சுஜாதா’ போன்றவர்கள் அபாண்டப் பழியைச் சுமத்துகின்றனர்.

டாக்டர் ஹரிராவின் கருத்து

கோயிலொழுகுவின் ஆங்கிலப் பகுதியில் ஹரிராவ் குறிப்பிடுகிறார்.

“The names of the patrons of the Vaduladesika Family clearly recall those of the Madura Nayaks and their Chieftains, who came to power in the 16th century. Hence their alleged & patronage is groundless. **It is clear that this part of the olugu was written or rewritten during or after the period the Nayakas.**

வாதூல தேசிக குடும்பத்தினருக்கு உதவிகள் புரிந்த மதுரை நாயக்க மன்னர்கள் 16-ஆம் நூற்றாண்டில் தான் அதிகாரத்திற்கு

வந்தனர். ஆகவே இவர்கள் (14-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில்) ஆதரவு அளித்தனர் என்று சொல்லப்படுவதற்கு ஆதாரம் இல்லை.

கோயிலொழுகின் இந்தப் பகுதி எழுதப்பட்டதோ அல்லது திரும்பவும் எழுதப்பட்டதோ, நாயக்கர்களின் காலத்திற்குப் பின்னரோதான் நடை பெற்றிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

1961 – 1976 – ஹரிராவ்வின் ஆணித்தரமான கருத்து

கோயிலொழுகின் சர்ச்கைக்குரிய இந்தப் பகுதி நாயக்கர்களின் ஆட்சியின் போது எழுதப்பட்டது என்று 1961 இல் குறிப்பிட்ட ஹரிராவ் 1976 இல் ஸ்ரீரங்கம் கோயில் வரலாறு என்ற ஆங்கில நூலில் இன்னும் சற்று ஆணித்தரமாகவே கூறுகிறார்.

கூடுதலாகச் சேர்க்கப்பட்ட பகுதி

"It is clear that this part of the olugu was written or rewritten or odded during or after the period of the Nayaks" (History of the Srirangam Temple, page 103)

"கோயிலொழுகின் இந்தப் பகுதி நாயக்க மன்னர்களின் காலத்திலோ அதற்குப் பின்னதாகவோ, எழுதப்பட்டோ அல்லது திரும்பவும் மறுமுறையாக எழுதப்பட்டோ அல்லது கூடுதலாக சேர்க்கப்பட்டிருக்கவோ வேண்டும் என்பது தெளிவாகிறது" என்று அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

1961-இல் கோயிலொழுகின் இந்தப் பகுதி எழுதப்பட்டோ, அல்லது திரும்பவும் எழுதப்பட்டோ என்று குறிப்பிட்ட ஹரிராவ்,

1976-இல் நாயக்க மன்னர்களின் காலத்தில் எழுதப்பட்டோ அல்லது திரும்பவும் எழுதப்பட்டோ என்று கூறுவதோடு நிற்காமல் கூடுதலாக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெள்ளத் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

கற்பனைக் கதைகளை துவேஷ உணர்வோடு

முஸ்லிம் மன்னர்களின் படையெடுப்பைப் பற்றிச் சொல்கிற முக்கியமான இந்தப் பகுதியைப் பற்றி, ஸ்ரீரங்கம் கோயில் வரலாற்றையே தனது வாழ்நாளில் ஆய்ந்து அறிந்து பலநூல்களைத் தந்திட்ட அறிஞர் ஹரிராவின் இந்த வரிகளை வாசிக்கிற போது **'கோயிலொழுகுவின் இந்தப் பகுதி, முஸ்லிம் ஆட்சியாளர்களின் படையெடுப்பு நிகழ்ந்த சில நூற்றாண்டுகளுக்குப் பின், நாயக்க மன்னர்களின் ஆட்சியின் போது வைணவச் செல்வாக்கு மேலோங்கி இருந்த நிலையில் துவேஷ உணர்வோடு, உண்மைக்கு மாறாக, சரித்திரத்தில் நடைபெறாத சம்பங்களை,**

கற்பனைக் கதைகளைக் கலந்து வரலாற்றுச் செய்திகளோடு எழுதி வைத்து விட்டனர் என்ற உண்மை தெளிவாகும்.

மு. அருணாசலம்

11-ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு நூலில் மு. அருணாசலம் (1971) பக்கங்கள் 353, 354 இல் கூறுகிறார். "பிற்காலத்தில் வந்து சமய வரலாறு எழுதுபவர்கள் தங்கள் மதாபிமானம் பற்றி, பண்டைய வரலாறுகளை எழுதும் காலத்து, சமய நிந்தையை கருத்தாக எழுதுகிறார்கள். 15-ஆம் நூற்றாண்டு இறுதியில் இராமானுசர் வரலாறு எழுதிய பிள்ளை லோகம் ஜீயர் சைவ சமயத்தை இவ்வாறு எங்கும் நிந்தித்தே எழுதியுள்ளர்" என்று சான்று பகர்ந்துள்ளார்.

மிகைப்படுத்தலை விட்டுவிட

பேராசிரியர் மு. அருணாசலம் தமிழ் இலக்கியம் குறித்த தனது ஆங்கில நூலில்,

An introduction to the History of Tamil Literature (with a foreword by Dr. K.R. Srinivas Iyengar) *(1974) பக்கம் 214 இல் கூறியுள்ள செய்தி இதோ...*

"ஆழ்வார்களைப் பற்றி கூறியிருப்பவை வெறும் கதைகளாக இருந்தாலும், ஆசாரியர்களைப் பற்றிச் சொல்லி இருப்பது அநேகமாக வரலாற்று அடிப்படையில் இருப்பதால் அதனை ஒரு அதிகாரப்பூர்வமான நிகழ்ச்சிகளின் கால வரையறை என்று நம்பக்கூடியதாக இருக்கிறது. அந்தக் காலத்திற்கே உரிய முறையில் உள்ள மிகைப்படுத்தலையும், அற்புதங்களைப் பற்றி கூறுவதையும் விட்டுவிட வேண்டும்.

'... Omitting exaggerations and narrations of Miracles, which were a Characterstic of the times' *என்று அருமையாகக் கூறியுள்ளார்.*

கே.எஸ். ஸ்ரீநிவாஸ பிள்ளை

தஞ்சாவூர் கே.எஸ். ஸ்ரீநிவாஸ பிள்ளை 1922 இல் 1 ரூபாய் எட்டணா விலையில் வெளியிட்ட நூல் தமிழ் வரலாறு பிற்பாகம் முற்பகுதி 187 பக்கங்களைக் கொண்டது. அதில் பக்கம் 148 இல் அவர் கூறும் செய்தி இதோ,

'நமது நாட்டாரிற் பலர் முன்னமே உள்ள புத்தகங்களில் தங்களுக்குத் தோன்றியவாறு கூட்டுவதும், மாற்றுவதும் உண்டென்பதை நான் விளக்கிக் காட்ட வேண்டுவதில்லை. இடைச் செருகலை குலதர்மமாகக் கொண்டோர் பலர்."

சார்லஸ் தியோபிலஸ் வொல்ட் இரேனியஸ்

07-07-1820- இல் திருநெல்வேலிக்கு வந்த முதல் மிஷனெரி இரேனியஸ் தமது 44 வது வயதில் கி.பி.1834 இல் தமிழ் மொழி இலக்கணம் என்ற நூலை வெளியிட்டார். அந்த நூலில் ஒரு உதாரணவாக்கியம் பின் வருமாறு அமைந்திருக்கிறது. "பிராமணர்கள் பொய்க்கதைகளைக் கூறி ஜனங்களை ஏமாற்றுகிறார்கள்" என்பதே அந்த வாக்கியமாகும். (தொ. பரமசிவன், சமயங்களின் அரசியல், 2005, ப.56)

ஏ.வி.சுப்பிரமணிய அய்யர்

தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி (The Story of Tamil Research) *ஓர் விமரிசன நூல் பண்டைக்காலமும் இடைக்காலமும் என்ற தலைப்பில் 1959 இல் ஏ.வி. சுப்பிரமணிய அய்யர் வெளியிட்டார். அதன் மறுபதிப்பு 1971 அந்த நூலில் பக்கம் 168,170 இல் கூறுகிறார்.*

'மற்ற விஷயங்களைப் பற்றி, குருபரம்பரைகள் தரும் விவரங்கள் சில தவறுதலாய் இருப்பது வெளிப்படை. ஏனென்றால் ஆழ்வார்கள், ஆசாரியர்கள் ஆகியோரின் வாழ்க்கைகளைப் பற்றிக் காணப்பெறும் விவரங்களில் சில, கற்பனையுடனும் அப்ராக்ருத அமானுஷ்ய, அற்புதத் தன்மைகளுடன் கூறப்பெற்றிருப்பதால் அவைகளைச் சரித்திர உண்மைகளாகக் கொள்வதில் பல தடைகள் இருக்கின்றன.

தொடர்ந்து ஏ.வி. சுப்பிரமணிய அய்யர் அதே நூலில் பக்கம் 173-இல் கூறுகிறார்.

குருபரம்பராபிரபாவ நூல்கள் நம்பத்தகுந்த சரித்திரங்களாகக் கருதுவதற்கில்லை. இவைகளில் அநேக விவரங்களும் சம்பவங்களும் புராண ரீதியில் கூறப் பெற்றிருக்கின்றன. அத்துடன் உண்மைச் செய்திகளும் கலந்திருக்கின்றன. இவ்வாறு கலப்பற்ற சரித்திரத் தன்மை இல்லாததாயும் புராணத் தன்மை பெற்றதாயும் இருக்கும் குருபரம்பரை நூல்களில் காணப்பெறும் விவரங்களிலிருந்துதான் (நாதமுனிகளின் வாழ்க்கை வரலாற்றை) நாம் தெரிந்துகொள்ள முயல வேண்டும்."

வைணவ வரலாற்றை விவரிக்கிற நூல்களின் வரலாற்று நம்பகத்தன்மைகளுக்கான சான்றுகளை இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

நம்ப முடியாத மக்கள் தொகை

வியாசபாரதத்தில் ஆதிபருவம் முதல் சுவர்க்கரோ கணிக

பருவம் வரை 18 பருவங்கள். 16-வது பருவம் மவுசல பருவம். அதில் அத்தியாயம் 7 பக்கம் 22 இல் "வாஸீதேவரான கிருஷ்ணருடைய பதினாறாயிரம் மனைவிகளும் பர்த்தாக்கள் இழந்தவர்களுடைய ஸ்தீரிகள் பல்லாயிரக்கணக்காகவும் பல லக்ஷக் கணக்காகவும், பத்து கோடிக்கணக்கிலும் வெளியே புறப்பட்டனர். யாதவர்களும் பலராமன், கிருஷ்ணன் முதலியோரும் இறந்து போனபின் துவாரகையில் உள்ள யாதவ வீரர்களின் மனைவிகளையும் கிருஷ்ணனின் மனைவிகளையும் அழைத்துக் கொண்டு அர்சுனன் அஸ்தினாபுரம் புறப்பட்ட போது புறப்பட்டவர்கள்தான் இவர்கள். துவாரகை நகரில் மட்டும் கிருஷ்ணன் மனைவியர் 16 ஆயிரம், யாதவர் மனைவியர் 10 கோடி, யாதவர்கள் 5 லட்சம் ஆக மொத்தம் 10 கோடியே 5 லட்சத்து 16 ஆயிரம் பேர்கள்.

மணலூர் வீரவல்லி இராமானுஜாசாரியார்

1926-இல் 3 ரூபாய் 50 பைசா விலையில் சென்னை The Tata Press இல் அச்சிடப்பட்டு மணலூர் வீரவல்லி இராமானுஜாசாரியர் பதிப்பித்த ஸ்ரீ மஹாபாரதம் ஆஸ்வமேதிக, ஆஸ்ரமவாஸிக, மவ்சலமஹாப்பிரஸ்தானிக, ஸ்வர்க்காரோகண பர்வங்கள், நூலில் தான் இந்தக் குறிப்பு வருகிறது.

உ.வே. குமாரமங்கலம் நரசிம்மாச்சாரி

கும்பகோணம் டவுண் ஹைஸ் கூல் ரிடயர்டு பிரதம ஸம்ஸ்கிருது பண்டிதர் பிரம்ம ஸ்ரீ ஆர் சிவராம சாஸ்திரிகள் ஸ்ரீ உ.வே. குமாரமங்கலம் நரசிம்மாச்சாரி ஆகியோர் இதனை மொழிபெயர்த்து வெளியிட்டவர்கள்.

ஸ்ரீ. உ.வே. அபிநவபட்ட பாணர் ஆர்.வி. கிருஷ்ணமாசாரியார், கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் மஹாவித்வான் ஸ்ரீ. உ.வே. அபிநவ பட்டபாணர் ஆர்.வி. கிருஷ்ணமாசாரியார் இதற்கு ஒப்பீடு குறிப்புகள் உதவியவர் ஆவார்.

பாரதஸிம்மம் கா.பே.ராமசந்திராசாரி

கும்பகோணம் மத்வசாஸ்திர ஸம்பூர்ணர் பாரதஸிம்மம் கா.பே. ராமசந்திரசாரி இதற்கு பொருள் விளக்கம் தந்தவர். இதை விரிவாகத் தந்த பேராசிரியர் ந. வெற்றியழகன், புளுகுவதற்கு உச்ச வரம்பே இல்லையா? என்று கேட்பார் (மகாபாரத ஆராய்ச்சி, சென்னை, 2005, ப.529)

மஹாபாரதத்தில் துவாரகையின் மக்கள் தொகையைக் குறிப்பிடுவதைப்போலத்தான் 1311 அல்லது 1323 களில் ஸ்ரீரங்கம் மக்கள் தொகையையும் குறிப்பிடுகிறார்கள். இந்நூலின்

துவக்கத்தில் குறிப்பிட்டதைப் போல, 1878 இல் லீவிஸ் மூர் தந்த திருச்சி மாவட்ட வரலாற்று நூலில் அப்போதைய ஸ்ரீரங்கம் மக்கள் தொகையே 11271 தான். ஆனால் 1323-களில் முஸ்லிம் படையெடுப்பின் போது 12000 பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்று எழுதி வைத்து அதனை இன்றளவும் சொல்லி வருகிறார்கள்.

12000

முன்னரே 12000 என்பது வைணவத்தில் ஒரு குறியீடு போலவேத் தோன்றுகிறது என்று பல சான்றுகளைக் காட்டினோம்; வராஹித் தந்திர கிரந்தத்தில் பிரபஞ்ச தந்திரம் 12300 சுலோகங்கள்; ஆதித்தமாலை 12000 சுலோகங்கள்; தேவிதந்திரம் 12000 சுலோகங்கள்; அரிகோரி இரண்டாவது (12000 சுலோகங்கள், (மத விருஷம், 1911, பக்240-241)

12000 தூயமுனி

ஸ்ரீரங்க நாராயண ஜீயர், ஈச்சம்பாடி ஜீயர், கோவிந்தஜீயர், சட்டைப்பள்ளி ஜீயர், திருமழிசை ஜீயர், திருவெள்ளரை ஜீயர், திருப்புட் குழி ஜீயர், ஆட்கொண்ட வல்லி ஜீயர், திருமாலிருஞ்சோலை ஜீயர் முதலான ஜீயர்களும், 700 நம்பி குருந்தேவ பரமேகாந்திகளும், 12000 தூய முனி முதலான கைங்கரியபரர்களும். (முற்சொன்ன நூல், ப286)

பன்னீராயிரம் திருப்பணியாரங்கள்

திருவரங்கம் ஸ்ரீவைஷ்ணவர் மகாநாடு 01-01-1977 மலர் பக்கம் 21-இல் 'திருமஞ்சனங் கண்டருளின பின் பன்னீராயிரம் திருப்பணியாரங்கள் அமுது செய்விக்கப்படும். பெருமாள் ஒரு வருஷத்தில் அமுது செய்த பணியாரங்களில் ஏற்படும் குறைவுகளுக்கு ஈடுபடுத்திச் சரிக்கட்ட **இந்த பன்னீராயிரம் திருப்பணியாரமும் நிவேதனம் செய்யப்படுகின்றது'** *எனவுள்ளது. (பிமா. சோமசுந்தரனார் சிவபிரானின் முழு முதன்மை, 1985, ப.136)*

இவ்வாறு 12000 என்ற குறியீடு பற்றித் தொடர்ந்து சொல்லிக் கொண்டே செல்லலாம்.

பெரிது – பெரிது

திருவரங்கம் கோயிலுக்கு பெரிய கோயில், பெருமாளுக்கு பெரிய பெருமாள் (நஞ்சீயர், உரையிலேயே இம் மரபு துவங்குகிறது) (பூமா வேங்கட கிருஷ்ணன் தாயாருக்கு பெரிய பிராட்டியார், ஊருக்கு பேரரங்கம் தனிகைக்கு பெரிய அவசரம், வாத்யத்திற்கு பெரிய மேளம், பட்சணங்களுக்கு பெரிய திருப்பணியாரங்கள் இப்படி எல்லாம் பெரியதாக ஏற்றிச்

சொல்வது இந்த ஒரு திவ்ய தேசத்தில்தான். (ஜெ.விஜயலஷிமி அரங்கன் மகிமையும் ஆழ்வார்கள் பெருமையும் 2001, பக்கம் 8)

ஆ. எதிராஜன்

இங்கிருந்த ஜீயரும் பெரிய ஜீயர், ஆச்சான் பிள்ளையோ பெரிய வாச்சான் பிள்ளை, ஆச்சார்யா நம்பிகளின் திருநாமமோ பெரிய நம்பி, அரங்கனின் மாமனார் ஸ்தானம் வகிக்கும் ஆழ்வாரோ பெரிய ஆழ்வார், ஒடும் நதியோ காவிரி கொள்ளிடம் பெரிய நதி அம்மம்மா இங்கு எல்லாமே பெரியவைகள் என்பர் வைணவச் சுடராழி ஆ. எதிராஜன். (108 வைணவ திவ்ய தேச ஸ்தல வரலாறு 1997, பக்.38) எதையும் பெரிதாகவே சொல்வது ஸ்ரீரங்கத்தில் வழக்கமான ஒன்றாகும்.

பார்த்த சாரதி அய்யங்கார்

திருவரங்கம் பெரிய கோவில் பத்திராதிபர், பார்த்தசாரதி அய்யங்கார், ஸ்ரீவாணி விலாஸ் பிரஸ் ஸ்ரீரங்கத்தில், 09-02-1934 இல் அச்சிட்ட நோட்டீசில் கூறுகிறார்.

வராதேகாந்தி! ஓடிப்போ காந்தி! பேசாதே காந்தி!

முழு நோட்டீஸ் 17-09-1948 விடுதலை இதழில் பிரசுரமாகியுள்ளது விரிவஞ்சி ஒரு சில வரிகள் மட்டும். **“ராஜத் துரோஹியாகவே வாழ்நாளை வீண்படுத்திய பழக்கத்தினால் தர்மத்தையறியாமல் தெய்வ துரோஹியாய்த் தலைப்பட்ட காந்தீ ஓடிப்போ”**

அண்ணல் காந்தியை அர்ச்சித்து 20-ஆம் நூற்றாண்டில் துண்டு நோட்டீஸ் அடித்தவர்கள், 14-ஆம் நூற்றாண்டில் வந்த முஸ்லிம் ஆட்சியாளர்கள் பற்றி என்னவெல்லாம் எழுதியிருப்பார்கள்? எழுத முயற்சிப்பார்கள்? சுஜாதா அவர்களே உங்களைத் தொடர்ந்து கவனித்து வருபவன் நான்.

ஸ்ரீரங்கம் எஸ். ஆர், குழப்பம்!

குமுதத்தில் கதைகள் எழுதும் போது மனைவி பெயரைத் தரித்து எழுதினீர்கள். ‘கணையாழி’யில் ஸ்ரீரங்கம் எஸ். ஆர். என்று எழுதினீர்கள். ஒரு இதழில் எழுத்தாளர் சுஜாதாவை தீண்டி, சுஜாதாவே வேடிக்கை பார்த்தபோது, ஸ்ரீரங்கம் எஸ். ஆரைக் கோபித்து சுஜாதாவின் விசிறிகள், கடிதங்கள் எழுதினார்கள். சுஜாதாவும் ஸ்ரீரங்கம் எஸ். ஆரும் ஒருவரே என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. **இப்படி வாசகர்களைக் குழப்பிய அசகாய சூரர் நீங்கள்.**

எப்போதும் பெண் – குழப்பம்!!

மங்கையர் மலர் பத்திரிகையில் 1982 இல் எப்போதும் பெண் என்ற தொடர் கதையை எழுதியவர் சுஜாதா. கதையின் நடுவில் சிலமாதங்கள் கழித்து கதையில் வரும் நமச்சிவாயம் என்ற பாத்திரத்தின் பெயரை சதாசிவம் என்று மாற்றி விட்டீர்கள். சுஜாதாவும் மறந்து விட்டார். மங்கையர் மலர் ஆசிரியரும் அப்போது அதனை கவனிக்கவில்லை. 1984 இல் அந்த நாவல் அந்தக் குழப்பத்துடனே வெளிவந்தது. டிசம்பர் 2002 இல் மறுதிப்பு வந்த போதுதான் உங்களின் குழப்பத்தை, மேதாவிலாசத்தை உலகம் உணர்ந்தது.

வஸந்த்! வஸந்த்

1981 இல் சுஜாதா வெளியிட்ட நாவல் வஸந்த்! வஸந்த்! அந்த நூலில் அவர் எழுதுவார்.

“பரவாயில்லையே, ஒருவக்கீலுக்குச் சரித்திரத்திலே ஈடுபாடா!”

“ரெண்டிலேயும் நிறையச் சரடு விடலாம் இல்லையா?”

இந்த நாவலுக்கு அ. ராஜமோகன் ஐ.பி.எஸ்., டி.ஐ.ஜி. ஆப் போலீஸ் எழுதிய அணிந்துரையில், **‘சரித்திரத்திலும், சட்டத்திலும் சரடு விடலாம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்களா என்பது சந்தேகமே. சுஜாதா குறிப்பிடும் 54, 55, 57, 66, 401 செக்ஷன்கள் பழைய சி.ஆர்.பி.சி.யில் இருக்கலாம்.** *1973 க்குப் பின்பு திருத்தப்பட்ட சட்டத்தில் செக்ஷன்கள் வேறு. கதை 1980 இல் நடைபெறுவதால் இப்படிப் பழைய சட்டப் புத்தகத்தைப் படித்த கணேஷ் கண்டனத்துரியவரே! என்று உங்களின் மேதாவிலாசத்தை உலகறியச் செய்தார்.*

விரும்பிச் சொன்ன பொய்கள்

1987 இல் குங்குமச் சிமிழுக்காக சுஜாதா எழுதிய கதை. ‘விரும்பிச் சொன்ன பொய்கள்’ 2004 இல் அது மறுபதிப்பு கண்டது. சுஜாதாவின் கதைத் தலைப்பு’ விரும்பிச் சொன்ன பொய்கள்’ மிக நன்றாக இருக்கிறது.

ஸ்ரீரங்கத்துக் கதைகள்

1983-இல் சாவி இதழில் ஸ்ரீரங்கத்துத் தேவதைகள் என்று ஏழு கதைகளையும், 2003-இல் ஆனந்த விகடனில் பத்துக் கதைகளையும், இடைப்பட்ட காலத்தில் மற்ற பத்திரிக்கைகளிலும் எழுதிய 17 கதைகளையும் சேர்த்து 34 கதைகள் அடங்கிய சுஜாதாவின் ஸ்ரீரங்கத்துக் கதைகள் டிசம்பர் 2003இல் வெளியிட்டவர் உயிர்மை பதிப்பகம் ஹமீது (கவிஞர் மனுஷ்ய புத்திரன்) அவர்கள் திருச்சி

சின்னக் கடைவீதி மூலையில் இந்த கரீம் பாய் கடையில் பழைய புத்தகங்கள் வாங்கியதையெல்லாம் சுஜாதா அதில் எழுதியிருப்பார். அந்தக் கதைகளின் முடிவில் ஸ்ரீரங்கத்துத் தேவதைகள் கற்பனையா? நிஜமா? என்ற 12-01-2003 ஆனந்த விகடனில் வந்த கட்டுரையைக் கொண்டு முடித்திருப்பீர்கள்.

சற்றுப் பொய்யாகி விடுகிறது

"அதே போல் டெலிபோன் டைரக்டரி, ரயில்வே டைம் டேபிள் தவிர, முழுவதும் உண்மையும் சாத்தியமில்லை. உண்மை சொல்லும் போதே சற்றுப் பொய்யாகிவிடுகிறது என்பது என் அனுபவம். *ஒரு பள்ளியைப் பற்றிய ஒரு வரிக்காக, விகடன் ஆசிரியரே மன்னிப்புக் கேட்கும் படியான சூழ்நிலை ஏற்பட்டது.*

இது சுஜாதா அந்த நூலின் இறுதியில் தந்துள்ள செய்தி. அதே வரிகளே மாத்திரம் இங்கு நினைவூட்டிடக் கடமைப்பட்டுள்ளேன்.

சரித்திரத்தில் கற்பனையைக் கலக்கவோ
சரடு விடவோ முயலாதீர்கள்!
வரலாற்றில் விஷமங்களை
விஷவித்துக்களை ஊன்றாதீர்கள்!
மத நல்லிணக்கம் போற்றிடும் நாட்டில்
மத மாச்சரியங்களை ஏற்படுத்திடாதீர்கள்!

துஆ செய்ய வேண்டுகிறோம்

கடையநல்லூர் ஹாஜி

S.P.முஹைதீன் சாஹிப் (மர்ஹூம்)

மறுஉலக நல்வாழ்விற்காக துஆ
செய்ய வேண்டுகிறோம்

Dr.S.M.அசன் இப்ராகிம்,M.B.B.S.,D.A.C.,
மறுமலர்ச்சி தி.மு.கழக நிர்வாகக்குழு உறுப்பினர்
Dr.S.M.A.ஷெரிபுன்னிஷா,M.B.B.S.,
ராஜா கிளினிக், 37,அகஸ்தியர் கோவில் தெரு, புளியங்குடி
04636 - 233786